2963

T.N.L.A Debates

Official Report

Vol. 35 No 1

2th March 1887

D 1
V211,31 N87
N87.35.1
126508

வெளியீடு 14-9-1987 Issued 14-9-1987

2963

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை மார்ச் 26, 1987—தொகுதி 35 எண் 1

Thursday the 26th Marc 1987 Volume 35 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

D
Y211,31 N87
N87.35.1
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136508
சென்னை-600 008.



[திரு. கு. தமிழரசன்]

வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கேயுள்ள யூனியனில் இருக்கக்கூடிய சுகாதார ஆஸ்பத்திரிகள் அனைத்திலும் பல இடங்களில் டாக்டர் இல்லாமலும், மருந்துகள் இல்லாமலும் உள்ள நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நிதியாண்டில் அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் திருமுடையாவட்டம் என்ற ஊரில் ஓரிடத்தில் பெட்ரோல் ஊற்று காண்பிக்கப்பட்டது. அதன் அடியிலிருந்து பெற்றோல் வந்து கொண்டிருக்கிறது. அங்கே நானே நேரிடையாகப் போய்ப் பார்த்தேன். அதனுடைய ஆவியில் தீக்குச்சியைப் பற்ற வைத்தால் எரிகிறது. இதை மாண்புமிகு தொழில் அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். ஆகவே மாநில அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி இந்தத் திட்டத்தை பரிசோதனைக்கு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை விரைவுபடுத்தி பெட்ரோல் ஊற்றாலையை நிறுவ ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த நிதி நிலை அறிக்கையின் மீது இந்திய குடியரசு கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக மத்தியதர, ஏழை தொழிலாளிகள் மீது அதிக வரி விதிக்காத பட்ஜெட் என்பதால் நான் இந்த பட்ஜெட்டை மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரியலூர் இரயில் விபத்து பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில தீய சக்திகளால் அப்படிப்பட்ட கொடிய இரயில் விபத்து ஏற்பட்டிருக்கிறது. இது மிகவும் வருத்தத்திற்குரியது. யாராக இருந்தாலும் இதைக் கண்டித்தாக வேண்டும். இந்தத் தீய சக்திகளுக்கு சதித் திட்டம் வகுத்து தந்தவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. தமிழரசன்] [1987 மார்ச் 26

ஆண்டுக்கு 30 இலட்சம் வீடுகள் என்ற வகையிலே அரசு ஒரு மிகச் சிறந்த திட்டத்தை தெரிவித்திருக்கிறது. நான் தாழ்த்தப் பட்ட மக்களின் சார்பாக முதல்வர் அவர்களுக்கு மிகுந்த நன்றி யையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுடைய வீட்டுப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினை இன்றைக்கு பூதாகாரமான பிரச்சினையாக வளர்ந்திருக்கிறது. ஆதிதிராவிடர்கள் வீட்டுப் பிரச்சினைகள் சம்பந்தமாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்றன. எனவே ஆதி திராவிடர்கள் குடியிருப்புப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு தனிக் கோர்ட்டை அமைத்து அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-50)

அதுமாத்திரமல்லாமல் நகர்ப்புறங்களிலே வசிக்கின்ற தாழ்த் தப்பட்ட அரசு அலுவலர்கள் அங்கே போய் வீடு கேட்டால், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னால், வீடு தராத நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களில் கூட வீட்டு வசதித் துறையினர் கட்டும் வீடுகளில் 20 விழுக்காடு தாழ்த்தப்பட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கினால் ஓரளவுக்கு நன்றாக இருக்குமென்று யோசனை கூற விரும்பு கிறேன்.

அடுத்து, காலனி வழங்கும் திட்டத்தை இந்த அரசு அறிமுகப் படுத்தியிருக்கிறது. உண்மையிலேயே அதை மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், குடிசை களுக்கு ஒளி விளக்கு, இவற்றுக்கு மேலாக இன்றைக்கு காலணி தரும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியிருக்கும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கிராமப்புறங்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் செருப்புகூட போட முடியாத நிலைமையும், இதனால் பல இனக் கலவரங்கள் மூளுவதையும் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையிலே,



1987 மார்ச் 26] [திரு. கு. தமிழரசன்]

இந்தக் காலணி வழங்கும் திட்டத்தின்மூலம் அரசே அவர்களுக்குச் செருப்பு தந்து, நீங்கள் அணிந்து கொள்ளுங்கள் என்ற நிலைமை வருவதால், கிராமப்புறங்களில் ஒரு சமூகப் புரட்சியை நாம் உரு வாக்குகிறோம் என்று சொல்லலாம்.

இந்த அரசு முக்கியமான துறைகளுக்கு பல்வேறு ஒதுக்கீடு களைத் தந்திருக்கிறது. ஆனால் ஆதி திராவிடர்களுக்கென்று தனி திட்டங்கள், ஒதுக்கீடுகள் இல்லாதது மிகவும் வருத்தத்திற் குரியது. மாண்புமிகு முதல்வரவர்கள் ஒருசில ஆண்டுகளுக்கு முன்னால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் அறிவிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஐந்தாண்டுத் திட்டம் இதுவரை அறிவிக்கப்படாமல் இருக் கிறது. மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்னதுபோல தாழ்த்தப் பட்ட மக்களுக்கு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களை பொருளாதார ரீதியில் வளரச் செய்ய, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தொழில் முதலீட்டுக் கழகம் ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போக்குவரத்துத் துறையிலே லாரி பெர்மிட்டுகள், பஸ் பெர்மிட்டுகள் வழங்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 18 விழுக்காட்டை மத்திய அரசும், பல மாநில அரசுகளும் தந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய அரசு அந்த முறை யைச் செயல்படுத்தாமல் இருக்கிறது. போக்குவரத்துத் துறை யிலே 18 விழுக்காடு ஒதுக்கீட்டை கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றியங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி தரு கின்ற ஒரு திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வழியாக வேளாண்மை மற்றும் கல்வி குறித்த நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் ஒளி பரப்பப்படும் என்று சொல்லுகிறார்கள். மேலும் தொலைக்காட்சி வழியாக தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சமூக விழிப்புணர்ச்சி

போன்ற கொள்கைகளை வகுக்கும் திட்டங்களையும், படங்களையும் எடுத்துக் காண்பித்தால், கிராமப் புறங்களில் மறுமலர்ச்சியை உருவாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் உயர் மட்டக் குழு இந்த மாநிலத்திலே கடந்த 6 ஆண்டுகளாக அமைக்கப்படாமல் இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் அப்படி உயர் மட்டக் குழு இருந்து, அரசுக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லி வருகிறது. இங்கே அமைச்சரவர்களால் உயர்மட்டக் குழு அறிவிக்கப்படும், அமைக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, இதுவரை அது அறிவிக்கப்படாமல் இருக்கிறது. எனவே ஆதி திராவிடர் உயர் மட்டக் குழு அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு மாநிலங்களில் ஆதி திராவிடர் நலன்கள் குறித்த திட்டங்கள் ஒழுங்காகச் செயல்படுத்தப்படுகிறதா என்று அறிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு, சட்டமன்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு சட்டமன்ற ஆய்வுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட சட்டமன்ற ஆய்வுக் குழுக்கள் இருக்கின்றன. தமிழகத்தில் அப்படிப்பட்ட சட்டமன்ற ஆய்வுக் குழு இல்லை. அப்படிப்பட்ட ஆய்வுக் குழுவை நம்முடைய மாநில அரசு அமைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 98-வது பிறந்த நாள் வருகிற ஏப்ரல் 14 ஆம் தேதி வருகிறது. இந்தப் பிறந்த நாளை மிகவும் சீரும், சிறப்புமாகக் கொண்டாட மத்திய அரசு நூற்றாண்டு விழாக் குழுவை மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. மக்வானா அவர்கள் தலைமையில் அமைத்துள்ளது. இங்கே கூட நூற்றாண்டு விழாக் குழுவை அமைச்சர் ஒருவர் தலைமையிலே அமைத்து, பேரறிஞர் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து, அம்பேத்கார் பெயரிலே ஒரு மாவட்டத்தை





அமைய வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே வற்புறுத்தி வருகிறோம். இந்தியாவில் இருக்கிற 20 கோடி ஒடுக்கப்பட்டிருக்கிற மக்களால் அவர் ரட்சகராக வணங்கப்படுகிறார். தமிழ் நாட்டில் அவர் பெயரிலே மாவட்டத்தை அமைத்து, இங்கேயுள்ள 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளை கவுரவப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற ஏப்ரல் 14-ம் நாள் அவருடைய 98-வது பிறந்த நாள் வருகிறது. அந்த நாளில், அவர் பெயரில் ஒரு மாவட்டத்தை புரட்சித் தலைவரவர்கள் அறிவித்தால், தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுந்த நன்றி உணர்வோடு இருப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அது மட்டுமல்லாமல், நான் வேறு ஒன்றையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். 1½ ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல், நகராட்சித் தேர்தல் ஆகியவற்றை நம்முடைய அரசு நடத்தியது. இட ஒதுக்கீடு முறையில் நடத்த வேண்டும் என்று நாங்களும் பல்வேறு பிரதிநிதிகளும் வலியுறுத்தினோம். சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக, எதிர்க் கட்சிகள் கேட்டதன் காரணமாக, இட ஒதுக்கீடு இல்லாமலேயே தேர்தலை நடத்தி இருக்கின்றார்கள். சமீபத்திலே பத்திரிகையிலே படித்திருக்கலாம். ஆந்திர மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி இருக்கின்றார்கள். இட ஒதுக்கீடு தந்து தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். கர்நாடகாவிலும் நடத்தியிருக்கின்றார்கள். ஆனால் தமிழகத்திலே மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இல்லாமலேயே இன்றைக்கு தேர்தல் நடந்திருக்கிறது. ஓராண்டு காலமாக உள்ளாட்சி அமைப்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. நான் இங்கே ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தல்கள் இட ஒதுக்கீடு இல்லாமல் நிகழ்ந்தது என்பது மிகுந்த வருத்தத்திற்குரியதாகும். எனவே இட ஒதுக்கீடு இல்லாமல் நடந்த தேர்தல்களை, அதனாலே வந்திருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளை, பொறுப்பாளர்களை இந்த அரசு ரத்து செய்து உள்ளாட்சி அமைப்புகளை

[திரு. கு. தமிழரசன்] [1987 மார்ச் 26

கிலைத்து மீண்டும் இட ஒதுக்கீடு வைத்து தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். 1½ கோடி மக்களின் சார்பாக இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம், நான் சார்ந்திருக்கின்ற மாவட்டம். அது மிகப் பெரிய மாவட்டம். இன்றைக்குக்கூட அங்கு தண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. எனவே வட ஆற்காடு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். 21 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகம்கூட இல்லாமல் இருப்பது ஏமாற்றத்தை அளிப்பதாக இருக்கின்றது. வேலூரைத் தலைநகராகக் கொண்டு, ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்து அந்த பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கார் பல்கலைக் கழகம் என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பேரணாம்பட்டு தொகுதி. அது ஆந்திர மாநில கர்நாடக மாநில எல்லைகளை ஒட்டிய பகுதியாக இருக்கின்றது. மலைப் பகுதிகள், காட்டுப்பகுதிகள் உள்ள பகுதி. அங்கே ஒரு பெரிய தொழிற்சாலை இல்லாமல் இருக்கின்றது. அது மிகுந்த ஏமாற்றமாக இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியிலே ஒரு பெரிய தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு திட்டமிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே நிறைய தனியார் டேனரிஸ் இருப்பதால் அங்கே இருக்கின்ற குடி-நீர்கெட்டுப்போய் எல்லாம் உப்பு நீராக மாறியிருக்கிறது. 60 கிலோ மீட்டர் அளவுக்கு யாரும் நல்ல தண்ணீர் அருந்த முடியாமல் இருக்கிறார்கள். அங்கே நீர் உப்பு தண்ணீராக மாறியிருக்கிறது. எனவே அங்கே இருக்கின்ற கிராம மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த அரசு சில செயல் திட்டங்களை வகுத்து அந்த மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 26]

80 கிலோ மீட்டர் நீளம் உள்ள ஒரு தொகுதியிலே தீயணைப்பு நிலையம் கூட இல்லை. நான் பல சந்தர்ப்பங்களிலே வலியுறுத்திக்கூட சொல்லியிருக்கிறேன். தீயணைப்பு நிலையம் இல்லாத நிலையிலே, கடந்த 2 நாட்களுக்கு முன்னாலே ஒரு கிராமத்தில், பெரியவணிகம் என்ற கிராமத்திலே ஒரு பெரிய தீ விபத்து நிகழ்ந்து 75 குடிசைகள் சாம்பலாகி அங்கே இருக்கிற வீட்டுப் பொருள்கள் எல்லாம் சாம்பலாகி இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தை வைப்பதோடு, அங்கே பொருள்கள், குடிசைகள் எரிந்து போய் இருக்கின்ற குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலே அரசு மீண்டும் தாட்கோ மூலமாகவோ அல்லது தனி திட்டங்கள் மூலமாகவோ அந்த 75 குடும்பங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தீக்குச்சி தயாரிப்பவர்கள் சிறிய குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். குடியாத்தம் பேரணாம்பட்டு போன்ற பகுதிகளில் இருப்பவர்களில் பலர் தீக்குச்சி தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். 500-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அரசு அந்த குடிசைத் தொழிலுக்கு வரியை குறைத்திருக்கின்றது. அந்தத் தீக்குச்சி தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் சார்பாக அதனை நான் உண்மையாகவே மகிழ்ச்சியோடு வரவேற்று என் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்காக ஒரு சிறப்பு, தனி ஒதுக்கீட்டை இந்த சந்தர்ப்பத்திலே இல்லாவிட்டாலும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், துணை மானிய கோரிக்கையிலேயாவது ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட திட்டத்தை அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக் கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (27—3—1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.59 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஏதுமில்லை.

உள்ளடக்கம்.

(26—3—1987)

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் Personnel of the Government of Tamil Nadu ... iii—v

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் ... ix, xx

1. வினாக்கள்-விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் ... 1—38

2. தகவல் கோரல்—
(அ) ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஏற்பட்டுள்ள தீ விபத்து ... 39—41
(ஆ) பொது மருத்துவ மனையில் பெண் நோயாளி கற்பழிப்பு ... 41—43

3. அரசினர் தீர்மானம்—
விதி 55 (6)-ஐத் தளர்த்தல் ... 43

4. கவன ஈர்ப்பு—
(அ) பெரம்பலூர் பாண்டகப்பாடி கிராமத்தில் நில ஆக்கிரமிப்பு ... 43—46
(ஆ) திருமங்கலத்தில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதில் தாமதம் ... 46—49
(இ) சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை ... 49—50
(ஈ) கிருஷ்ணகிரி வட்டத்தில் யானைகளால் மக்களுக்கும் பயிர்களுக்கும் சேதம் ... 50—54
(உ) கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு உதவிகள் ... 54—58

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அறிவிப்புகள்— | |
| (அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88 | 59 |
| (ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987 | 63 |
| (இ) இறுதித் துணை நிதி அறிக்கை, 1986-87 | 64 |
| (ஈ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987 | 67 |
| 6. முன்பணம் மானியக் கோரிக்கைகள், 1987-88—வாக்கெடுப்பு. | 59—63 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987 | 63 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987 | 68 |
| 8. இறுதி துணை நிதி அறிக்கை, 1986-87—வாக்கெடுப்பு | 64—67 |
| 9. வரவு-செலவுத் திட்டம், 1987-88—பொது விவாதம் (தொடர்ச்சி)— | 68—142 |
| திரு. எஸ். இராசாராமன் | 68—73 |
| திரு. பூ. மு. நரசிம்மன் | 73—77 |
| திரு. அ. மலர்மன்னன் | 77—84 |
| திரு. எஸ். புருசோத்தமன் | 84—90 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 90—96 |
| திரு. ப. ந. இராமச்சந்திரன் | 96—102 |
| திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் | 102—106 |
| திரு. சோ. கலிதீர்த்தான் | 106—111 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 111—117 |
| திரு. ஜி. கே. பிரான்சிஸ் | 117—120 |
| திரு. கி. கிருஷ்ணமூர்த்தி | 120—128 |
| திரு. மு. சின்னக்குழந்தை | 128—132 |
| திரு. எஸ். என். இராமசாமி | 132—136 |
| திரு. கு. தமிழரசன் | 136—142 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 142 |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR—THIRU SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. The Chief Minister | Hon. Dr. M. G. Ramachandran. |
| 2. The Minister for Finance | Hon. Dr. V. R. Nedunchezhian. |
| 3. The Minister for Food | Hon. Thiru S. Ramachandran. |
| 4. The Minister for Industries and Agriculture | Hon. Thiru K. Rajaram. |
| 5. The Minister for Health | Hon. Thiru P. U. Shanmugam. |
| 6. The Minister for Education and Law | Hon. Thiru C. Ponnaiyan. |
| 7. The Minister for Transport | Hon. Thiru S. Muthusamy. |
| 8. The Minister for Housing and Handlooms | Hon. Thiru S. Thirunavukkarasu. |
| 9. The Minister for Tourism, Prohibition and Electricity | Hon. Thiru V. V. Swaminathan. |
| 10. The Minister for Noon Meal Social Welfare and Khadi | Hon. Thiru R. Soundararajan. |
| 11. The Minister for Commercial Taxes | Hon. Thiru T. Ramasamy. |
| 12. The Minister for Adi Dravidar Welfare | Hon. Thiru A. Arunachalam. |
| 13. The Minister for Public Works | Hon. Thiru K. K. S. S. R. Ramachandran. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### ஆளுநர்—திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். |
| 2. நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. உணவு அமைச்சர் | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4. தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 5. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 6. கல்வி மற்றும் சட்ட அமைச்சர் | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 7. போக்குவரத்துத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. க. முத்துசாமி. |
| 8. வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எல். திருநாவுக்கரசு. |
| 9. சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 10. மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 11. வணிக வரித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 13. பொதுப் பணித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
டாக்டர் கே. சமரசம்
திரு. கே. குப்புசாமி
திரு. செ. செம்மலை
திரு. டி. ஆர். வேங்கடரமணன்

### செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.



## பேரவையின் முக்கிய அலுவலர்கள்—(தொடர்ச்சி).

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | —கூடுதல் செயலாளர். |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | —இணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்சி. | —முதுநிலை குழு அலுவலர். |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | —துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்சி., பி.எல். | —துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | —துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ. | —குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ. | —சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | —சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. பி.ஏ. | —சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | —சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்சி., பி.எல். | —சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | —சார்புச் செயலாளர். |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | —சார்புச் செயலாளர். |

| | |
|---|---|
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | —சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | —சார்புச் செயலாளர். |
| ஜான் திரு. வ. சா., பி.ஏ. | —சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. பி.ஏ., பி.எல். | —சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | —சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | —பேரவைத் தலைவரின் தனி செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | —தலைமை நிருபர் (குழுக்கள்). |
| நம்பி ஐயங்கார், திரு. எல். | —தலைமை நிருபர் (பேரவை). |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்களின் பட்டியல் (அகாவரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர். |
|---|---|
| **அ.** | |
| 1. அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர். |
| 2. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி. |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி. |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர். |
| 5. அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர். |
| 6. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.). |
| 7. அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.). |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓமலூர். |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி. |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி. |
| **ஆ.** | |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | ஆண்டிமடம். |
| 13. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி. |
| 14. ஆறுமுகம், திரு. எச். வி. | பென்னாகரம். |
| 15. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஒட்டபிடாரம் (செ.வ.). |
| 16. ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | விருதுநகர். |
| 17. ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2. |
| 18. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி. |
| 19. ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர். |
|---|---|
| இ. | |
| 20. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி. |
| 21. இரத்தினம், திரு. எம்.வி. | பொள்ளாச்சி. |
| 22. இரத்தினவேலு, திரு. செ. | முசிறி. |
| 23. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.). |
| 24. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம். |
| 25. இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல். |
| 26. இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம். |
| 27. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர். |
| 28. இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ.வ.). |
| 29. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 30. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 31. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி. |
| 32. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி. |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர். |
| 34. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 35. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி. |
| 36. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர். |
|---|---|
| இ—தொடர்ச்சி. | |
| 37. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை. |
| 38. இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம். |
| 39. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம். |
| 40. இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம். |
| 41. இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம். |
| ஈ. | |
| 42. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| உ. | |
| 43. உச்சி, திரு. கே. | கூடலூர். |
| 44. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| எ. | |
| 45. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| க. | |
| 46. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம். |
| 47. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை. |
| 48. கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு. |
| 49. கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர். |
| 50. கல்லன், திரு. கே. | உதகமண்டலம். |
| 51. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம். |
| 52. காளிமுத்து, டாக்டர். கா. | மதுரை கிழக்கு. |
| 53. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| க—தொடர்ச்சி. | |
| 54. கிருஷ்ணசாமி, திரு. வி.இரா | அணைக்கட்டு. |
| 55. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம். |
| 56. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 57. குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம். |
| 58. குப்புசாமி, திரு. வே. | செய்யாறு. |
| 59. குமரகுருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம். |
| 60. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர். |
| 62. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.). |
| 63. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம். |
| 64. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி. |
| 65. கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி. |
| ச. | |
| 66. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.). |
| 67. சண்முகம், திரு. இரா. | திருத்தணி. |
| 68. சண்முகம், திரு. என். | சோளிங்கர். |
| 69. சண்முகம், திரு. ப. உ. | மேல்மலையனூர். |
| 70. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம். |
| 71. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான். |
| 72. சந்திரசேகர், திரு. மு. | முகையூர். |
| 73. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| ச—தொடர்ச்சி. | |
| 74. சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம். |
| 75. சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| 76. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.). |
| 77. சித்தன், திரு. என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 78. சித்தன், திரு. வி.பி. | வில்லிவாக்கம். |
| 79. சிவக்குமார், திரு. ஆர். | சமயநல்லூர் (செ.வ.). |
| 80. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.). |
| 81. சிவஞானம், திரு. ந. | திருவோணம். |
| 82. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 83. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம். |
| 84. சிவராஜ், திரு. சு. | ரிஷிவந்தியம். |
| 85. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி. |
| 86. சின்னசாமி, திரு. வே.கு. | பவானிசாகர். |
| 87. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 88. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம். |
| 89. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 90. சுப்பராயன், திரு. கே. | திருப்பூர். |
| 91. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ்.ஆர். | திருச்செந்தூர். |
| 92. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை. |
| 93. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 94. சுப்புராயர், திரு. சி. | கம்பம். |
| 95. சுவாமிநாதன், திரு. வி.வி. | புவனகிரி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 96. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர். |
| 97. செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிப்பாளையம். |
| 98. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை. |
| 99. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 100. செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.). |
| 101. செல்லப்பா, திரு. வி.கோ. | கடலூர். |
| 102. சேகர், திரு. கே.பி.கே. | பொன்னேரி (செ.வ.). |
| 103. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடானை. |
| 104. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி. |
| 105. சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 106. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர். |
| **ஞ.** | |
| 107. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி. |
| **ட.** | |
| 108. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| **த.** | |
| 109. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 110. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம். |
| 111. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி. |
| 112. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.). |
| 113. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 114. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.). |



| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 115. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.). |
| 116. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 117. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.). |
| 118. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 119. தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம். |
| 120. திருஞானம், திரு. பி.ஆர். | ஏற்காடு (ஆ.வா.). |
| 121. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 122. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை. |
| 123. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர். |
| 124. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு. |
| 125. துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம். |
| 126. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர். |
| 127. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு. |
| 128. துரைசாமி, திரு. சைதை சா. | சைதாப்பேட்டை. |
| 129. துரைராசு, திரு. எஸ்.பி. | காரைக்குடி. |
| 130. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 131. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல். |
| 132. தேவராஜ், திரு. வி.எம். | வேலூர். |
| **ந.** | |
| 133. நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 134. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 135. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு. |
| 136. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.). |

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ந—தொடர்ச்சி.** | |
| 137. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2. |
| 138. நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர். |
| 139. நாராயணன், திரு. ப.கோ. | பவானி. |
| 140. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர். |
| **ப.** | |
| 141. பஞ்சவர்ணம், திரு. வி.எஸ். | அருப்புக்கோட்டை. |
| 142. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 143. பரமசிவம், திரு. பா.ந. | பல்லடம். |
| 144. பழனி, திரு. த. | ஆற்காடு. |
| 145. பழனிச்சாமி, திரு. கா.செ. | காங்கேயம். |
| 146. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர். |
| 147. பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி. |
| 148. பாண்டுரங்கன், திரு. மு. | கலசப்பாக்கம். |
| 149. பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம். |
| 150. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | திருவொற்றியூர். |
| 151. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 152. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 153. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி. |
| 154. பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம். |
| 155. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம். |
| 157. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர், வி.பி. | வேடசந்தூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ப—தொடர்ச்சி.** | |
| 158. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம். |
| 159. பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.). |
| 160. பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை. (செ.வ.). |
| 161. பிரணயநாதன், திரு. அ. | கடலாடி. |
| 162. பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல். |
| 163. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர். |
| 164. புஷ்பராசு, திரு. த. | திருமயம். |
| 165. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.). |
| 166. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம். |
| 167. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர். |
| 168. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 169. பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு). |
| 170. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.). |
| 171. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை. |
| 172. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| **ம.** | |
| 173. மணவாளன், திரு. எஸ்.பி. | திருப்பத்தூர். |
| 174. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.). |
| 175. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 176. மனோகரன், திரு. கி. | புரசைவாக்கம். |
| 177. மனோகரன், திரு. கி.நா.கோ.அ. | திருநாவலூர். |
| 178. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான். |
| 179. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| **ம—தொடர்ச்சி.** | |
| 180. மாதையன், திரு. ப.பி. | அந்தியூர் (செ.வ.). |
| 181. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 182. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம். |
| 183. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 184. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை. |
| 185. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம். |
| 186. முசிறிப்புத்தன், திரு. பி. | குளித்தலை. |
| 187. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு. |
| 188. முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி. |
| 189. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 190. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 191. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி. |
| 192. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| **ய.** | |
| 193. யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| **ர.** | |
| 194. ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம். |
| 195. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 196. ரவீந்திரன், திரு. எ.எஸ். | திருவண்ணாமலை. |
| 197. ராமஜெயம், திரு. ம.நா. | வாணூர் (செ.வ.). |
| 198. ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 199. ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ர—தொடர்ச்சி.** | |
| 200. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி. |
| 201. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில். |
| **ல.** | |
| 202. லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ.வ.). |
| **வ.** | |
| 203. வடிவேல், திரு. கு. | கரூர். |
| 204. வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர். |
| 205. விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 206. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி. |
| 207. வீரானம்பலம், திரு. க.வெ. | மேலூர். |
| 208. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம். |
| 209. வீரப்பன், திரு. ஆர்.எம். | திருநெல்வேலி. |
| 210. வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு. |
| 211. வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர். |
| 212. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி. |
| 213. வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி. |
| 214. வெங்கடாசலம், திரு. டி.எம். | பரகூர். |
| 215. வேங்கடரமணன், திரு. டி.ஆர். | தென்காசி. |
| 216. வேணுகோபால், திரு. எஸ். | ராதாகிருஷ்ண நகர் |
| 217. வேணுகோபால், திரு. கே. வி. | தல்லி. |
| 218. வேலு, திரு. கூடலூர் இ.வி. | தண்டராம்பட்டு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ஜ.** | |
| **219.** ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு. |
| **220.** ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி. |
| **221.** ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி. |
| **222.** ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.). |
| **223.** ஜெயராமன், திரு. வே.இரா. | தேனி. |
| **ஹ.** | |
| **224.** ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| **225.** பிரான்சிஸ், திரு. ஓி.கே. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.**

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*1987 மார்ச் 26, வியாழக்கிழமை.*

**பங்குனி 12, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு—2018.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்*
*தான்கண் டனைத்திவ் வுலகு."*

இனிய சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை, உதவிக் காக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**உள்ளாட்சி மற்றும் நகராட்சி மன்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.**

*177—(*வினா எண் 1020) திரு. எம். சிவக்குமார்:* மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மற்றும் நகரியங்களிலும், பேரூராட்சிகளிலும் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1987 மார்ச் 26

**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற பொழுது வீடு கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறினார்கள். அது இந்த நடப்பு ஆண்டிலாவது மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய ஒரு திட்டம் நடைமுறையிலே உள்ளது. ஆண்டுதோறும் இந்த வீடு கட்டும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1 கோடி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் பணியாற்றுகிற துப்புரவுப் பணியாளர்களுக்குப் பிரத்தியேகமாக வீடு கட்டுகிற திட்டம் இல்லையென்றாலும்கூட, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகளில் அவர்களுக்கு முன்னுரிமை தந்து வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்தத் தேவை, Mass Housing Scheme 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தில் நிறைவு செய்யப்படும்.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்தெந்த நகரங்களில், கிராமங்களில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது; எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி விவரங்களை அளிக்கப் போனால் அது மிகப் பெரிய பட்டியலாக வரும். ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். 106 நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் உள்ள சுமார் 11,000 தொழிலாளர்களுக்கு இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று திட்டமிடப்பட்டு 9—4—1985 வரை, 3,796 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



1987 மார்ச் 26]

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களில் ஏற்கெனவே கட்டி குடியிருந்து வருகின்ற துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற பின்னாலே அதே வீட்டில் குடியிருக்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கென கட்டப்படுவதால் ஓய்வு பெற்ற பின் அனுமதிப்பதற்கு இடம் இருக்காது.

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி போன்ற பெரிய நகரங்களில் துப்புரவுத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் இப்போது 10, 15 ஆண்டுகளுக்குப் பின்னாலே, ஒருவித பராமரிப்புப் பணியும இல்லாமல் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. இது குறித்து அரசு கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படிக் கொண்டு வரப்பட்டிருந்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்திற்குத்தான் அரசு உதவி செய்ய முடியும். அதைப் பராமரிப்பது போன்ற பணிகளில் நகராட்சி ஈடுபடுவதே நல்லது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளிலே துப்புரவுப் பணியாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தும், மின் விளக்கு இல்லாமலும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகராட்சிகள் தான் பராமரிக்க வேண்டுமென்றார். நகராட்சிகள் நிதி ஆதாரம் இல்லையென்று சொல்கின்ற காரணத்தாலே, தனியாக மானியம் கொடுத்து—விருதுநகர் போன்ற நகரங்களிலே அதிகமான வீடுகள் இடிந்து போயிருக்கின்றன—அவற்றிற்கு ஒரு நிவாரணம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இல்லையென்றால் நிதியை நகராட்சிகள் திரட்டிக் கொள்ள வேண்டும்.

[1987 மார்ச் 26

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், பேரூராட்சிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க முழுமையும் மானியமாகவோ இலவசமாகவோ கட்டிக் கொடுக்கப் படுகிறதா அல்லது பாதி மானியத் தொகையில் கட்டிக் கொடுக்கப் படுகிறதா அல்லது நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் எத்தனை சதவீதம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் நாம் தரவேண்டும், அவர்கள் 50 சதவீதம் தரவேண்டும். நகராட்சிகளைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

## நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு நிதி ஒதுக்க சிறப்புத் திட்டம்.

178—(*வினா எண் 7998) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருமான வசதியில்லாமல், அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத நிலையில் உள்ள நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யும் சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் அமுல்படுத்த இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானம் இல்லாமல் சம்பளம் கொடுப்பதற்குக் கூட வசதியில்லாமல் இருக்கக்கூடிய நகராட்சிகள், பேரூராட்சிகள் இவைகளுக்கு நிரந்தரமாக வருவாய் வருகின்ற அளவுக்கு சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா?



1987 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிலை கருதி ஏற்கெனவே நமது அரசு 1982-83-லிருந்து தன்னிறைவுத் திட்டத்தை நகராட்சிகளில் நிறைவேற்றி வருகின்றது. அதேபோன்று ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், அது மத்திய அரசுத் திட்டம், ஐ.யு.டி.பி. என்கின்ற திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதைப் போலவே தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்கின்ற திட்டமும் அமலில் இருந்து வருகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானம் இல்லாமல் வசதி குறைந்திருக்கக்கூடிய நகராட்சிகள், பேரூராட்சிகள் இவற்றிற்கு என்.ஆர்.இ.பி. திட்டம், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாக அதிகமாக நிதி ஒதுக்கீடுகள் செய்கின்ற அளவுக்கு அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.ஜி.பி. ஆகிய திட்டங்கள் எல்லாம் கிராமப்புறத் திட்டங்கள். அவைகளை நகர்ப்புறங்களுக்கு அமல்படுத்த முடியாது. ஆகவே ஏற்கெனவே தெரிவித்த அத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டத்திற்கு ஏற்கெனவே 27.39 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 20.28 கோடிக்கான மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைமுறையில் உள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்ற வகையில் 6.3 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கிட்டத்தட்ட 48 கோடி ரூபாய் அளவுக்கு நாம் உதவிகளை வழங்கி வருகிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளின் வருமானம் அவைகளின் நிர்வாகச் செலவிற்கே சரியாகப் போய்விடுகிறது என்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அரசாங்கம்கூட மாநிலத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள பேரூராட்சிகளை

வெடுத்து ஆணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால சமீபத்தில் கொஞ்சம் வீட்டு வரியை உயர்த்தியதன அடிப்படையில் அந்தப் பயனைக்கூட அனுபவிக்க முடியாத சூழ்நிலையில் ஒரு லட்ச ரூபாயைத் தாண்டுகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே ஒரு லட்சம் ரூபாய் வருமானம் என்பதை 1½ லட்சம் அல்லது 2 லட்சம் என்று கூட்டுவதற்கு அரசு பரிசீலிக்குமா ? இல்லையென்றால் அந்த ஆணை வெளியிடப்பட்ட சமயத்தில் அன்றைய வருமானத்தின் அடிப்படையில் ஒரு லட்ச ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ள பேரூராட்சிகளையெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றி அரசு மீண்டும் ஆணை வெளியிடுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் கே. சமர்சம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வசதிகள் இல்லாமல் அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாமல் பேரூராட்சிகள் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தையும் வேறு சில திட்டங்களையும் பற்றிச் சொன்னார்கள். அவை சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவை. ஆனால் நிர்வாகச் செலவுக்குக் கூடப் பணம் இல்லை என்ற சூழ்நிலையில் அவை உள்ளன. எனவே நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த அரசு என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு எப்படி தன்னுடைய தேவைக்கேற்ப நிதிவாயில்களைத் திரட்டிக் கொள்கிறதோ அதேபோன்று சொத்து வரி போன்ற வரிகளை அதிகப்படுத்தியோ அல்லது கட்டிடங்களைக் கட்டி அதன் மூலமாக நிதியைப் பெற்றோ வருவாயைப் பெருக்கிக் கொள்வதுதான் முறையாக இருக்குமே தவிர மாநில அரசே எப்போதும் கொடுத்துக்கொண்டு வர வேண்டும் என்பது சரியாக இருக்காது.





**திரு. கே. முத்துவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளிலே மிகவும் குறைவான வருமானமுள்ளவைகளில் மின்விளக்குகள் கூட எரிவதில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. எடுத்துக்காட்டாக முதுகுளத்தூர் தொகுதியிலே அபிராமம் என்ற கிராமத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மின் விளக்குகளே எரியவில்லை. அதுபோன்ற பேரூராட்சிகளுக்கு விதிவிலக்கு அளித்து நிதி உதவி செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள், பேரூராட்சிகளுக்குத் தனியாக கார்ப்பரேஷன் அமைத்து வருமானமற்ற பேரூராட்சிகளும் நகராட்சிகளும் பயனடையும் முறையில் அதற்கான வழிவகைகளைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய யோசனை ஒன்று நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுக்கு வருமானம் மிகவும் குறைந்திருக்கிற சூழ்நிலையில், ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து நிதியுதவி கிடைக்காத சூழ்நிலையில், பேரூராட்சிகளுக்கு கேளிக்கை வரி வருமானத்தில் 30 சதவீதம் என்றும் ஒன்றியங்களுக்கு 30 சதவீதம் என்றும் இருப்பதை மாற்றி நகராட்சிகளுக்கு அதில் 60 சதவீதம் கொடுப்பதைப்போன்று அந்த வரி வருமானம் முழுவதையுமே பேரூராட்சிகளுக்கே வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற, வசதியற்ற நகராட்சிகளுக்கு ஐ.யு.டி.பி. என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசு சுமார் ரூ. 1 கோடி அளவில் மிகக் குறைந்த வட்டியில் நீண்ட காலத்

தவணை முறையில் 9 நகராட்சிகளுக்குக் கடன் வழங்கியிருக்கின்றது. அந்த 9 நகராட்சிகளில் ஒன்றாக சத்தியமங்கலம் நகராட்சியும் இருந்தது. ஆனால், ஏனோ தெரியவில்லை, கடைசி நேரத்திலே சத்தியமங்கலம் எடுக்கப்பட்டு வேறு ஒரு ஊர் புகுத்தப்பட்டது. திரும்பவும் சத்தியமங்கலத்திற்கு இடம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில், பேரூராட்சிகளில் நிதிநிலை சரியில்லாமல் எந்தவிதமான வேலையும் செய்ய முடியவில்லை. ஆகவே, ஆங்காங்கு இருக்கக்கூடிய பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களில் உள்ள கருவேல மரங்களை ஏலம் விட்டு முழுமையாக அந்தந்தப் பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் அந்த நிதியை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. *

அந்த ஒன்றியங்கள் தன்னிறைவு பெறவில்லை. ஆகவே, விடுபட்ட வேலைகளைச் சரியாகச் செய்வதற்கு, நிதி ஒதுக்கி வேலை செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: உலகத்திற்குத் தெரிந்த உண்மையைத் தான் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இப்படி எழுந்து பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) ஏன் இத்தனை பேர்கள் எழுந்து கொள்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் பேசிக்கொள்கிறேன், நீங்கள் ஏன் எழுந்து கொள்கிறீர்கள்? இப்படி எழுந்து பேசக்கூடாது, இது முறையே அல்ல.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. என். எஸ். வி. சித்தன்: அவர்கள் எழுந்ததால்தான் இவர்கள் எழுந்தார்கள்.

Mr. SPEAKER: Newton's Law of Nature cannot be applied here.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் கேள்வியிலே ஒரு வாக்கியம் தவறாக வந்தது. அதை தாங்கள் நீக்கிவிட்டால் அந்தக் கேள்வி சரியாக இருக்கும். தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி ஒரு கமெண்ட் கொடுத்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீக்குகிறேன். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லிவிட்டு போகக்கூடாது. விதியைப் படியுங்கள். ஏதாவது சார்ஜ் என்றால், எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு).

We have to defend the public and officials also. They are also Members of the public. ஒரு அதிகாரி மீதோ, அமைச்சர் மீதோ, உறுப்பினர் மீதோ குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் எழுதிக் கொடுங்கள். விதி இருக்கிறது அல்லவா? (குறுக்கீடு). கேள்வி நேரத்தில் இல்லை, வேறு வழி இருக்கிறது. என்னிடம் எழுதிக் கொடுங்கள். முதல் தடவை தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் எல்லாம் தயவுசெய்து அடுத்த தடவை விதியைப் படித்துவிட்டு பேசுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வகையிலேதான் தன்னிறைவுத் திட்டம் இந்த அரசால் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் நிதி ஆதாரங்களை வளர்ந்து வருகின்ற தேவைக்கேற்ப பெருக்கிக்கொள்ள வேண்டியது அவர்களது கடமை. அப்படிப் பெருக்கிக் கொள்ளும் முயற்சிக்கு அரசு துணையாக இருக்கும்.

திரு. செ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. திட்டங்களில் நகராட்சி, பேரூராட்சிகளுக்குத் திட்டங்கள் விரிவுபடுத்துவதில்லையென்று சொன்

னார்கள். ஆனால், ஏழைகளே, ஆதி திராவிட மக்களே நகராட்சி பேரூராட்சிகளில் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, கடன் வழங்கவும், வீடு கட்டவும், ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர். இ.பி. திட்டங்களை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இவை இந்திய அரசு வகுக்கும் திட்டங்கள்; கிராமப்புறங்களுக்கென வகுக்கப்படுகிற தனித் திட்டங்கள். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை பேரூராட்சிகளுக்கு நாம் பயன்படுத்தலாம்; நகராட்சிகளுக்குப் பயன்படுத்த முடியாது.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும், முனிசிபாலிட்டி எல்லைக்குள்ளும் தனியார்கள் சந்தைகள் இருக்கின்றன. அவற்றின் வருமானம் பேரூராட்சிகளுக்குச் செல்லாத நிலைமையில் பல இடங்களில் அவை நடைபெற்று வருகின்றன. ஆகவே பேரூராட்சிகளுக்கு வருமானம் வருகிற வகையில் ஏற்கெனவே இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனியார் சந்தைகளையும் பேரூராட்சிக்கு ஒப்படைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே அந்த வகையில் தனியார் சந்தைகளை பேரூராட்சிகளுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் அரசாங்கம் ஒப்படைக்கின்ற வகையில் அப்படிப்பட்ட வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே அப்படி சொல்லப்பட்டிருந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. இரா. சின்னராசு:** பேரவைத் தலைவரவர்களே, வருமானத்தில் நலிந்திருக்கிற நகராட்சிகளில் பெருமளவில் பேருந்து நிலையங்கள் இல்லாத நிலைமை இருக்கின்றது. அது போல் என்னுடைய தொகுதியில் கிருஷ்ணகிரி நகராட்சியில் பேருந்து நிலையம் இல்லை. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு அரசின் சார்பில் மானியம் ஒதுக்கி பேருந்து நிலையம் கட்டித் தருகிற திட்டம் அரசினிடத்தில் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் உண்டு. ஆனால் அவர் சொல்கிற நகராட்சிக்கு உண்டா இல்லையா என்பதைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போட்டால்தான் விவரங்களைத் தர இயலும்.

**தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்கள்.**

**179—(*வினா எண் 8015) திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் ஊழியர்களை கூட்டுறவு அங்காடிகளுக்கு மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுகையில் இவ்வூழியர்கள் விரும்பினால் அங்கு எடுத்துக் கொள்ளப்படுவர்.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வரும் நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் நடத்த வேண்டுமென அரசு வெளியிட்ட ஆணைகளை எதிர்த்து நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் உயர்நீதிமன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் பதிவு செய்தனர். உயர்நீதிமன்றம் அரசின் ஆணைகளுக்கு இடைக்கால தடை விதித்துள்ளது. உச்சநீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை ஒட்டி உயர்நீதிமன்றத்தினை அது விதித்துள்ள இடைக்கால தடையினை நீக்குமாறு அரசு கேட்டுள்ளது.

**திரு. ஆர். ரெங்கசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுடைய கடைகளை கோவாப்பரேடிவ் சொசைட்டிகளுக்கு மாற்றும்போது அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 26

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊழியர்கள் விரும்பினால் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் போகலாம்; இல்லை என்றால் இங்கேயே இருக்கலாம். இதுதான் அவர்களுடைய நிலைமை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் இயக்கப்படக்கூடிய அமுதம் அங்காடிகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றிவிட்டால் ஏற்கெனவே இருந்த அந்தந்த இடங்களில் அமுதம் அங்காடிகள் செயல்படுமா? அந்தந்த இடங்களிலிருந்து கூட்டுறவு சொசைட்டி இருக்கும் இடத்திற்கு சென்று விடும் என்று எண்ணுகின்ற நிலைமை பொதுமக்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து அவற்றை இயக்கச் செய்து மக்களுக்கு பொருட்கள் வினியோகம் செய்யப்படுமா? அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் 4,000-க்கு மேற்பட்டவர்கள் நிரந்தரம் இல்லாமல் அங்கே இருந்து வருகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளின் எண்ணிக்கையோ, இடங்களோ மாறாது. நிர்வாகம் மட்டும்தான் மாறுகிறது. தற்காலிகமாகப் பணியாற்றுகிற ஊழியர்கள் விரும்பி கூட்டுறவு நிறுவனங்களுக்குச் செல்வார்களானால் அங்கே அவர்களை நிரந்தரமாக ஆக்குவதற்கான வாய்ப்பு உண்டு.

திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இப்போது கடுமையாக வறட்சி நிலவுகிறது. தற்போது குடும்ப கார்டுகளுக்கு நியாயவிலைக் கடைகளின் மூலமாக ஒரு கார்டுக்கு 12 கிலோ என்ற வீதத்தில் அரிசி வினியோகிக்கப்படுகிறது. கடுமையான வறட்சி கிராமப்புறங்களில் நிலவுகிற இந்தச் சூழ்நிலையில் பெருத்த உணவுப் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. எனவே 12 கிலோ என்பதை 20 கிலோ அரிசியாக உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.



1987 மார்ச் 26]

(முற்பகல் 10-20)

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அத்தகைய முடிவினால் நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அவர்களுடைய அச்சம் என்ன? அவர்களுடைய பிரச்சினை என்ன என்பதைக் கண்டறிந்து சங்கப் பிரதிநிதிகளை நேரிலேயே அழைத்துப் பேசி, அவர்களுடைய குறைகளைத் தீர்த்து, அந்த முடிவை அமுலாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய யோசனை இல்லை.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகள், ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று என்ற நிலையில்தான் இருக்கிறது. மஜரா கிராமங்கள் 4, 5 மைல்களுக்கு அப்பால் இருந்தால் அங்கே கடைகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே நிலைமையை உணர்ந்து அந்தக் கிராம மக்களுக்கும் பொருள்களை வாங்க வசதியாக கடைகளை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் ஏதேனும் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை என்று இருந்தாலும், நெடுந்தொலைவில் ஒரு கிராமம் இருந்தாலும், அல்லது இயற்கை இடர்பாடுகள் அதாவது ஆறு, ஓடை, வாய்க்கால் போன்றவை இடையில் இருந்தால், அங்கே மேலும் கடைகளைத் துவக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. குறிப்பிட்டு எங்கேனும் உறுப்பினர்கள் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1987 மார்ச் 26

## தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலிச் சட்டம்.

180—(*வினா எண் 9036) திரு. கோ. வீரய்யன் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கீழத் தஞ்சை மாவட்டத்தைத் தவிர, மற்றப் பகுதிகளில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள காலமான மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டதென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சட்டத்தைத் திருத்தி அமைக்க ஒரு குழுவை அரசு நியமிக்குமா?

(இ) ஆம் எனில், அது எப்போது நியமிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் பிரிவு 3(b)-இன்படி, குறைந்த அளவு ஊதிய வீதங்களை மாற்றியமைக்க வேண்டிய இடைவெளி ஐந்து ஆண்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும். 5—4—1983 முதல் திருத்தி அமைக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை மேலும் மாற்றியமைப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்க குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 5 (1) (a) பிரிவின் கீழ் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ், அதனுடைய பரிசீலனைக் காலம் 5 ஆண்டுகளுக்கு என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இது வரையில் 3 ஆண்டுகள் என்றுதான் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே 5 ஆண்டுகள் என்பதை 3 ஆண்டுகளாக மாற்றி, இந்த ஆண்டிலேயே அதைப் பரிசீலிப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புவதோடு, இப்போது குறைந்த



1987 மார்ச் 26]

பட்ச ஊதியச் சட்டத்தின்படி கூலி கொடுப்பதில்லை. குறிப்பாக பெண்களுக்கு, சட்டப்படி இருக்கக்கூடிய ஊதியம் கொடுக்காமல், நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று கொடுக்கக்கூடிய அளவில் தான் நிலைமை இருக்கிறது. ஆகவே குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஊதியத்தைப் பெண்களுக்குக் கொடுப்பதற்கு உறுதியான ஒரு நிர்வாக ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, குறைந்த அளவு ஊதிய விகிதத்தை மாற்றி அமைக்கின்ற வகையில் ஒரு குழு அமைப்பதற்கான ஆலோசனை ஏற்கெனவே இருந்து வருகிறது. அதை விரைவுபடுத்தி அந்தக் குழுவை அமைத்து குறைந்த அளவு ஊதியத்தை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும். பெண்களுக்குக் கூலி குறைவாகத் தரப்படுகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றி எங்காவது குறிப்பிட்ட இடத்தில் குறைபாடு இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் நிவர்த்தி செய்ய முடியும். நாடு முழுவதும் நிர்வாக ஏற்பாடு இதற்காகச் செய்வது என்பது வீண் செலவை உண்டாக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் விவசாயக் கூலிகளுக்கு என்ன கூலி நிர்ணயம் செய்தாலும் நிலச் சுவான்தார்கள் கொடுப்பதில்லை. 1980-வது வருடம் வட ஆற்காடு மாவட்டத்தில் நிலச்சுவான்தார்கள் அரசாங்கம் நிர்ணயித்த கூலியை கொடுக்காத காரணத்தால் அங்கே நக்சலைட்டுகள் பெரும் போராட்டங்களையும் கலவரங்களையும் செய்தார்கள். ஆகவே அரசாங்கம் நிர்ணயிக்கின்ற கூலியை நிலச் சுவான்தார்கள் கொடுக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்காணிக்க பறக்கும் படை ஒன்றை நிறுவி நிர்வாகச் சீர்திருத்தத்தை ஒழுங்காகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பறக்கும் படையை அமைப்பதை விட, ஆங்காங்கே அமைப்பு ரீதியாக தொழிலாளர்கள் ஒற்றுமையோடு இருந்தால் அத்தகைய சலுகைகளைப் பெற முடியும். எங்காவது அப்படிக் குறைபாடுகள் நடக்கின்றது என்று சொன்னால் அங்கே அரசு நிச்சயமாகத் தொழிலாளர்கள் பக்கம் இருக்கும்.

### இலங்கை அகதிகளுக்கு முகாம்கள் அமைத்தல்.

181—(*வினா எண் 12457) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்காகத் தமிழகத்தில் எத்தனை இடங்களில் நிரந்தர, தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த அகதிகளுக்காக தமிழக அரசு செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

(இ) மத்திய அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) இலங்கை அகதிகள் 1983 ஜூலை முதல் வந்து கொண்டிருக்கிறார்கள். 1983-ல் அவர்களது வருகை அதிகரித்தபோது இரு நிரந்தர முகாம்களைத் தவிர 172 தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன; மண்டபத்தில் 1,200 புதிய வீடுகள் கட்டப்பட்டதன் விளைவாகவும், விளாங்குடியில் 792 புது வீடுகள் அகதிகளுக்காக வழங்கப்பட்டதன் விளைவாகவும் இவை தற்போது 4 நிரந்தர முகாம்களும் 65 தற்காலிக முகாம்களுமாக இயங்குகின்றன.

(ஆ) மற்றும் (இ): அகதிகளுக்காகச் செலவழிக்கப்பெறும் அனைத்துச் செலவுகளும் மைய அரசினால் ஏற்கப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டு முதல் 1986-87 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய இலங்கை அகதிகளின் நிவாரண உதவிகளாக ரூ. 631.91



இலட்சமும், கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 362 லட்சமுமாகக் கூடுதல் ரூ. 993.17 லட்சம் வரையில் செலவினம் செய்யப்பட்டு, 1985-86 ஆம் ஆண்டு முடிய மத்திய அரசினர் முழு மானியத் தொகை ரூ. 835.06 லட்சம் மைய அரசிடமிருந்து பெறப்பட்டு விட்டது. மீதமுள்ள தொகையைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, கலவரத்தின் காரணமாக இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்கிற அகதிகள் என்றாவது ஒரு நாள் இலங்கைக்குச் செல்ல வேண்டியவர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்வை அளிப்பதற்கும், அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதற்கும் இலங்கை அரசு இதுவரையில் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா? அப்படி முயற்சி எடுத்திருந்தால் இது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் ஏதாவது நடந்திருக்கிறதா? அண்மையில் நமது பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தபோது இலங்கை அகதிகள் சம்பந்தமாக பேசப்பட்டதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அப்படியானால் அதன் விவரம் என்ன என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற விவரங்களைத் தனியாகக் கேட்டால் அதுபற்றி முழு விவரத்தையும் அளிக்க முடியும். ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்ல முடியும். இருக்கிற அகதிகளைத் திரும்ப அழைப்பதற்கு ஏற்ற முறையில் இலங்கை அரசாங்கம் செயல்படவில்லை. தாங்களே அடித்துக் கொன்றது போதாது என்று இப்போது வெளிநாட்டுக் கூலிப் படைகளையும் வைத்துக்கொண்டு, சொந்த நாட்டிலே வாழ்கின்ற தமிழர்களைத் தாக்குவதுதான் இலங்கை அரசின் போக்கே தவிர அவர்களிடமிருந்து இரக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்திருக்கிற அகதிகள் தங்களுடைய சொத்துக்களையும், உடைமைகளையும் அங்கே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இலங்கை அரசின் போக்கைக் கண்டிக்கிற வகையில் அங்கே அவர்கள் விட்டுவிட்டு வந்திருக்கிற சொத்துக்களையும், உடைமை

களையும் பெற்றுத் தருகிற ஒரு நிலையை நமது அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது குறைந்தபட்சம் அதற்கான நஷ்டஈட்டை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தர அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சொத்துக்களையும், உடைமைகளையும் மட்டுமல்ல நிலத்தையும் மீட்கத்தான் போராடுகிறார்கள்.

**துறையூர் ஒன்றியத்திற்கு காவேரியிலிருந்து குடிநீர் வழங்கல்**

**182—(*வினா எண் 7312) திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் துறையூர் ஒன்றியத்திற்கு காவேரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

**திருமதி இரா. சரோஜா:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது நிலவி வரும் வறட்சியினை கணக்கில்கொண்டு குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் இந்த ஆண்டிலாவது துறையூர் ஒன்றியத்திற்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, துறையூர் பேரூராட்சியின் மக்கள் தொகையை மனதிலே கொண்டு ரூ. 48.7 லட்சம் மதிப்பீட்டில் ஐயாறு நதியினை நீர் ஆதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.



**குமரி மாவட்டம் எல்லைப் பகுதிகளுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டு குடிநீர் திட்டம்.**

**183—(*வினா எண் 7602) திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் எல்லைப் பகுதியான களியாக்காவிளை, கோழிவிளை, கூட்டப்புளி, பொன்னப்ப நகர், குழிவிளை, செம்மாம்விளை ஆகிய பகுதிகளுக்கு குழித்துறை தாமிரபரணி ஆற்றில் மங்காடு கடவிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-30)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள, இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கிற பகுதிகள் எல்லாம் மிகவும் தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள பகுதிகளாக இருந்து வருவதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த நிலையைக் கணக்கில் எடுத்து, உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகப் பெரிய வறட்சி நிலவி வருவதை நாடு நன்கு அறியும். ஆகவே அந்தப் பகுதியிலே எங்கெங்கு திறந்தவெளிக் கிணறுகளில் தண்ணீர் கிடைக்கிறதோ, மற்ற முறைகளில் தண்ணீர் கிடைக்கிறதோ அங்கெல்லாம் குடிநீர் திட்ட வேலைகள் நடைபெற்று; அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறார்கள்.

[1987 மார்ச் 26

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த திட்டத்தைப்பற்றி ஏதாவது ஆய்வு செய்யப்பட்டதா? ஆய்வு செய்யப்பட்டது சம்பந்தமாக ஏதாவது அறிவிப்பு அரசுக்கு வந்திருக்கிறதா, அல்லது ஆய்வு செய்வதற்கு உள்ள நடவடிக்கை ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, களியாக்காவிளை பேரூராட்சி குடிநீர்த் திட்ட வேலைகள் மற்றும் குழித்துறை ஆற்றின் நீரை ஆதாரமாக வைத்து ஆய்வு வேலைகள் தொடங்கப்பட்டு ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்திலே இருக்கின்றன.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியிலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலும் பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதியிலும், நிலத்தடி நீர் குறைந்து வருவதாக குறிப்பிடப்பட்டு இருப்பதால், நிலத்தடி நீரை மட்டுமே பயன்படுத்தி, குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க முடியாது என்ற நிலை இருப்பதால், ஆறுகளில் ஓடுகிற தண்ணீரையும், பிற குளங்களில் தேங்கியிருக்கிற நீரையும் பாதுகாக்கப்பட்ட குடிநீராகப் பயன்படுத்த முடியும் என்ற காரணத்தால், அந்தப் பகுதிகளுக்கு நிரந்தரமாக ஒரு குடிநீர் திட்டத்தை வழங்குவதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அளிக்க அரசு முன்வருமா என்பதையும், பத்மநாப்புரம் நகராட்சியின் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 2 கோடி ரூபாய்த் திட்டத்தை அரசு அங்கீகரித்து அனுப்புமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் தற்போதுள்ள வறட்சி நிலையைச் சமாளிப்பதற்கான தன்மையிலே எல்லா ஊர்களிலும் இருக்கிற திறந்தவெளி கிணறுகளைப் பயன்படுத்தியும், கையிறைப்பான்களைப் போட்டும் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. நிரந்தரப் பரிகாரம் காண்பதற்கு விரைவிலே திட்டங்கள் தீட்டப்பட்டால்தான் அதற்கான முடிவுகளை எடுக்க முடியும். தற்போது வறட்சி நிலையைச் சமாளிக்கிற ஏற்பாட்டிலே மட்டும் குடிநீர் வடிகால் வாரியம் ஈடுபட்டு வருகிறது.



1987 மார்ச் 26]

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் கேட்டிருக்கிற பகுதிகள் எல்லாம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் தண்ணீரே இல்லை என்று சொல்லுகிறார்கள் நிபுணர்கள். இந்தப் பகுதிகளில் குழாய்கள் எதுவும் போடப்படவில்லை. கலெக்டரை கேட்டால், ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அந்தப் பகுதிகளை ஆய்வுக்கு எடுத்து உடனடியாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அந்த பகுதியிலே கூட்டப்புளியில் ஒரு திறந்தவெளி கிணறு இருக்கிறது. பொன்னப்ப நகரில் கையிறைப்பானும், திறந்தவெளிக் கிணறும் இருக்கிறது. குழிவிளையில் ஒரு கையிறைப்பானும், திறந்த வெளிக் கிணறும் இருக்கிறது. செம்மாம்விளையில் ஒரு திறந்தவெளிக் கிணறு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன, களியாக்காவிளை குடிநீர்த் திட்ட ஆய்வு வேலைகள் முன்னேற்றத்திலே இருக்கின்றன. ஆகவே தற்போது நிலைமைகளைச் சமாளிக்கின்ற தன்மையிலே குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டு வருகிறது.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே நிலத்தடி நீர் குறைந்து வருவதோடு கிடைக்கின்ற நிலத்தடி நீரும் உப்புத் தண்ணீராக இருக்கிற காரணத்தால், திருநெல்வேலியில் உள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து கன்னியாகுமரி நகரத்திற்கு தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் தற்போது எதுவும் இல்லை.

## போளூர் நகர், அல்லி நகரில் மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்தல்.

184—(* வினா எண் 9580) திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நகரிலுள்ள அல்லி நகரில் குடிநீர் வசதிக்காக மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

**திரு. மா. கதிர்வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 பேர்கள் இருக்கின்ற பகுதிக்கும், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுதிக்கும்தான் ஆழ்துளைக் கிணறுகளைப் பொருத்த முடியும் என்று அரசுத் தரப்பிலே ஜி.ஓ.க்கள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. இன்றையதினம் அருந்ததிய மக்கள், அரிசன மக்கள் வாழ்கிற பகுதிகளில் இதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. கடுமையான வறட்சிக் காலங்களில் இதுபோன்ற அரசு ஜி.ஓக்கள் எல்லாம் இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. மேலும் மலைப் பகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் இதுபோன்ற சூழ்நிலைகளினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே குடிநீர் கிடைக்க முடியாத பகுதிகளுக்கு இந்த விதியைத் தளர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் மழை இல்லை. அதனால் எங்கே குடிநீர் நிலத்தடியில் கிடைக்கிறது என்பதை மீட்டர் வைத்து பார்த்துதான் தண்ணீர் எடுத்து கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆதி திராவிடர்கள் வாழ்கிற பகுதியில் கிணறு எடுத்தாலும் அதிலிருந்து மேல்ஜாதிக்காரர்களுக்கு கொடுக்க வேண்டியதுதான். மேல்ஜாதிக்காரர்கள் வாழ்கிற பகுதியில் கிணறு எடுத்தாலும் அதிலிருந்து ஆதி திராவிடர்களுக்கு





கொடுக்க வேண்டியதுதான். அப்படித்தான் இன்றைய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தண்ணீர் எங்கே கிடைக்கிறதோ அங்கே தண்ணீர் எடுக்கிற ஏற்பாட்டை செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே தண்ணீர் கிடைக்கிற இடத்தில்தான் குடிநீர் வடிகால் வாரியம் தற்போது இந்த வறட்சி நிலையில் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

## வேடசந்தூர் வட்டம், எரியோடு நகரில் குடிதண்ணிர் தட்டுப்பாடு

185—(*வினா எண் 10335) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம், எரியோடு நகரில் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாக தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரியோடு பேரூராட்சி ஊரகப் பேரூராட்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற ஊரகப் பேரூராட்சிகளில் ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ், முழு மானிய அடிப்படையில் குடிநீர் வழங்கும் திட்டத்தினைச் செயற்படுத்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கிராமப் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்ட ஆய்வு வேலைகள் 1987-88 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிப் பகுதி முழுவதும் குடிநீர் பிரச்சினைகள் என்பது நிரந்தரமாக இருக்கிற ஒன்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறபோது இந்த நகரத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல் இதைச் சுற்றி இருக்கிற கிராமங்களுக்கும் ஏற்படுத்தப்பட இருக்கிற இந்த குடிநீர் திட்டத்தில் குடிநீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி அறிய ஆய்வின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 26

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வியில் கொடுத்துள்ள எரி யோடு எஸ். புதூர், மீனாட்சிபுரம், பாண்டியன் நகர், குண்டம் பட்டி, சின்னக்குட்டியப்பட்டி, குறும்பட்டி, புதும்பிள்ளையான் பட்டி, ஏறாதசமுத்திரம், கடைகுளம், மணியன்காரன்பட்டி, பண்ணைப்பட்டி, உத்தமன்பட்டி, எம். புதூர், மாவாம்பட்டி ஆகிய எல்லா இடங்களிலும் குடிநீர் கிடைப்பதற்கான ஏற்பாடு களை இந்த அரசு செய்து கொண்டு வருகிறது. ஆங்காங்கே சில இடங்களில் எல்லாம்—சில கிராமங்களில் தண்ணீர் வறண்டு போய் இருக்கிறது. வறண்டுபோய் இருக்கிற கிராம மக்கள் பக்கத்தில் உள்ள கிராமங்களிலிருந்து தண்ணீரை எடுத்துக்கொள்கிறார்கள். அந்தச் சூழ்நிலைதான் அங்கே நிலவுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை.

**186—(*வினா எண் 8153) திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங் குடியில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. த. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் அமரர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் ஆலங்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இருந்து அடுத்து 1978-ல் நான் அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தி லும் சரி தொடர்ந்து இப்போதும் அந்த ஆலங்குடியில் ஒரு வனஸ் பதி தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்து கொண்டு இருக்கிறோம். ஆலங்குடி



1987 மார்ச் 26]

பகுதியில் நிலக்கடலை அதிகமாக பயிரிடப்படுகிறது. அதோடு மட்டும் அல்லாமல் ஆலங்குடி நகரத்தில் மட்டும் நூற்றுக்கு மேற் பட்ட கடலை எண்ணை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே இதை கருத்தில் கொண்டு அரசு மறு பரிசீலனை செய்து மிகவும் பின் தங்கிய மாவட்டம் ஆகிய புதுக்கோட்டை மாவட்டத்தில் வேறு எந்த தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால் இந்த வனஸ்பதி தொழிற்சாலையை ஆலங்குடியில் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் 31 ஆயிரத்து 311 ஹெக்டேரில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. ஆக அந்தப் பகுதியில் இந்த வனஸ்பதி ஆலை நிறுவுவதற்கு நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் நாட்டில் உற்பத்தி ஆகின்ற வனஸ்பதியில் 25 சதவீதம் தான் நாட்டில் விற்பனை ஆகிறது. இரண்டாவது, சமையலுக்குப் பயன்படாத எண்ணெயில் இருந்து தான் வனஸ்பதியை செய்ய வேண்டும் என்று மத்திய பேரரசு உரிமம் வழங்குவதில் தடை விதித்து இருக்கிறது. அந்தத் தடை நீக்கப்பட்டால் வனஸ்பதிக்கான ஆலைகளுக்கான உரிமங்களை மத்திய பேரரசு தந்தால் இதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

கிராமங்களில் பயிற்சி வழித் தொடர்பு திட்டம்.

**187—(*வினா எண் 9653) திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பயிற்சி வழித் தொடர்பு திட்டம் சரிவர நடைபெற்று வருகிறதா?

(ஆ) இல்லையெனில், அதன் குறைபாடுகளைப் போக்கி விவ சாயிகள் பலன் பெறத்தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1987 மார்ச் 26

**கொடைக்கானலில் வாழை மரங்களுக்கு வேர் முடிக் கொத்து நோய்.**

188—(* **வினா எண் 10551**) **டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல், கீழ்பழனி மலைப் பகுதியில் வாழை மரங்கள் 'வேர் முடிக் கொத்து' நோயால் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பகுதி வாழ் உழவர்களிடையே மலைவாழையில் முடிக்கொத்து நோய் தாக்கப்பட்ட மரங்களை தெரிவு செய்து செடிகளை அழித்து அப்புறப்படுத்தவும், ரோகார் அல்லது மெட்டாசிஸ்டாக்ஸ் மருந்துகளை தெளித்து இந்த நோயை பரப்பும் தத்துப்பூச்சிகளை அழித்திடவும் ஏதுவாக உரிய விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்நோய் பரவுதலை கட்டுப்படுத்த 2, 4D மருந்தை வாழை மரத்தின் அடித்தண்டு பகுதியில் ஊசி மூலம் உட்செலுத்தி தாக்குண்ட மரங்களை அழிப்பதால் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-40)

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மலைவாழை பயிரிடும் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் அரசு ஏதேனும் நிவாரணம் அளித்து, நிதியுதவி அளித்து, மேலும் வாழை மரங்களை வளர்க்க உதவி செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நோய் தடுப்பதற்கான முறையில் பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் கிராமங்களுக்குப் போய், அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கு உதவி செய்து, 100 மில்லி மீட்டர் மண்ணெண்ணெய் ஊற்றி பயிர்களை எரித்து விடுகிறார்கள். எனவே தற்போது நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 மார்ச் 26]

**டாக்டர் த. முகம்மது சலீம்:** தலைவர் அவர்களே, மலை வாழைப் பழம் இந்த நோயினால் அடியோடு அழிந்து போகின்ற நிலையில் இருக்கிற காரணத்தால் வேளாண்மைத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை ஆங்காங்கு அனுப்பி, அவர்களுக்கு பயிற்சி அளித்து, இந்த நோயைத் தடுக்க அரசு முன் வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இதன் மூலமாக வாழை அழிந்து விடாத தன்மையில் ஒரு இலட்சம் ஏக்கர் அளவில் உற்பத்தி செய்ய, நடப்பாண்டில் திட்டமிடப்பட்டு, நோய் தாக்காத வாழைக் கன்றுகளை விவசாயிகளுக்கு விவசாய இலாக்கா தந்து கொண்டு வருகிறது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனினும் இனியது திகட்டாத கனியது சிறு மலை வாழை பழமே என்று சொல்வார்கள். அந்த வகையிலே சிறுமலை வாழைப்பழங்கள் எல்லாம் இந்த மாநிலம் அனைத்திலுமே முடி கொத்து நோயினால் கெட்டு, சிறிது கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அந்த விவசாயிகள் திரும்பவும் வாழை மரங்களை பயிரிட்டு இருக்கிறார்கள். அவற்றுக்கும் இப்படிப்பட்ட மருந்து கொடுத்து, அரசு ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, பயிற்சி வழித் தொடர்பு அலுவலாளர்கள் இந்தக் கிராமங்களுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த நோயைத் தடுப்பதிலே, மேலும் பரவாமல் தடுப்பதற்கு கிராம மக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மிக எளிய தன்மையில் அந்த மருந்துகள் வழங்கப்பட்டு, 2, 4 D மருந்துகளை மரத்தின் அடித் தண்டிலே தெளித்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். 250 ஹெக்டேரில் நோய் பரவாமல் தடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிகொத்து நோயினால் பாதிக்கப்பட்ட இடங்களில் 3 ஆண்டுகளாக வாழைப் பயிரிடப்படவில்லை என்றால், இந்த நோய் வருவதில்லை என்று கூறப்படுகிறது. இது உண்மையா? அப்படி உண்மையானால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை பயிரிடுவதற்கு மலைகளில் மாற்று இடங்கள் ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அவர்களுக்கு நோயைத் தடுப்பதற்கு சொல்லித் தருகிறோம். நோய் பரவாமல் இருக்கின்ற வகையில் தடுப்பு முறைகளைக் கையாள்கிறோம். மிக எளிதான முறையில் மருந்துகளை எல்லாம் கொண்டு போய் கொடுக்கிறோம். அத்தோடு மேலும் அடுத்த ஆண்டு ஒரு இலட்சம் ஏக்கர் அளவில் வாழை பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

**விஜய மங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுக்கு நினைவுச் சின்னங்கள்.**

189—(*வினா எண் 1907) **டாக்டர் அ. பொன்னுசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விஜய மங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களான கார் மேகப் புலவர், பவணந்தி முனிவர், அடியார்க்கு நல்லார், கொங்கு வேளிர் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவிடவும அரசு விழா ஏதேனும் எடுக்கவும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை அருகில் உள்ள விஜய மங்களத்தில் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் திருக்கோயிலுக்கு அருகில் சமணர் முறைப்படி தூண் ஒன்று நிறுவலாம் எனும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தூணில் நான்கு பக்கங்களிலும் விஜயமங்களத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களான கார்மேகப் புலவர், பவணந்தி முனிவர், அடியார்க்கு நல்லார், கொங்கு வேளிர் ஆகியோரைப் பற்றி எழுதலாம் என்றும் ஆண்டுதோறும் விழா எடுக்கவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சங்கச் சான்றோர்கள் பிறந்த ஊரைக் கண்டறிந்து ஆங்காங்கு சான்றோர் நினைவுக்கல் நிறுவும் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்டந்தோறும் படிப் படியாகச் செயற்படுத்தப் பெறும்.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, அன்னை தமிழுக்கு அணி அணியாக அணி சேர்க்கும் எங்கள் தலைவர், புரட்சித் தலைவருடைய அரசு, சங்கப் புலவர்களின் நினைவை போற்றும் வண்ணம் கொங்கு



நாட்டுக்கு தலைமை ஏற்கும் தகுதி பெற்ற விஜய மங்களத்தில் நினைவுச் சின்னம் அமைக்க இருப்பதற்கு நன்றி. அதே சமயத்திலே அந்த சங்கப் புலவர்கள் எழுதிய நூல்கள் என்ன என்றும், அவைகள் எல்லாம் ஓலைச் சுவடிகளாக இருக்கின்றன என்றும் அவைகளை எல்லாம் அரசே சிறந்த முறையில் அச்சிட்டு அனைத்து நூலகங்களுக்கும் வழங்க முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே. கொங்கு வேளிர் என்பவர் பெருங்காதை என்னும் காப்பியத்தை படைத்து இருக்கிறார். அடியார்க்கு நல்லார் அவர்கள் சிலம்புக்கு உரை எழுதியிருக்கிறார்கள். பவணந்தி முனிவர் நன்னூல் இலக்கண நூலை ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

**திரு. சு. சிவராஜ்:** தலைவர் அவர்களே, சங்க கால புலவர் கபிலர் அவர்கள் எங்களுடைய திருக்கோயிலூரில் வாழ்ந்து வளர்ந்திருக்கிறார். அங்கே இருக்கின்ற ஒரு குன்று இன்றைக்கும் கபிலர் குன்று என்று அழைக்கப்படுகிறது. அந்தக் குன்றை தமிழக அரசு, கபிலருடைய நினைவுச் சின்னமாக்கி அதை பராமரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் தற்போது இல்லை. கபிலர் ஆங்கு இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. கபிலர் மலைப் பகுதியில் இருந்ததாகவும், அதற்கு சான்றுகள் உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இவற்றை ஆய்ந்து அரசு அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** தலைவர் அவர்களே, இங்கு சங்க கால புலவர்களுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்புவதாக சொல்வதற்கு நன்றி சொன்னாலும் கூட வரலாற்றிலே முதல் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு வரை இடைப்பட்ட காலத்திலே வாழ்ந்த அற்புதமான கவிஞர்கள் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், நம்முடைய பட்டிணத்து அடிகளார், தாயுமானவர், இராமலிங்க அடிகளார், நான்முகர் போன்ற 63 நாயன்மார்கள் போன்றவர்களுடைய வரலாறுகள் திருக்கோவிலிலே வைத்திருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். இருந்தாலும் வரலாற்றுச் சிறப்புடைய தமிழை அள்ளித் தந்திருக்கிறார்களே, அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவீர்களா? மேலும் உரை ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதாகச்

[திரு. ஜி. கே. ஜே. பாரதி] [1987 மார்ச் 26

சொன்னதற்கு நன்றி. அப்படி உரை எழுதிய நம்முடைய கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் காஞ்சிபுரத்திலே கந்த புராணத்தை எழுதியிருக்கிறார்களே, அவர்களுக்குத் தருவீர்களா? பரிமேலழகர் காஞ்சியிலே பிறந்த ஒரு அர்ச்சகர் தான். அவருக்கும் நினைவுச் சின்னம் அமைப்பீர்களா? இப்படிப்பட்ட வரலாற்று நினைவுச் சின்னங்களை அமைக்கின்ற முறையை நம்முடைய தமிழக அரசு (மணியடிக்கப்பெற்றது) தமிழைச் சொல்கிறது. ஆகவே சொல்கிறேன். கன்னித் தமிழை வளர்த்திருக்கின்ற சங்ககால அறிஞர்களுக்கு நினைவுச் சின்னம் வகுக்கப்பட வேண்டும். வகுக்கப்படுமா? அப்படி வகுக்கின்றபோது அதில், எழுதிய நூல்களுடைய வரலாறைச் சொல்ல வேண்டும். சொல்வீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் தமிழிலேயே கேள்வியாக கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்ட வினாவிற்கு பதில் அளிக்கின்றபோது தெளிவாகச் சொல்லி விட்டேன். சங்கப் புலவர்களுக்கு நினைவுக்கல் நாட்டல் என்ற முறையிலே அது அரசால் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அப்படி புலவர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் நினைவுச் சின்னம் எழுப்புகின்றபோது கட்டாயம் அவருடைய வரலாறு பொறிக்கப்படும்.

**பாடநூல் நிறுவனத்தால் அச்சிடப்பெற்ற பாடநூல்கள்.**

**190—(* வினா எண் 10519) திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு பாட நூல் நிறுவனம் அச்சிட்ட மொத்த பாட நூல்கள் எவ்வளவு?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட காகிதம் எத்தனை டன்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்ற ஆண்டு (1985-86) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் அச்சிட்ட மொத்த பாடநூல்கள் 309.98 லட்சங்கள் ஆகும்.

(ஆ) 1985-86க்கு மைய அரசு ஒதுக்கிய சலுகை விலைக் காகிதம் 6,103 டன்கள். ஆனால் காகித ஆலை வழங்கியது 3,310 டன் ஆகும். வெளிச் சந்தையில் வாங்கியது 3,360 டன் ஆகும்.



1987 மார்ச் 26]

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் புத்தகங்கள் வெளியிட்டதைப் பற்றிச் சொன்னார்கள். நன்றி. இன்று வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆகஸ்ட் மாதம் அவை விநியோகம் செய்யப்படுவதால்—அம்மாணவர்கள் பள்ளி திறந்த முதல் வாரத்திலேயே புத்தகங்களை பணம் கொடுத்து வாங்கி விடுவதால், இலவசப் புத்தகங்கள் சில இடங்களில் விநியோகம் செய்யப்பட்டும், சில இடங்களில் விநியோகம் செய்யப்படாமலும் தேங்கி வீணாக்கப்பட்டும் தவறுகள் ஏற்பட வழி வகுக்கிறது. எனவே, பள்ளிகள் திறக்கப்பட்டவுடன் அப்புத்தகங்கள் விநியோகம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறுகள் ஒன்றும் இதில் நடப்பதற்கு வழி வகை இல்லை. ஆனால் மாணவர்களுக்குக் காலத்தே பாடநூல்கள் சென்று சேராவிட்டால், அது அரசு எண்ணுகிற எண்ணத்தை, பலனை எட்டாமல் போய்விடும். இது அரசினுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டு, ஆய்ந்து, இந்த ஆண்டிலிருந்து அப்பிரச்சினை எழாமல் காலத்தே மாணவர்களுக்கு பாடநூல்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் ஐந்து வகுப்புகளுக்கான புத்தகங்கள் அளவில் பெரியதாக இருப்பதாலும், முதல் மூன்று மாதங்களுக்கு மேல் பயன்பட முடியாத நிலையில் கிழிந்து விடுகிற நிலை இருந்து வருவதாலும், இரண்டாவது முறை புத்தகங்கள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை என்பதாலும், அதன் அளவைக் குறைத்து, சிறியதாக புத்தகங்களை அமைத்து, மாணவர்களுக்கு அது ஓராண்டுக்குப் பயன்படும் அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாட்டினைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட நூலின் அளவு, பாடத் திட்டங்களிடையே அளவைப் பொறுத்தது.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடநூல் நிறுவனத்திற்காக தனியான அச்சு இயந்திரங்கள் அமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### அரசு மேல்நிலைப் பள்ளிகள்.

**191—(*வினா எண் 11100) திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் எந்த அடிப்படையில் தொடங்க அனுமதிக்கப்படுகிறது?

(ஆ) அவற்றில் மாணவர்கள் சேர்க்கை எவ்வாறு நடத்தப்படுகிறது?

(இ) எல்லா கல்வி மாவட்டங்களிலும் பரவலாக இந்த வகுப்புகள் தொடங்கப்பட்டு இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இடவசதி, தளவாடங்கள், உபகரணங்கள், எம்.எட். பட்டம் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கிற வசதி பொது மக்களின் ஆதரவு, தலைமையாசிரியர்களின் முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் மேல்நிலை வகுப்பில் தொழிற்பாடமாக 'இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு' அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) (1) 15-லிருந்து 25 வரையிலான வயது வரம்பு கொண்ட பெண்கள் மட்டுமே சேர முடிகிற இவ்வகுப்பில், 25 மாணவிகள், பொதுவான இட ஒதுக்கீட்டு விதியின்படி, சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அந்தந்த ஆண்டின் ஜூலை 31-ல், வயது கணக்கிடப்படும்.



(2) பத்தாம் வகுப்பில் மொத்தத்தில் 60 சதவீதத்திற்கு குறையாமலும் மொழிப் பாடங்களில் 50 சதவீதத்திற்கு குறையாமலும் மதிப்பெண் பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். 1986-87 கல்வி ஆண்டில் சேர ஆதி திராவிடர்/பழங்குடி இனத்தவர்கள் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும்.

(3) ஏற்கெனவே பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களும், மீண்டும் இவ்வகுப்பில் சேரலாம். ஆனால் ஆதி திராவிடர்/பழங்குடி இனத்தாரை தவிர மற்றவர்கள் மேற்காண் மதிப்பெண் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(4) இது தவிர ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் பின்பற்றப்படுகிற பொது விதிகள் அனைத்தும் இதற்கும் பின்பற்றப்படும்.

(இ) ஆம்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆசிரியர் பயிற்சி வகுப்பை மேல்நிலைப் பள்ளியிலே துவங்குவதற்கு எல்லா விதமான தகுதிகள், வயது வரம்பிலிருந்து, பள்ளிக்கூடத்தில் இடவசதி வரை தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், மாவட்டத்திலே இருக்கிற அரசு மேல்நிலைப் பள்ளிகளில், 100க்கு 100 விழுக்காடு மாணவர்கள் வெற்றி பெறுகிற பள்ளிக்கு முதலிடம் தந்து, இந்த பயிற்சி வகுப்புகளை அங்கே நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 1985-86 ஆம் ஆண்டில் 36 பள்ளிக்கூடங்களுக்கும், 1986-87 ஆம் ஆண்டில் 16 பள்ளிக்கூடங்களுக்கும் அந்த அனுமதி தரப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப, நடப்பாண்டில் அதைப் பரிசீலிக்கலாம் என அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையையும் அரசு கருத்திலே கொள்ளும்.

[1987 மார்ச் 26

**நாகர்கோவிலில் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டுதல்.**

192—(*வினா எண் 9565) **திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிமன்றத்தில் பணியாற்றும் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டிக் கொடுக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை 1986-87 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று அரசு முடிவு செய்தது. ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக இச்செயற்குறிப்பினை 1986-87 இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் கொண்டுவர இயலவில்லை. ஆகவே, இத்திட்டத்தினை சிறிது காலம் நிறுத்தி வைக்கும்படியாக உயர்நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் இச்செயற்குறிப்பினை அரசுக்கு மீண்டும் அனுப்பும்போது மீண்டும் இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரத்தில் வழக்கறிஞர்களுக்கு கட்டப்பட இருக்கிற அந்த சேம்பர் 198687 லே சேர்க்கப்பட்டு, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாவட்ட நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 300 வழக்கறிஞர்களுக்கு மேல் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களிலே பெருவாரியான வழக்கறிஞர்கள் தங்களுக்கு போதிய அலுவலகங்கள் இல்லாத காரணத்தால் பணிகளைச் சிறப்பாக செய்ய முடியாத சூழ்நிலையில் நீண்ட காலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே வருகின்ற ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 இலட்சம் ரூபாய் 1985-86ல் இதற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாக அது



1987 மார்ச் 26]

தள்ளி போடப்பட்டது. தற்போது 30 லட்சம் ஆகுமென அதற்கு மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டுவது என்ற பிரச்சினை நாகர்கோவிலில் மட்டுமல்ல பல இடங்களிலும் காலதாமதமாவதற்குக் காரணம், நிதி பற்றாக்குறையும் ஒரு காரணமாக இருக்கிறது. எனவே இந்த நிலையில் வழக்கறிஞர்களே முன்வந்து 10 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் முன் பணமாக தருகிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மாவட்ட தலைநகரங்களில் இருக்கிற 50 வழக்கறிஞர்கள் சேர்ந்து முன்பணமாக 20 ஆயிரம் தருகிறோம் என்று முன் வந்தால் அப்படிப்பட்டவர்களை வைத்து அரசாங்கமே கட்டிடத்தைக் கட்டி அவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு, இந்த முறையை அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல ஆலோசனையை அரசு ஏற்கெனவே ஆய்ந்து வருகிறது. வழக்கறிஞர் சங்கத்திடம் இது பற்றி பேசி வருகிறது. வழக்கறிஞர்களே முன் வந்து ஓரளவுக்கு அதற்குப் பணத்தைத் தருகிறபோது (HUDCO) நிறுவனத்தின் மூலம் மீதி பணத்தைப் பெற்று கட்டிடத்தைக் கட்டித் தந்தால் தான் பன்னெடு ஆண்டுகளாக இருந்து வருகிற இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்ற முறையிலே இதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தற்போது தீவிர முயற்சியில் இருக்கிறது.

**கோவை சட்டக் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் பணி.**

193—(*வினா எண் 10763) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை சட்டக் கல்லூரியில் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க தகுதி படைத்த தமிழாசிரியர்களை அரசு நியமனம் செய்யுமா ?

[1987 மார்ச் 26

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சட்டக் கல்லூரியில் பணி புரிகின்ற ஆசிரியர்கள் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்கத் தகுதி படைத்தவர்கள்; ஆகவே அவர்களைத் தவிர தமிழில் சொல்லிக் கொடுக்க தனியாக வேறு ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் உத்தேசம் இல்லை.

## கதர் கிராமத் தொழில் துறையின் மின்விசை எண்ணெய் செக்குகள்.

**194—(*வினா எண் 9497) திரு. க. பாரமலை:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கதர் கிராமத் தொழில் துறையின் உதவி பெற்றும், சுயவேலை வாய்ப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் உதவிபெற்றும் துவக்கப்பட்ட மின்விசை எண்ணெய் செக்குகள் மொத்தம் எத்தனை?

(ஆ) அதில் பெரும்பாலானவை செயலிழந்து போய் விட்டது என்று சொல்லப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றை செயல்பட வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மொத்தம் மின் விசை எண்ணெய் செக்குகள் 2,390.

(ஆ) 1986 மார்ச் மாதம் வரை 480 மின்விசை செக்குகள் சிறு குறைபாடுகளின் காரணமாக செயல்படாமல் இருக்கின்ற தகவல் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

(இ) பம்பாய் கதர் வாரிய ஆய்வுக் குழுவின் மூலமாக 1986-87 ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் அடிப் படையில் இவைகளைப் பழுதுபார்க்க 4 சேவா நிலையங்களை அமைத்துத் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன.



1987 மார்ச் 26]

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே இந்த நாட்டு விசை செக்குகள் அதிகப்படி பயன்படாமல் போவதற்குக் காரணம் அதனுடைய வடிவமைப்பிலுள்ள குறை பாடுகள்தான் என்று நிபுணர் குழு அறிக்கை கொடுத்திருப்பதாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இது பற்றி மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள்கூட கவன ஈர்ப்பு மூலமாக தெரிவித்தபோது அமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஒரு வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். 4—6—1986 ஆம் தேதியன்று ஒரு உயர் மட்டக் குழுவைக் கூட்டி விரைவாக அதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைப்பதாக அவர் கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்த நிபுணர் குழு 8 பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அந்தப் பரிந்துரைகளை விரைவாக அமல் படுத்து வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82, 1982-83 ஆம் வருடங் களில் வாரியத்தால் வழங்கப்பட்ட செக்குகள் மட்டும் கொஞ்சம் பழுது பட்டன. அவைகளைப் பார்ப்பதற்கு ஒரு உயர் மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு அதனுடைய இரண்டு கூட்டங்களில் ஒன்று வேலூரிலும் மற்றொன்று மதுரையிலும் நடைபெற்றன. அவர்கள் எட்டு ஆலோசனைகளைத் தந்திருக்கிறார்கள். அதன் மீது கதர் கிராமத் தொழில் வாரியம் உரிய நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அந்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளில், பழுது ஏற் பட்டுள்ள இயந்திரங்களுக்கு 1,500 ரூபாய் இலவசமாகவும், 1,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை எத்தனை நாட்டு செக்குகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது? மின் கட்டணம் 1—6—1985-க்கு முன்பு 0.15 பைசாவாக இருந்தது. அதை இப் போது 0.55 பைசாவாக உயர்த்தியன் காரணமாகத்தான் இந்தச் செக்குகள் அதிக பளுவைத் தாங்க முடியவில்லை என்று அதை 0.15 பைசாவாக ஆக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக் கிறது. அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர் மட்டக் குழுவி னுடைய பரிந்துரையின் மீது 1,500 ரூபாய் மானியமாகவும், 1,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை பம்பாயிலிருந்து கதர் வாரியத்திற்கு அனுப்பப் படுகிறது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப் பட்டிருக்கிறது. மற்றொன்று, மின் துறைக்கு தரப்படுகிற அந்தக் கட்டணத்தை 0.15 பைசாவாக மாற்ற மின் இலாக்காவை அணுகி இருக்கிறார்கள்.

**நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் மண்பாண்டத் தொழில் மையம் அமைத்தல்.**

195—(*வினா எண் 9744) திரு. எஸ். இராசாராம்மன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் சுமார் 6 லட்சம் மதிப்பீட்டில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு மையம் அமைக்கும் கருத்தொரு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்போதுத் தொழிற்கூடம் கார்குறிச்சியில் கட்டு வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், விரை வில் இப்பணிக்கூடம் கட்டி முடிக்கப்படும் எனவும் கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் தெரிவித் துள்ளார்.

**திருவிடைமருதூர் தொகுதியில் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை அமைத்தல்.**

196—(*வினா எண் 12034) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை திருவிடைமருதூர் தொகுதியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?



மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 11-00]

## 2. தகவல் கோரல்

**(அ) ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஏற்பட்டுள்ள தீ விபத்து.**

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு கண்ணியத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆயிரம் விளக்குச் சட்டப் பேரவைத் தொகுதியில், 106-வது வட்டத்தில் சுதந்திரா நகர் என்ற பகுதியில், ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கிற அந்தப் பகுதியில், 25-3-1987 அன்று காலை 11 மணியளவில் ஒரு பெரிய தீ விபத்து நிகழ்ந்துள்ளது. அதன் காரணமாகப் பல நூறு குடும்பங்கள் சொல்லொணாத் துயரத்திற்கு இன்று ஆளாகி யுள்ளனர். மாண்புமிகு எங்கள் இனிய தலைவர் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் துணையுடன் நேற்று சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் (நாத் தழுதழுக்க) மற்றவர்கள் உதவி யுடன் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு ஓரளவுக்கு அந்தப் பகுதி மக்கள் உதவி பெற்றுள்ளார்கள். ஆனால் இன்று காலை பத்திரிகைகளில் பல்வேறு விதமான தகவல்கள் வெளியாகி யுள்ளன. எனவே உண்மை நிலவரங்களை இந்தப் பேரவை அறிய வும் — தீ விபத்துக்கு ஒரு குறிப்பிட்ட சிலரின் திட்டமிட்ட சதி காரணம் என்று பரவலாக அந்தப் பகுதியில் வாழ்கிற ஆதி திராவிட குடிசைவாழ் மக்கள் கூறுவதனால் அதில் ஏதாவது அடிப்படை உண்டா என்பதைக் குறித்தும் அரசு இதுவரை அங்கு எடுத்துள்ள, இனி எடுக்க இருக்கிற நிவாரண நடவடிக்கை கள் குறித்தும் அருள்கூர்ந்து ஒரு முழுமையான அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளித்து ஆயிரம் விளக்குத் தொகுதி மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளிக்க மாண்புமிகு அண்ணன் டாக்டர் நாவலர், நிதியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[1987 மார்ச் 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-3-1987 அன்று காலை 10.30 மணியளவில் ஆயிரம் விளக்குத் தொகுதியில் கீரிம்ஸ் ரோடு வணிக வரி அலுவலகக் கட்டிட வளாகத்தின் பின்புறம் அமைந்துள்ள சுதந்திராநகர் குடிசைப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது.

4 தீ அணைப்பு வண்டிகள் விரைந்து சென்று ½ மணி நேரம் போராடி தீயை அணைத்துவிட்டன. இந்த தீ விபத்தில் 212 குடிசைகள் தீக்கு இரையாகி விட்டன. தீ விபத்தால் உயிர் சேதமில்லை.

தீ விபத்து நடந்த இடத்தை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் எழும்பூர்-நுங்கம்பாக்கம் வட்ட ஆட்சியரும் நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். சென்னை மாநகராட்சியும் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு மாற்று இடம் கொடுத்து உணவும் வழங்கி வருகிறது.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும் மற்றவர்களும் உடனடி உதவிகளை அங்கே சென்று புரிந்திருக்கிறார்கள். தீ விபத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ. 300-ம் குடும்பம் ஒன்றிற்கு 5 கிலோ அரிசியும் ஒரு வேட்டியும் புடவையும் இன்று கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேற்றே மாநகராட்சி மன்ற ஆணையரும், சிறப்பு அலுவலரும் அங்கே சென்று பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதிரிப் பள்ளி சாலையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு ரொட்டியும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. உணவுப் பொட்டலங்கள் இன்றும் நாளைக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விபத்து நடந்த அந்த இடத்தில் மின்விளக்கு மற்றும் சுற்றுப்புற சுகாதார வசதிகளும் உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வசதிக்கும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற நிவாரணப் பணிகளை கவனிக்கும்படியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரும் மாநகராட்சி அதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளனர்.



1987 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்று அந்த இடத்தில் தீ விபத்து திடீரென்று ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை காவல்துறை புலனாய்வு செய்து கொண்டிருக்கிறது. அது சதி செயலா, தற்செயலாக ஏற்பட்டதா என்பதெல்லாம் புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் அரசுக்குத் தெரியும். அப்படித் தெரிகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) பொது மருத்துவமனையில் பெண் நோயாளி கற்பழிப்பு.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய 'தினமணி' நாளேட்டில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வந்த பெண்ணை கற்பழித்ததாக இரண்டு வார்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. செவ்வாய் அன்று இரவு நெஞ்சு வலியின் காரணமாக அப்பெண்மணி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்திருக்கிறார். அங்கே தீவிர சிகிச்சைப் பிரிவில் பரிசோதித்த பிறகு அங்கே எழுதிக் கொடுத்திருக்கிற மருந்துகளை பெறுவதற்காக இரண்டு வார்டு ஊழியர்களிடம் வழி கேட்டிருக்கிறார். வழி காட்டுவதாகச் சொல்லி தனியாக ஓர் இடத்திற்கு தீய எண்ணத்தோடு அழைத்துச் சென்று அங்கே மிருகத்தனமாக கற்பழித்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் படிக்கின்றபோது உண்மையிலேயே வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. அரசு மருத்துவமனையில் பணி புரியும் அரசுப் பணியாளர்களுக்கு இப்படிப்பட்ட தவறுகளை செய்ய ஏற்படும் அசாத்தியமான தைரியத்தை கண்டிப்பதோடு இந்த அவல நிலை பெண்கள் மட்டத்தில் அச்சத்திற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதால் எதிர்காலத்திலே மகளிருக்கு இப்படிப்பட்ட கேவலமான நிலை ஏற்படாத வண்ணம் உருவாக்க அரசு என்ன பாதுகாப்பை எப்படி கொடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அந்த இரண்டு ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உங்கள் மூலமாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நேற்றைய தினமே எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனே நடவடிக்கை எடுத்து கைது செய்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி கிரிமினல் வழக்குக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தோடு அரசு நிச்சயமாக தன் கருத்தையும் ஒன்றி கடும் நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலே நடைபெறாதவாறு பார்த்துக்கொள்ள என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அதைப்பற்றி நிச்சயமாக அங்கேயிருக்கின்ற டீன், மற்றவர்களை அழைத்து பேசி நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற காலித்தனம் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கடும் நடவடிக்கைக்கு உள்ளாக்க வேண்டும் என்றும், கிரிமினல் குற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதோடு ஒன்றை கூட சேர்க்கவும் நான் விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் எடுத்து தெரிவித்ததற்கிணங்க உள்ளபடியே வேதனைக்குரிய, வருத்தத்திற்குரிய இப்படிப்பட்ட ஒரு அக்கிரமமான, கயமைச் செயல் நடந்திருக்கக் கூடாது, தடுத்து நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே உள்ள பெரிய மருத்துவமனைகள் போன்ற இடங்களில் போதுமான அளவிற்கு பாதுகாவலர்களை போட்டிருக்கிறோம். இதிலே கூட கூச்சல் தன்மையைக் கேட்டவுடனே காவலர்கள் இருவர் ஓடிப்போய் அவர்களைத் தடுத்திருக்கிறார்கள். அந்தக் காவலர்கள் இரண்டு பேரையும் தாக்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் அந்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் உடனே தப்பித்து ஓடியிருப்பார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது மாதிரி இப்படிப்பட்ட அநாகரிகமான, காட்டுமிராண்டித்தனமான, மிருகத்தனமான செயல்கள் நடைபெறாமல் இருப்ப



தற்கு எச்சரிக்கையாக நடவடிக்கையை எந்த வகையிலே எடுக்கலாம் என்பது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறையோடு கலந்து தக்க முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அரசினர் தீர்மானம்.

### விதி 55 (6)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவையின் 55 (6)-வது விதியின்கீழ் இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புப் பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியைத் தளர்த்தி, இன்றும் மற்றும் இக்கூட்டத் தொடர் முழுவதும் இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புப் பொருள்களை எடுத்துக் கொள்ளலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டுக்கு மேற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 80 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் வந்திருக்கின்றன. உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் இப்படிச் செய்திருக்கிறேன். நேற்று வரை வந்திருக்கிற பதில்கள் 80. ஆகவே நேரத்திற்கேற்ப ஒரு நாளைக்கு ஐந்து என்று எடுத்துக் கொள்ளலாம்.

(முற்பகல் 11-10)

### 4. கவன ஈர்ப்பு.

### (அ) பெரம்பலூர் பாண்டகப்பாடி கிராமத்தில் நில ஆக்கிரமிப்பு

**டாக்டர் கு. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதி பாண்டகப்பாடி கிராமத்திலுள்ள ஆயிரக்கணக்கான அரசு புறம்போக்கு நிலங்களை அரசு அதிகாரிகளும், செல்வந்தர்களும் பட்டா பெற்

றுள்ள காரணத்தினாலும், ஆதி திராவிடர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கப்பட்ட நிலங்களை பெரும் செல்வந்தர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள காரணத்தாலும் ஆதி திராவிட மக்கள் மத்தியிலும் நிலமற்ற ஏழை மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பெரம்பலூர் வட்டம், பாண்டகப்பாடி கிராமத்தில் உள்ள 300.86 ஏக்கர் தரிசு நிலங்கள் ஆதி திராவிடர் நெற்குணம் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட நெற்குணம் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் 23—4—1960-ல் பதிவு செய்யப்பட்டு 20—1—1964ந் தேதியிலிருந்து செயல்படத் துவங்கியது. இச்சங்கம் செயல்படாததால் அதனைக் கலைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சங்கம் முறையாகக் கலைக்கப்பட்ட பின்பு, இந் நிலங்கள் ஒப்படை விதிகளுக்கேற்பத் தகுதி வாய்ந்த நபர்களுக்கு ஒப்படை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட 300.86 ஏக்கர் நிலத்தில் 131.61 ஏக்கர் நிலம் ஆதி திராவிடர்களாலும் ஜாதி இந்துக்களாலும் ஆக்ரமனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கம் கலைக்கப்படாத நிலையில் மேற்கண்ட நிலத்தில் ஏற்படும் ஆக்கிரமிப்புகள் தவிர்க்க இயலாததாக உள்ளது.

மேற்கண்ட 300.86 ஏக்கர் தரிசு நிலங்களைத் தவிர பாண்டகப்பாடி கிராமத்தில் ஒப்படைக்குத் தகுதியான 197.87 ஏக்கர் தீர்வை ஏற்பட்ட புஞ்சைத் தரிசு நிலமும் 399.50 ஏக்கர் புறம்போக்கு நிலமும் உள்ளன. புஞ்சைத் தரிசு நிலத்தில், 109.28 ஏக்கர் புஞ்சைத் தரிசு நிலங்கள் விவசாயம் செய்வதற்கு தகுதியற்றது. அந்த நிலங்கள் யாருக்கும் ஒப்படை செய்யப்படவில்லை. பசலி 1394, 1395 மற்றும் 1396 ஆகியவற்றில் மீதியுள்ள 88.59 ஏக்கர் நிலங்கள் 44 பேர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டன.





அரசு ஊழியர்களுக்கு ஒப்படை ஏதும் வழங்கப்படவில்லை. மேற்கண்ட பசலிகளில் ஆதி திராவிடர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் ஆக்ரமனங்கள் ஏதும் இல்லை. ஒப்படை வழங்கப்பட்ட 44 பேர்களில் நிலமற்ற ஏழைகளான 25 பேர் வேறு கிராமத்தையும் வேறு வட்டத்தையும் சேர்ந்தவர்கள். பாண்டகப்பாடி கிராமத்தில் வசிக்கும் இரு ஒப்படைதாரர்கள் பணக்காரப் பட்டாதார்கள். வேறு கிராமம் மற்றும் வட்டத்தைச் சார்ந்த 19 பேர்களுக்கு தில ஒப்படையை ரத்து செய்வதற்கான அறிவிக்கை (Notice) , ஒன்றை 31—1—1987ந் தேதிய கடிதத்தில் அரியலூர் கோட்டாட்சித் தலைவர் அனுப்பியுள்ளார். வேறு கிராமம் மற்றும் வட்டத்தைச் சார்ந்த மீதியுள்ள 6 பேர்களுக்கும், இரு பணக்கார பட்டாதாரர்களுக்கும் வழங்கப்பட்ட ஒப்படைகளை ரத்து செய்வதற்கான நடவடிக்கையும் அரியலூர் கோட்டாட்சித் தலைவரால் எடுக்கப்பட்டு வருகிறது.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையைப் படித்தேன். இந்த அறிக்கையில், நடப்பு ஆண்டில், 1396 பசலியில் நடந்த ஊழல் முற்றிலும் மறைக்கப்பட்டு, பொய்யான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசு அதிகாரிகளும், மற்ற செல்வந்தர்களும் அரசு நிலங்களைப் பட்டா போட்டுக் கொண்டதற்குரிய ஆதாரங்களைக் கையிலே வைத்துக் கொண்டுதான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூற ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் அவையின் கண்ணியம் கருதி, பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை. ஆதி திராவிடர் நெற்குணம் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 300.86 ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஆதி திராவிட மக்களால் பயிரிடப்பட்ட நிலங்கள் எல்லாம் பெரும் செல்வந்தர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அவர்களால் கையகப்படுத்தப்பட்டு, பயிர் செய்யப்படுகிறது, மேலும் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் அரசு அதிகாரிகளால், உயர் அதிகாரிகளால் பட்டா பெறப்பட்டு, முற்றிலும் தரிசாக இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுப்படையாகக் கேட்டிருக்கிற அந்தக் கேள்விக்கு இருக்கிற சூழ்நிலைகள் இங்கே விளக்க அறிக்கையாகத் தரப்பட்டிருக்கிறது. இந்த விளக்க அறிக்கையைப் பொறுத்துத்தான் நாம் இங்கே கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்க முடியும். அவர்கள் விளக்க அறிக்கையை வைத்துக்கொண்டு, இதிலே சொல்லப்பட்டிருப்பது தவறாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களிடத்தில் இருக்கும் குறிப்புகள் இதில் சொல்லப்படாமல் இருந்தாலும் சரி, அவற்றை எல்லாம் சேர்த்து, 2, 3 நாட்களில் எனக்கு விண்ணப்பமாகத் தந்தார்களானால் அதன்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும். இந்த அறிக்கையை வைத்துக் கொள்ளுங்கள். இதில் ஒரு அதிகாரிக்கும் தரப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள், அதிகாரிகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். யார் யாருக்கு என்று சொல்லுங்கள். 'நிலச்சுவாந்தார்கள் 2 பேர்களுக்கு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 2 பேருக்கு மேல் இருந்தால் யார் யார் என்று சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும். பொதுவாக எடுத்துச் சொன்னால் பொதுவாகத்தான் பதில் சொல்லுவார்கள். இந்த அறிக்கையை வைத்துக்கொண்டு, அவர்களிடமுள்ள குறிப்புகளை வைத்துக்கொண்டு, விண்ணப்பம் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுத்து, உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும்.

**(ஆ) திருமங்கலத்தில் நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதில் தாமதம்.**

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, "திருமங்கலம் நகருக்கு சோழவந்தானிலிருந்து வைகைக் குடிநீர் கொண்டு வந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இன்னும் கட்டாததால், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியில் பொது மக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் கிடைக்காமல் அப்பகுதியில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருமங்கலம் நகருக்காக குடிநீர்த் திட்டத்தின் கீழ் 7 லட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி பற்றிய வேலை உத்தரவு ஒப்பந்தக்காரருக்கு 7—11—1985-ல் வழங்கப்பட்டது. நீர்த் தேக்கத் தொட்டி வேலை ஓரளவு முடிக்கப்பட்டு, மீதி வேலைகளை முடிப்பதில் நீண்ட தாமதம் காணப்பட்டது. எனவே மீண்டும் 27—10—1986-ல் ரத்து செய்யப்பட்டது.

திரு. பல்தசார் என்கிற ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இப்போது குடிநீர் சுமார் 8.1 இலட்சம் லிட்டர் தினமும் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் நகரத்திலே பெரும்பாலும் நிலத்தடி நீராக சுண்ணாம்பு கலந்த நீராகவும், சவுடு நிறைந்த நீராகவும் இருக்கின்ற காரணத்தினாலேதான் நம்முடைய பெரு முயற்சியினாலே சற்றேறக்குறைய ரூ. 9 லட்சம் செலவிலே சோழவந்தானிலிருந்து குடிநீர் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலிலே மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுகின்ற பணி ஓரளவுக்கு முடிக்கப்பட நீண்ட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று அவரே ஏற்றுக் கொள்கிறார்கள். நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குக் கொடுத்த அறிக்கையிலே 1—11—1984லே இருந்தே முன்னோடி குடிநீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக அவர்களே ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். 1—11—1984லே குடிநீர் விநியோகிக்கப்பட்ட பின்னர் ஓராண்டுக்குப் பின்னாலே 7—11—1985லேதான் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுகின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், திருமணமாகி கணவன் மனைவியாக இருக்கின்றவர்களுக்கு மணமக்களாக இருக்கும் காலத்திலே செய்ய வேண்டிய நிச்சயதார்த்தம் திருமணம் ஆகி பல ஆண்டுகளுக்குப் பின்னாலே நடைபெறுவதுபோல இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்விக்கு வர வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** கேள்விக்குத்தான் வருகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. என்.எஸ்.வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ரொம்ப முக்கியமான விஷயம். "It is not a joke at all" பல ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்டிருக்க வேண்டிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டக் கால தாமதம் ஏற்படக் காரணம் என்ன? நீண்ட கால தாமதம் ஏற்பட காரணம் என்ன? அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்படாத காரணத்தினாலேயே பொது மக்களுக்கு, தேவையான அளவுக்குத் தண்ணீரைக் கொடுக்க முடியவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். ஆகவே உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நடந்தவை நடந்தவையாக இருந்தாலும்கூட. இப்போது இருக்கின்ற அறிக்கையிலே 7-வது மாதத்திற்குள்ளே கட்டி முடிக்கப்படும் என்று சொல்கின்ற காரணத்தினாலே, இதற்கு முன்னாலே என்னால் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே சென்ற ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்படும் என்று அப்போது இருந்த குடிநீர் வாரியத்துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்துவிட்டு பல காலம் ஆன காரணத்தினாலேயும், இப்போது குறிப்பிட்டுள்ள காலத்திற்குள்ளேயாவது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிச்சயதார்த்தம் என்று வைத்துக்கொள்வது அவர்களது வசதியைப் பொறுத்ததே தவிர வேறல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்யாணத்திற்கு முன்னாலேதான் வைத்துக் கொள்வார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்யாணத்திற்கு முன்னாலேயும் வைக்கலாம், பின்னாலேயும் வைக்கலாம். அது குடும்ப விவகாரம். தனியாக வந்தால் சொல்கிறேன் எப்படி என்று.



1987 மார்ச் 26]

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலேதான் வைப்பார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில குடும்பங்களிலே பின்னாலே வைப்பது உண்டு. வேண்டுமென்றால் என்னிடம் நேராக வந்தால் உங்களுக்கு சொல்கிறேன். தண்ணீர் எப்படி வருகிறது என்பதுதான் பிரச்சினை. 8.1 லட்சம் லிட்டர் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறோம். அது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி வழியாக வந்தாலும் தண்ணீர் தான். தரை மூலமாக வந்தாலும் தண்ணீர்தான். இந்த ஏழாம் மாதத்திலே உங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி நானே வந்து திறந்து வைக்கிறேன்.

### (இ) சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதய பரிசோதனைப் பிரிவு துவங்க கருவிகள் மற்றும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டும் போதிய பணியாளர்கள் நியமனம் செய்யாத காரணத்தினால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

14—2—1983ல் சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தினால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு. சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு எக்ஸ்ரே பிரிவு துவங்குவதற்குத் தேவையான கருவிகள் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. அவ்வாறே அச்சங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியைக்கொண்டு எக்ஸ்ரே பிரிவிற்கான தேவையான கருவிகள் வாங்கப்பட்டன. எனவே இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதயப் பரி

[திரு. ப. உ. சண்முகம்] [1987 மார்ச் 26

சோதனைப் பிரிவு மற்றும் பரிசோதனைப் பிரிவு ஆகியவைகள் செயல்படுவதற்குத் தேவையான கீழ்க்கண்ட பணியிடங்களை தோற்றுவித்து சமீபத்தில் அரசு ஆணை வெளியிடப் பட்டுள்ளது :—

1. கதிர் வீச்சாளர்—ஒன்று.
2. இருட்டறை உதவியாளர்—ஒன்று.
3. இ.சி.ஜி. நுட்பனர்—ஒன்று.
4. பரிசோதனைக்கூட நுட்பனர், தகுதி II—ஒன்று.
5. அலுவலக உதவியாளர்—ஒன்று.

எனவே சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதய பரிசோதனைப் பிரிவு மற்றும் பரிசோதனைப் பிரிவு ஆகியவைகள் விரைவில் செயல்படத் தொடங்கும். எனவே இது குறித்து பொது மக்களிடையே எந்தவித அவல நிலையும் இருக்கத் தேவையில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, பணியாளர்கள் நியமிக்கப்பட்ட குறிப் பினைப் பார்த்தேன், நன்றி. அதிலே பரிசோதனை கூடத்திற்கு 3 பணியாளர்கள் தேவை என்று எழுதியிருக்கின்றார்கள். ஆனால் ஒரே ஒரு பணியாளர் நியமித்து இப்போது உத்தரவு வழங்கப்பட் டிருக்கின்றது. மேற்கொண்டு 2 பணியாளர்கள் நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? இந்த மருத்துவ மனை, தென் சென்னை பகுதியிலே அதிகமான நோயாளிகள் வருகின்ற மருத்துவ மனை யாகும். எனவே இதை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக விரிவுபடுத்துகின்ற திட்டத்தினை பல முறைகள் அறிவித்தும் இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. எனவே அங்கு 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருவிகள் வாங்கப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்படுவது பற்றி கேட்டிருந்தார்கள். அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். அங்கு படுக்கைகள் அதிகப்படுத்துவது பற்றி கேட்டிருக்கின்றார்கள். அதற்குத்



1987 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

தனிக் கேள்வி போடும்படி தெரிவித்துக்கொள்கிறேன். பரிசோதகர் 3 பேர்கள் நியமிப்பது பற்றி சொல்கின்றார்கள். தற்போது ஒருவர் போடப்பட்டிருக்கின்றார். அங்கே நடக்கின்ற வேலைகளைக் கருத்திற்கொண்டு வேண்டுமென்றால் நியமிக்கிறோம்.

(முற்பகல் 11-20)

### (ஈ) கிருஷ்ணகிரி வட்டத்தில் யானைகளால் மக்களுக்கும் பயிர்களுக்கும் சேதம்.

**திரு. க. இரா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி வட்டம், ஆலப்பட்டி, மகராஜ கடை, கங்கலேரி போன்ற கிராம பகுதிகளில் காட்டு யானைகள் சுற்றிக்கொண்டு பொதுமக்களை துன்புறுத்தியும், நெல், வாழை போன்றவைகளை நாசமாக்குவதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாடு எல்லைக்கு அருகில் உள்ள கர்நாடக மாநில காடு களில் இருந்து யானைக் கூட்டம் ஒன்று ஓசூர் கோட்டம், அன் செட்டி சரகம், கம்பம் பகுதியிலும் ஆந்திர மாநிலம் சித்தூர் கோட்டம், பலமநேர் மற்றும் வேலூர் கோட்டம், குடியாத்தம் காடுகளிலும் 1983 ஆம் ஆண்டு முதல் நடமாடுவதும், அக்கூட்டம் மக்களுக்குத் துன்பம் விளைவிப்பது மற்றும் பயிர்களைச் சேத மாக்குவது குறித்தும் தமிழ்நாடு வனத் துறைக்கு தகவல் இருந்து வருகிறது. வறட்சியின் காரணமாக, கர்நாடக மாநிலக் காடு களிலிருந்து, யானைகள் தீவனம் மற்றும் தண்ணீர் தேடி கூட்ட மாக வெளியே வருகின்றது. அவ்வாறு இந்த யானைக் கூட்டம் கடந்த ஆறு ஏழு மாதங்களாகவே, தர்மபுரி மாவட்டம் மற்றும் ஆந்திர மாநிலக் காடுகளில் உலவிக்கொண்டு வருகிறது. அவ்வப் போது காடுகளுக்கு அருகாமையில் வசிக்கும் மக்களுக்கும், விளைந்துள்ள பயிர்களுக்கும் இக்கூட்டம் சேதம் விளைவிக் கின்றது.

2. 1985 ஆம் ஆண்டில், இந்த யானைக் கூட்டம் ஆந்திர மாநிலப் பகுதிகளில் காணப்பட்டது என்றும், அங்கு சேதங்கள் விளைவித்தது என்றும் தமிழ்நாடு வனத்துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இப்பிரச்சினை குறித்து, ஆந்திர மாநில அதிகாரிகளுடன் விவாதிக்கப்பட்டு இந்த யானைக்கூட்டத்தை அதன் பழைய இடத்திற்கே துரத்திச் சென்று விடுவது என்று முடிவெடுக்கப்பட்டது. இப்பிரச்சினை குறித்து தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் அவர்களும், ஆந்திர மாநில வனத்துறை அமைச்சர் அவர்களும் 27—12—1986 அன்று சந்தித்து உரையாடினார்கள். இது சம்பந்தமாக, மேலும் விவாதிக்க ஆந்திர மாநில அரசு திருப்பதியில் கூட்டம் ஒன்று கூட்ட உத்தேசித்துள்ளது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு வனத்துறைத் தலைவர் மற்றும் தலைமை வனவிலங்குக் காப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். யானைகள் தாமாக வந்து எவரையும் தாக்குவது கிடையாது. மக்களின் அறியாமையாலோ, அல்லது அவற்றை துன்புறுத்தினாலோ இன்றி அது யாரையும் தாக்குவதில்லை.

3. பொதுவாக, யானைகள் நடமாட்டம் பற்றி அறிந்தவுடன் வனத்துறையினர் பொதுமக்கள் உதவியுடன் பட்டாசுகள் கொளுத்தியும், தீப்பந்தங்கள் காட்டியும், பறை அறைந்தும் யானைகளை மீண்டும் காட்டிற்குள் விரட்டிவிட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். யானை நடமாட்டம் உள்ள இடங்களுக்கு அருகில் வாழும் மக்களை, எச்சரித்து கவனமாக இருக்கும்படி தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது. யானைகள் பெரிய கூட்டமாகவோ, அல்லது சிறிய கூட்டமாகவோ பிரிந்து தீவனம் மற்றும் தண்ணீருக்காக அலைதல் இயல்பு. இந்த யானைகளுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்யும் வகையில் தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க ரூ. 10 இலட்சம் செலவில் விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. யானை, காடி போன்ற காட்டு விலங்குகள் தாக்கி மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்நேர்வில் யானைகளால் பயிர்கள் சேதமுற்று அதனால் நட்டம் அடைந்த விவசாயிகளுக்கு ஈடு தொகை வழங்க மாவட்ட வன அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறார்.





**திரு. க. இரா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் உண்மைக்குப் புறம்பாக சொல்லியிருக்கிறார்கள். இது வரை இரண்டு பேர் யானையால் தாக்கப்பட்டு அந்தப் பகுதியில் இறந்திருக்கிறார்கள். அதுபற்றிய விவரம் ஒன்றும் இல்லை. அந்தப் பகுதியிலே காட்டு யானைகளால் தென்னங் கன்றுகள், வாழை, கரும்பு போன்றவைகள் அழிக்கப்பட்டிருந்தால் நஷ்ட ஈட்டுத்தொகை வழங்க மாவட்ட வன அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கூட அந்தப் பகுதிக்கு வந்து சுற்றிப் பார்க்கவில்லை. விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பவை உண்மைக்கு மாறாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலேயிருந்து அந்த யானைகளை, யானைகள் வாழ்கிற பகுதியான பெண்ணகரத்துக்கும், அஞ்சட்டிக்கும் அனுப்பி வைக்க வன இலாகா அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும். அதுபோல ஆந்திர பகுதிக்கு 22 யானைகளையும், அஞ்சட்டி பகுதிக்கு 9 யானைகளையும் அனுப்பி வைக்க முயற்சி எடுக்க வேண்டும். தண்ணீருக்காகத்தான் அந்த யானைக் கூட்டங்கள் அந்தப் பகுதிக்கு வந்து மக்களுக்கு துன்பம் தருவதாக சொல்கிறார்கள். அப்படி என்றால் 6 மாதங்களுக்கு முன்பு நல்ல மழை பெய்த நேரத்திலும் கூட்டமாக வந்துள்ளனவே. ஆகவே, தண்ணீருக்காக வந்தன என்பது சரியல்ல. ஆகவே, விவசாயிகளுக்கு பாதிப்பை உண்டாக்கும் வகையில் இது இருப்பதால் அந்த யானைகளை ஏற்கெனவே யானைகள் கூட்டம் கூட்டமாக வாழ்கிற பகுதிக்கு உடனடியாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யானைகள் கூட்டமாக தண்ணீருக்காக மாத்திரமல்லாமல் உணவுக்காகவும் வெளியே வருவது உண்டு. அப்படி அவைகள் வருகிறபோது கிராமத்திலுள்ள கேழ்வரகு, வாழை, தென்னம் போன்றவைகளை பாழ் செய்கின்றன. அவைகள் எந்தெந்த இடங்களில் இம்மாதிரி பயிர்களை பாழ் செய்திருக்கின்றனவோ அந்த இடங்களைப் பற்றிய விவரங்களை

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 மார்ச் 26

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமும், வன இலாகா அதிகாரிகள் மூலமும் விவரமாக கணக்கெடுத்து நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 9—6—1986-ல் இருந்து இதுவரை சுமார் 10 பேர் யானைகளால் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள். தமிழக பகுதியில் காட்டு யானைகள் கூட்டமாக வந்தால் வன இலாகா அதிகாரிகளும், கிராம மக்களும் பட்டாசுகள் கொளுத்தியும், தீப்பந்தங்கள் காட்டியும், பறை அறைந்தும் மீண்டும் காட்டிற்குள் விரட்டுகிறபோது அவை ஆந்திர பகுதிக்கு செல்கின்றன. உடனே சம்பந்தப்பட்ட ஆந்திர வன இலாகா அதிகாரிகள் இங்குள்ள யானைகளை அங்கே விரட்டுகிறீர்களே, ஆந்திராவில் இந்த யானைகளால் எங்களுக்கு தொந்தரவாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள். இதுபற்றி ஆந்திர வன இலாகா மந்திரி கூட என்னிடம் பேசினார்கள். மீண்டும் உயர் மட்டத்தில் தமிழக வன இலாகா அதிகாரிகளும், ஆந்திர வன இலாகா அதிகாரிகளும் திருப்பதியில் விரைவில் கூடி விவாதித்து பிரச்சினைக்கு முடிவு காண ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் யானைகள் தொல்லை தராமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (உ) கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு உதவிகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் டாக்டர் தே. குமாரதாஸ், கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரையன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூக நலத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு ரூபாய் 2,000 உதவித் தொகை வழங்க அறிவிக்கப்பட்டும் இது தொடர்பாக உதவி கேட்டுச் சென்றால், உரிமம் பெற்றவர்களுக்கு மட்டுமே உதவித்தொகை வழங்கப்படும் என்று கூறப்படுவதால், பல்லாயிரக்கணக்கான பனையேறும் தொழிலாளர்கள் பாதிக்கப்



1987 மார்ச் 26] [டாக்டர் தே. குமாரதாஸ்]

பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூக நலத் துறை மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

அரசு ஆணை (நிலை) எண் 5, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 8—1—1987-ன் வழி, கள் இறக்கி வேலையற்றோருக்கு மட்டும் நிவாரணம் அளிக்கும் வகையில் நபர் ஒன்றுக்கு ரூ. 2,000 வீதம் 30,000 பேருக்கு நிதி வழங்க அரசு அனுமதித்து உள்ளது.

2. பகுதி மதுவிலக்கினால் கள் இறக்கும் தொழிலாளர்களாகிய 30,000 பேர் வேலை வாய்ப்பை இழப்பதால், அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்காக அரசு இந்த நிவாரணத் தொகையை அளித்தது. தமிழ்நாட்டில் கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் 1·28 இலட்சம் தொழிலாளர்கள் பதநீர் இறக்கும் தொழிலிலும், 1·51 இலட்சம் பேர்கள் பதநீரிலிருந்து கருப்பட்டி காய்ச்சுவதிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஏற்கனவே பதநீர் இறக்கி கருப்பட்டி காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டுள்ளதால், இவர்களுக்கு நிவாரணத் தொகை அளிக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அதிகாரிகளிடமிருந்து கள் இறக்க உரிமம் பெற்றோரின் பட்டியலைப் பெற்று, மாவட்ட அளவில் கீழ்க்காணும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு, நிதி பெற தகுதி உடையோரின் பட்டியல் முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(1) உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்)

(2) சம்பந்தப்பட்ட தாலுக்கா மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அதிகாரி

(3) சம்பந்தப்பட்ட ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவுச் சங்கத் தலைவர்.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 மார்ச் 26

மேற்கண்ட மூன்று நபர் அடங்கிய குழு இந்த பட்டியலை வைத்து எல்லா ஊர்களுக்கும் சென்று, உண்மையாக கள் இறக்கி வந்த தொழிலாளர்களை இனம் தெரிந்து 30,000 நபர்களுக்கு நிதி வழங்க ஒரு பட்டியலை அனுப்பியுள்ளது. இந்தக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1,000 மானியமாக, ரூ. 1,000 (கடனாக) பதநீர் இறக்கி கருப்பட்டி செய்வதற்கு தேவையான உபகரணங்களாக கொடுக்க தேவையான நடவடிக்கை வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

4. கள் இறக்கும் தொழிலாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக கள் இறக்கி வந்ததால், அவர்கள் கருப்பட்டி காய்ச்சும் தொழிலை விட்டுவிட்டார்கள். அதனால் அவர்களிடம் கருப்பட்டி காய்ச்சுவதற்கான உபகரணங்கள் இருக்க வாய்ப்பு இல்லை. தமிழக அரசின் பகுதி மதுவிலக்குக் கொள்கையினால் கள் இறக்கும் தொழிலாளர்கள் மறுபடியும் பதநீர் இறக்கி கருப்பட்டி காய்ச்சுவதற்கு ஏற்றதாக அவர்களுக்கு கொப்பரை, டிரம், குடம், அரிவாள், அச்சுப்பலகை, மரத்துடுப்பு, கரண்டி, ஏணி ஆகிய உபகரணங்கள் வாரியத்தால் வாங்கி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. ஆகவே, கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு ரூ. 2,000 உதவித் தொகை வழங்குவதில் மற்ற பனை ஏறும் தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கக் கூடிய குறிப்பில் 30,000 பேர் என்றும், 2,000 ரூபாய் வீதம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இங்கே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருப்பது என்னவென்று சொன்னால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கூட பனையிலிருந்து கள் இறக்குகின்ற தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் என்கின்ற திட்டம் கிடையாது. பனை மரங்களுக்குத்தான் லைசென்ஸ் என்கின்ற ஒரு உரிமம் வைத்திருந்தார்கள். அதை மாற்றி பிறகு கள் இறக்குகின்றவர்களுக்கும் உரிமம் இருக்க வேண்டுமென்று கொண்டு வந்தார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே பனையிலிருந்து பதநீராகத்தான் இறக்குகிறார்களே அல்லாமல் கள்ளாக இறக்கப்படுவதில்லை. பதநீராக இறக்கி அதற்குப் பிறகு அதைப் பிரித்து கள்ளாக அவர்கள் பதப்படுத்திக் கொள்கின்றார்கள். ஆக, பதநீர் இறக்குகின்ற தொழிலாளர்கள் கூட இப்பொழுது ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் பதநீரை இப்பொழுது இறக்கி அதைக் கருப்புக் கட்டியாகச் செய்து தரலாம் என்று சொன்னால் குறைந்தபட்சம் ஒரு கிலோவிற்கு அடக்க விலையாக பத்து ரூபாய்க்கு விறகே ஆகி விடுகிற சூழ்நிலை. (மணியடிக்கப்பெற்றது).



1987 மார்ச் 26] [டாக்டர் தே. குமாரதாஸ்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமகனுக்கு இவைகளைப் பற்றித் தெளிவாகத் தெரிவதற்கான வாய்ப்பிருக்காது. அதிகாரிகள் சொல்வதை வைத்துக்கொண்டு பதில் சொல்வார்கள். அதனால் அவர்களும் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காகக் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டிமாண்டிலே பேசலாம். இப்பொழுது கேள்வியாகக் கேளுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எனவே இந்தக் குறையை அமைச்சரவர்கள் கவனத்திற்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தின் மற்றப் பகுதிகளிலும் பதநீர் இறக்கி அதைக் கள்ளாக ஆக்குகின்ற ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினால் பதநீர் இறக்குகின்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் 2,000 ரூபாய் என்பதை 5,000 ரூபாயாக உயர்த்தி அவர்களுக்கு நிவாரணம் வழங்க முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்கி அதைக் கள் ஆக்குவது என்பது அல்ல. பதநீர் என்பது குடிப்பதற்காக இறக்கப்படுகிறது. அதிலிருந்து பனை வெல்லம் காய்ச்சப்படு

கிறது. கள் என்பது மது விலக்கு தடை அல்லது நீக்கப்பட்டி ருந்தபொழுது இறக்கப்பட்டு வந்தது. அந்தக் கள் இறக்குகின்ற தொழிலாளர்கள்தான் இந்த மதுவிலக்கினால் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள் என்பதனால் அந்தக் கள் இறக்குகின்ற தொழிலா ளர்கள் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் உதவித் தொகை வழங்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இந்த இரண்டாயிரம் ரூபாயை, 1000 ரூபாய் மானியமாக வும், 1,000 ரூபாய் கடனாகவும் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கணக்கை எடுப்பதற்கு மூனறு நபர்கள் கொண்ட ஒரு குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்பட்டு அதைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, 30,000 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள் விவர அறிக்கையில். இந்தக் கணக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை. குமரி மாவட்டத்திலேயே பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். 16,000 நபர்கள் வரை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தகவல். இந்த நிலைமையில் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சரியாக இருக்காது என்ற காரணத்தினால் அது சம்பந்தமாக சரியான விவரங்களைச் சேகரிப்பதற்கும், எண்ணிக்கையை எடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஏற்கனவே இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள், மரம் ஏறக் கூடியவர்கள் லைசென்ஸ் வாங்குவது இல்லை. ஆகவே, லைசென்ஸ் என்ற ஒரு பிரச்சினையை இங்கே ஆதாரமாக வைக்காமல், பாதிக்கப் பட்டவர்களின் யதார்த்தமான கணக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு அதில்கூட ஒரு மோசடி நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கடைக்காரர்கள் 15 சதவீதம் இந்த ஊழியர்களை வைத்துக்கொள்ள லைசென்ஸ் வழங்கப்படுகிறது ஆனால் அந்தக் கடைக்காரர்கள் இன்றைக்கு யதார்த்தமாக பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கான [illegible] கடைக் கொடுக்காமல் அவர்களுக்கு வேண்டிய ஒருசிலருக்கு மாற்றிக் கொடுக்கின்ற காரணத்தினால் இந்த ஊழியர்கள் பாதிக்கப்







படுகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதனால் இது சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவைக்கொண்டு யதார்த்தமாகப் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 1.28 இலட்சம் தொழிலாளர்கள் பதநீர் இறக்கும் தொழிலிலும், 1.51 இலட்சம் பேர்கள் பதநீரி லிருந்து கருப்பட்டி காய்ச்சும் தொழிலிலும் ஈடுபட்டிருக் கிறார்கள். இது அல்லாமல் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டி ருக்கின்ற தொழிலாளர்களுக்குத்தான் நாம் மதுவிலக்கு அமலில் வந்ததிலிருந்து பாதிக்கப்பட்டவர்களாகக் கருதி அவர்களுக்கு இந்த நிவாரணத் தொகையை வழங்க இருக்கிறோம். அப்படி வழங்க இருக்கிற அந்த நபர்களின் அடையாளத்தைக் கடைக் காரர்களைக் கொண்டு நாங்கள் கணக்கெடுப்பதில்லை. அவர் களைக் கணக்கெடுப்பதற்கு கதர் கிராமத் தொழில்களினுடைய உதவி இயக்குநரும், சம்பந்தப்பட்ட தாலுக்கா மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அதிகாரியும், சம்பந்தப்பட்ட ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கத்தினுடைய தலைவர் ஆகியவர்களைக் கொண்ட குழு இருக்கிறது. அவர்கள் கூடித்தான் இதுபற்றி முடிவு செய்கிறார்களே தவிர எந்த தனியாரும் அல்லது கள் முதலாளியும் பார்த்து கணக்கிடவில்லை. ஆகவே கணக்கெடுப்பது சம்பந்தமாக தவறு வருவதற்கு இடமிராது என்று கருதுகிறேன். அந்த வகையில் 30,000 கள் இறக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மேலும், யாராவது எங்காவது விடப்பட்டிருந்தால், உண்மையிலே பாதிக்கப்பட்டிருந்தால் அவர் களையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள அரசு பரிசீலனை செய்யும்.

## 5. அறிவிப்புகள்.

### (அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987-88 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது:

"In pursuance of Article 206, Clause 2, read with Article 203, Clause 3 of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1987-88."

## 6. முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88—வாக்கெடுப்பு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-88 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24—3—1987 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1987-88 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக மொத்தமாக ரூபாய் 1,100 கோடியே 15 இலட்சத்து 95 ஆயிரத்துக்கு மேற்படாத தொகை அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற்றன.



### நிறைவேற்றப்பெற்ற 1987-88 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| A. | வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 1. | நில வரித் துறை | 6,70,85 |
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை | 1,87,66 |
| 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் | 1,26,36 |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் | 6,55,14 |
| 5 | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் | 41,53 |
| 6 | பத்திரப் பதிவு | 2,77,58 |
| 7 | மாநிலச் சட்ட மன்றம் | 56,49 |
| 8 | தேர்தல்கள் | 23,62 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் | 13,87,06 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் | 77,74 |
| 11 | மாவட்ட நிர்வாகம் | 16,90,86 |
| 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் | 1,49,55 |
| 13 | நீதி நிர்வாகம் | 6,43,62 |
| 14 | சிறைச்சாலைகள் | 3,92,66 |
| 15 | காவல் துறை | 39,29,25 |
| 16 | தீயணைப்புப் பணிகள் | 2,93,19 |
| 17 | கல்வி | 98,94,52 |
| 18 | மருத்துவம் | 46,83,55 |
| 19 | பொது சுகாதாரம் | 24,68,32 |
| 20 | வேளாண்மை | 45,86,05 |
| 21 | மீனளம் | 2,31,48 |

[1987 மார்ச் 26

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 22 | கால்நடை வளர்ப்பு | 10,71,75 |
| 23 | கூட்டுறவு | 12,57,84 |
| 24 | தொழில்கள் | 2,58,82 |
| 25 | சின்கோனா | 1,23,63 |
| 26 | கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 6,52,90 |
| 27 | சுரங்கத் தொழில் | 1,25,65 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் | 64,18,96 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 9,87,72 |
| 30 | சமூக நலன் | 30,72,99 |
| 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 17,03,66 |
| 32 | பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 4,54,11 |
| 33 | வீட்டு வசதி | 10,09,08 |
| 34 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 11,40,26 |
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 51,52,02 |
| 36 | பாசனம் | 25,44,39 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,16,58 |
| 38 | பொதுப் பணியும்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | 8,60,34 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 30,50,32 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 1,87,97 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 19,91 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 37,42,46 |
| 43 | பல்வகை | 72,96,39 |



1987 மார்ச் 26]

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 44 | எழுதுபொருள்—அச்சுத்துறை | 6,43,84 |
| 45 | காட்டுவளத் துறை | 5,52,84 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 10,20,69 |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,15,21 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 4,63,71 |
| 49 | குடிநீர் வழங்கல் | 39,26,23 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு | 9,04,37,00 |
| **B.** | **வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.** | |
| 50 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 98,41 |
| 51 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 3,35,89 |
| 52 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 21,81,23 |
| 53 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 19,08,05 |
| 54 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 11,33,75 |
| 55 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 23,66 |
| 56 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 7,53,41 |
| 57 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 73,62 |
| 58 | பல்வகை மூலதனச் செலவு | 4,16,95 |
| | மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | 69,24,97 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

69 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் 1,26,53,98

பெரு மொத்தம் 11,00,15,95

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) இறுதித் துணை நிதி அறிக்கை, 1986-87.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986-87 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 206, Clause 2, read with Article 203, Clause 3, of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further grants for the year 1986-87."

8. இறுதித் துணை நிதி அறிக்கை, 1986-87—வாக்கெடுப்பு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986-87 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24—3—1987 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை, 1986-87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற்றன.

நிறைவேற்றப்பட்ட 1986-87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| A. | வருவாய் கணக்கில் செலவு— | |
| 1 | நில வரித் துறை | 1 |
| 2 | மாநில ஆயத் தீர்வை துறை | 37,17 |
| 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் | 1 |

[1987 மார்ச் 26

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| A. | வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் | 1,10,26 |
| 7 | மாநிலச் சட்ட மன்றம் | 1 |
| 8 | தேர்தல்கள் | 57,28 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 2,52,20 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் | 2,91 |
| 11 | மாவட்ட நிர்வாகம் | 6,66,01 |
| 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் | 25,57 |
| 13 | நீதி நிர்வாகம் | 1,13,98 |
| 14 | சிறைச்சாலைகள் | 2,90,88 |
| 15 | காவல் துறை | 12,59,34 |
| 16 | தீயணைப்புப் பணிகள் | 55,45 |
| 17 | கல்வி | 58,30,19 |
| 18 | மருத்துவம் | 3,39,92 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 1,17,12 |
| 20 | வேளாண்மை | 24,88,20 |
| 21 | மீனளம் | 2,43 |
| 22 | கால்நடை வளர்ப்பு | 16,15 |
| 23 | கூட்டுறவு | 11,41,05 |
| 24 | தொழில்கள் | 2,65,32 |
| 25 | சின்கோனா | 19,87 |
| 26 | கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 19,60,23 |
| 27 | கதர்த் தொழில் | 2,67,34 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் | 21,00,04 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 9,20,37 |



1987 மார்ச் 26]

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| A | வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 30 | சமூக நலன் | 4,19,36 |
| 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 11,18,87 |
| 32 | பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 1 |
| 33 | வீட்டு வசதி | 5,17,33 |
| 34 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 56,18 |
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 4 |
| 36 | பாசனம் | 14,77,23 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,39,48 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | 1,01,53 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 7,88,25 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 86,32 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 3,46,74 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 49,08,64 |
| 43 | பல்வகை | 16,73,98 |
| 44 | எழுதுபொருள்—அச்சுத்துறை | 2 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 9,61,20 |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,07,70 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 2,58,52 |
| 49 | குடிநீர் வழங்கல் | 5 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு | 3,13,00,76 |

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| B. | வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு— | |
| 50 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 1,08,83 |
| 51 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,07,74 |
| 52 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 3,50,87 |
| 53 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 10 |
| 54 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 1,78,65 |
| 55 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1 |
| 56 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 8,72 |
| 57 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 4,07,83 |
| 58 | பல்வகை மூலதனச் செலவு | 8,06,54 |
| மொத்தம்—B. | வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 19,69,34 |
| C | கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்— | |
| 59 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 78,58,56 |
| | பெரு மொத்தம் | 4,11,28,66 |

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் செய்யப்பெற்றிருக்கிறது.

9. வரவு-செலவுத் திட்டம், 1987-88—பொது விவாதம்—(தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைய விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 20 பேர் பங்கெடுத்துக் கொள்வதற்காகப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே பேசுகின்ற உறுப்பினர்கள் எக்காரணம் கொண்டும் 10 நிமிடத்திற்கு மிகாமல் உரையை நிகழ்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பருவமழை பொய்த்த காரணத்தால் தமிழகம் பூராவும் இன்றைய தினம் பல்வேறு மாவட்டங்களில் வறட்சி நிலவிக்கொண்டு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடுகிற மாவட்டம். தற்போது பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் காவிரியில் சரியாக தண்ணீர் வரவில்லை. அப்படி தண்ணீர் வராத காரணத்தால் அங்கே பயிர்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை.

[திரு. எஸ். இராசாராமன்] [1987 மார்ச் 26

அப்படிப் பாதுகாத்தாலும் கூட விளைவு சற்று குறைவாகத்தான் இருக்கிறது. இன்றையதினம் அந்தப் பகுதி பூராவும் வறட்சி தாண்டவம் ஆடுகிற காரணத்தால் தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக உடனடியாக அறிவிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அளவுக்கு வறட்சி இருந்தாலும் விவசாயப் பெருமக்கள் விளைவிக்கிற விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. கரும்பு, நெல், பருத்தி போன்ற பயிர்களுக்கு உரிய விலையை நிர்ணயிக்கவேண்டும். மிகவும் கஷ்டப்பட்டு விளைவிக்கிற இந்தப் பொருட்களுக்கான விலையை அரசாங்கம் கூட்டிக் கொடுக்க வேண்டும். நெல்லை அரசாங்கத்திலே கொடுக்கின்றபோது அதற்கு போனஸ் வழங்குகிறார்கள். அந்த போனசை கடனாகவும், உரமாகவும் வழங்குகிறார்கள். அவ்வாறு அளிப்பதை மாற்றி, பணமாகவே அந்த போனசை கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மின்னிணைப்பு கொடுக்கவேண்டும். விவசாயிகள் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தங்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்காக மின்னிணைப்பு வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தாலும் கூட இன்னும் அவர்களுக்கு மின்னிணைப்புகள் கிடைக்கவில்லை. எனவே உடனடியாக தவணை இல்லாமல், காலம் கடத்தாமல் மின்சார இணைப்புகளை விவசாயம் செய்கிற விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல. காவிரியில் சரியாகத் தண்ணீர் வராத காரணத்தால் அங்கே பம்ப்செட் வைத்துத்தான் இன்றையதினம் விவசாயம் செய்யக் கூடிய நிலைமைக்கு தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் பம்ப் செட்கள், மோட்டார்கள் போன்ற **விவசாயக் கருவிகளை** மானிய விலையில் கொடுக்க இந்த அரசு வழிவகை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியாக இருக்கிற இந்தக் காலகட்டத்தில் வரிவசூல் கெடுபிடியாக இருக்கிறது. கடன் வசூலும் கெடுபிடியாக இருக்கிறது. வரிவசூலைத் தள்ளுபடி செய்யவேண்டும். இல்லை என்றால் ஒத்திவைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 26] [திரு. எஸ். இராசாராமன்]

சென்ற ஆண்டு இந்த அவையிலே, தஞ்சை மாவட்டத்திலே விவசாயக் கல்லூரியைத் திறப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் திறந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் தஞ்சை மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக ஆடுதுறைப் பகுதியில் விவசாயக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மத்திய அரசு வழங்குகிற என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. போன்ற கடன்களில் ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தக் கடன்கள் ஒழுங்காக, பொருளாதாரத்தில் நலிந்திருக்கின்ற ஏழை எளியவர்களுக்குச் சென்று சேரவில்லை. அதையெல்லாம் கண்காணிப்பதற்கு ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதேபோல் ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக சமூக நலக் காடுகளை வளர்க்க வேண்டுமென்று இந்த அரசு 3.73 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக இன்றையதினம் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலும், ஊராட்சியிலும் இந்தக் கன்றுகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கன்றுகள் நடப்பட்டதாகத் தெரியவில்லை. அதோடு மட்டுமல்லாமல் அந்த கன்றுகள் அத்தனையும் நடாமலேயே நடப்பட்டதாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அதற்கான தொகையை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாநிலம் முழுவதும் சேர்த்து சொன்னால் எப்படி? ஸ்பெசிபிக்காகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எந்த ஊராட்சி ஒன்றியத்தில் எந்த இடத்தில் நடவில்லை என்று குறிப்பிட்டு தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்கலாம். அதிலே ஒன்றும் தாட்சண்யம் கிடையாது. தாராளமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எஸ். இராசாராமன் :** குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய பாபநாசம் தொகுதியில் குடந்தை ஊராட்சி ஒன்றியத்திலே சரியாக நடப்படவில்லை. மரக்கன்றுகள் நடப்படவே இல்லை என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடன் வந்தால் நிச்சயமாக அந்தப் பகுதிகள் அத்தனையும் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், தஞ்சை மாவட்டத்தை பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேதாரண்யத்திலே உப்பு சம்பந்தப்பட்ட தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக ஒரு குழுவை மின்சார வாரியத்தினுடைய தலைவருடைய தலைமையில் போட்டதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால் அந்தக் குழுவினுடைய அறிக்கை என்னவாயிற்று? வேதாரண்யத்திலே அந்த உப்பு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மின்சாரத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே 1967-க்குப் பிறகு மின்சார உற்பத்தியை பெருக்குவதற்கான எல்லா நடவடிக்கையையும் எடுத்தாலும் கூட, இன்னும் 60, 70 விழுக்காடுகள் தான் எட்டியிருக்கிறோம். நூற்றுக்கு நூறு சதவீதம் விழுக்காட்டை நாம் எட்டாததன் காரணத்தாலே மின்சார தட்டுப்பாடுகள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல முதியோர்களுக்கு ஓய்வு ஊதியம் மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அதாவது ரூ. 35 தான் அளிக்கப்பட்டு வருகிறது. அதை இன்னும் கொஞ்சம் கூட்டி 50 ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லி கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தாற்போல தஞ்சாவூர் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பல்வேறு அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தேவையான அத்தனை அத்தியாவசியப் பொருள்களும் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவைப் பொறுத்தவரையில் தேர்தலே நடக்கவில்லை. 1983 ஆம் ஆண்டில் இது சம்பந்தமான கூட்டுறவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் 4 ஆண்டுகள் ஆகியும் தேர்தல் நடக்கவில்லை. பாரதப் பிரதமர் கூட உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநில அரசுக்கும் கடிதம் எழுதி இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 12, 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் தேர்தல் நடத்தவில்லை. உடனடியாக கூட்டுறவு இயக்கங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**திரு. கே. சுப்பராயன் :** பாரதப் பிரதமர் கட்டளை இட்டிருப்பதாகச் சொல்லுகிறார். அப்படி கட்டளை இட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். இராசாராமன் :** பாரதப் பிரதமர் அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டேன். அதனால் தமிழக அரசு உடனடியாக கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்த வரையில் இந்த மாநிலத்தில் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. ஒரு பக்கம் உயர்ந்தரக மதுக் கடைகளை திறந்து வைத்துவிட்டு, மறுபக்கம் மதுவை ஒழித்து விட்டோம் என்று சொல்வது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் தமிழக அரசு எல்லா மதுபானங்களையும் அகற்றி ரத்து

செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கடந்த சில நாட்களுக்கு முன்பாக அரியலூர் மருதையாறு பாலத்தில் குண்டு வைத்து தகர்த்தார்கள் கொடியவர்கள் என்ற செய்தியைக் கேட்டு மிக மிக வருத்தமடைகிறோம். அந்த விபத்து நடந்த இடத்திற்கு நம்முடைய மத்திய அமைச்சரும், மாநிலத்தின் சில அமைச்சர்களும் சென்று பார்வையிட்டனர். ஆனால் தமிழக அரசின் முதலமைச்சர் அவர்கள் சென்று விபத்து நடந்த இடத்தைப் பார்க்காதது மிகவும் வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. இதைச் சொல்வது மட்டுமல்லாமல் இதுபோன்ற விபத்து திருவையாறு பகுதியில் பாரதப் பிரதமர் அவர்கள் வருகை தந்த போது ஏற்பட்டது. அந்த குண்டு வைப்பிற்குக் காரணமான உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காததால் தான், அவர்களைக் கண்டுபிடிக்கத் தவறியதால் தான் இப்போது இந்த அரியலூர் விபத்து ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). துணைத் தலைவர் அவர்களே, என் தொகுதி பற்றி சிலவற்றை சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவேதான் 10 நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று ஆரம்பத்திலேயே கேட்டுக்கொண்டேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் ரெயில் விபத்து நடந்த இடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப நான் சென்று பார்வையிட்டேன். அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். பிறகு மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிடவில்லை என்று பேசியிருக்கிறார்கள். ஆகவே இந்த விளக்கத்தை அவைக்கு அளிக்க விரும்புகிறேன்.





**திரு. பூ. மு. நரசிம்மன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சிறப்பான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசின் நிதி நிலைமை, தமிழக அரசின் கொள்கைகள், குறிக்கோள்கள், புதிய திட்டங்களின் விவரங்கள், புதிய வரிச் சலுகைகள், வரி சீரமைப்புகள், புதிய வரி ஏற்பாடுகள் ஆகியவை விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் 1977 ஆம் ஆண்டில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் கிராமப்புற மக்களுக்காக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை உருவாக்கிக் கொடுத்திருப்பதை இந்த நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களுக்கு நாம் செல்வோமானால் எல்லா கிராமங்களுக்கும் சாலை வசதிகளும், குடிநீர் வசதியும், பள்ளிக்கூட வசதிகளும் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருப்பதை இந்த நாட்டிலே இருக்கிற நல்லவர்கள் பாராட்டுவதைப் பார்க்க முடிகிறது. வளர்ச்சிப் பணிகளைப் பற்றி குறிப்பிட வேண்டுமானால் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சாதனை புரிந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு திட்டங்களின் இலக்கை நிறைவேற்றுவதிலும், வளர்ச்சித் திட்டங்களை முடித்து வைப்பதிலும், வறுமைக் கோட்டிற்கு கீழேயிருந்து துயரப்படுபவர்களின் வறுமையைப் போக்க உதவித் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதிலும் பெரும் பொறுப்பேற்று கடமைகளை முறைப்படி ஆற்றி வருகிறது. இலங்கைத் தமிழர்கள் வேதனை பெருகிக் கொண்டே போகிறது. அதனைத் தடுக்க உடனடியாக நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துயரமான நேரத்தில் மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுப்பதுடன், இலங்கை அரசு ராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி வைத்துவிட்டு, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1987 மார்ச் 26

(முற்பகல் 11-50)

குறிப்பாக தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளியவர்களுக்கு, 30 லட்சம் குடும்பத்தினருக்கு வீடுகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில் கிராமப்புறங்களிலே, வட்ட அளவிலேயும், வட்டார அளவிலேயும் ஓடு, செங்கல் முதலிய பொருட்களை உருவாக்குகிற சங்கங்களை உருவாக்க வேண்டும் என்ற நல்ல திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். குறிப்பாக என்.ஆர்.இ.பி. ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களாலே கிராமப்புறங்களிலே இருக்கிற தாழ்த்தப்பட்டவர்களுக்கு தொகுப்பு வீடுகளை உருவாக்குகிறபோது, சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. இன்றைய நடைமுறையை நோக்குகிறபோது, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்.ஆர்.இ.பி. திட்டத்தாலேயும், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தாலேயும், தொகுப்பு வீடுகளைத் தேர்ந்தெடுக்கிறபோது, ஊராட்சி ஒன்றியங்கள் எந்தெந்த கிராமங்களை எடுக்க வேண்டும் என்று தேர்ந்தெடுக்கிறார்கள். இப்படி கிராமங்களிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட காலனிகளைத் தேர்ந்தெடுக்கிறபோது, சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. தனக்கு வேண்டியவர்கள் என்றும், வேண்டாதவர்கள் என்றும் சில காலனிகளை இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கின்றன. எப்படி தாட்கோவிலே அரசாங்கமே தலையிட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளை உருவாக்குகிறார்களோ, அதைப்போன்று, இந்தத் திட்டங்களிலும் அரசு நேரிடையாகத் தலையிட்டு, இந்தந்த கிராமங்களை எடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொகுப்பு வீடுகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒன்றாம் வகுப்பிலேயிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கிற ஏழை எளிய சிறார்களுக்கு சீருடைகளும் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கியிருக்கிறார்கள். 1987-88 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் இலவசக் காலணிகளையும் பெறுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, எல்லோரும் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள்.



1987 மார்ச் 26] [திரு. பூ. மு. நரசிம்மன்]

அதுமட்டுமல்ல, கிராமப்புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடைவார்கள். அதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தால் காலணிகள் தைக்கின்ற ஆயிரக்கணக்கான பேர்களுக்கும், நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்திலே முக்கியமான துறைகளுக்கு முந்தைய ஆண்டுகளைவிட அதிகமான அளவிற்கு நிதி ஒதுக்கி இருக்கிறது நம்முடைய அரசு. குறிப்பாக கல்வித் துறைக்கும், வேளாண்மைத் துறைக்கும், சமூக வளர்ச்சித் திட்டத்திற்கும், சமூக நலத் திட்டத்திற்கும் பாசன வசதித் திட்டத்திற்கும், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அதிகமான நிதி ஒதுக்கியிருப்பதை எண்ணுகிறபோது, உள்ளபடியே கிராமப்புறங்களில் ஏழை எளியவர்கள் ஏற்றம் பெறவேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் அயராமல் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சிக்கும் வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க முடிவு செய்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

பருவ மழை பெருமளவிற்குப் பொய்த்துவிட்டதாலே குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்திலே பள்ளிப்பட்டு வட்டத்திலேயும், திருத்தணி வட்டத்திலேயும் பயிர்கள் சாவியாக இருக்கின்றன. அங்கே பருவமழை பொய்த்துவிட்டதாலே கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியிலே உள்ள ஒவ்வொரு கிராமத்திலேயும் ஆழ்துளைக் கிணறுகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு கொடுக்கிற அதே நேரத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஏரிகளையும் ஆழப்படுத்த வேண்டும் என்வும், புதிய சாலைகளைப் போடவேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில், தமிழக அரசு, உள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு, வரிகளில் சலுகை அளிக்கவும் அதை நெறிமுறைப்படுத்தவும், வழிவகை செய்து திட்டத்தைத் தீட்டியுள்ளது வரவேற்கக்கூடியதாகும்.

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1987 மார்ச் 26

பள்ளிப்பட்டு வட்டத்திற்கும், திருத்தணி வட்டத்திற்கும் திருத்தணியில் நீதிமன்றங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 30 ஆண்டு காலமாக வாடகைக் கட்டிடத்தில் தான் நீதிமன்றங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதற்கு வேண்டிய இடமும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்த நீதிமன்றங்களுக்கு திருத்தணியில் நிரந்தரமான கட்டிடங்களை நம்முடைய அரசு உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிப்பட்டில் 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை கட்ட இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் எந்த தொழிற்சாலையும் இல்லை. எனவே பள்ளிப்பட்டு வட்டத்தை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்து, ஆர். கே. பேட்டில் ஒரு நூற்பாலையை உருவாக்கித் தர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் 70 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இந்த கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகிற துணி மணிகள் ஏறத்தாழ 1 வருட காலமாக, ஏறத்தாழ 10 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி மணிகள் தேங்கி இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதியில் உள்ள நெசவாளர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே அவர்கள் உற்பத்தி செய்த அந்த 10 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி மணிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நேரடியாக கொள்முதல் செய்து ஏழை எளிய நெசவாளர்களுக்கு புனர்வாழ்வை அளிக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே இவ்வளவு நேரம் பேச நல்வாய்ப்பு அளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன்.



1987 மார்ச் 26] [திரு. அ. மலர்மன்னன்]

இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நாவலர் அவர்கள் வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளோடு ஆரம்பித்து வைத்து இருக்கிறார்கள். ஆனால் வள்ளுவப் பெருமான் அவர்கள்

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்று தமிழகத்தின் நிலையைப் பார்த்தால், வள்ளுவரின் இந்தக் குறளுக்கு எதிரிடையாக எல்லாம் நடைபெறுகிறது, என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தலை விரித்து ஆடுகிறது. ஆனால் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டங்கள் எதுவும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதே சட்ட மன்றத்தில் சில ஆண்டுகளுக்கு முன் அமைச்சராக இருந்த திரு. இராகவானந்தம் அவர்கள் ஒரு புள்ளிவிபரத்தை தந்து இருக்கிறார்கள். அதிலே தமிழகத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் 62 சதவீத மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்றும், நகரப் பகுதிகளில் 58 சதவீத மக்கள் அதே போன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்றும் கூறினார்கள். ஆகவே இப்போது வறுமைக் கோட்டிலிருந்து எவ்வளவு மக்கள் மீட்கப்பட்டார்கள் என்ற புள்ளிவிவரம் இந்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 30, 31 ஆம் பக்கங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த நிதி ஆண்டில், 80 ஆயிரம் புதிய குடும்பங்கள் வறுமைக் கோட்டிலிருந்து மீட்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்களால் எவ்வளவு மக்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டார்கள் என்ற புள்ளிவிவரம் எதுவும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பக்கம் வறுமை ஒழிப்புத் திட்டம் என்று கூறுகிறீர்கள். சென்ற ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை தமிழகத்தில் கள், சாராயக் கடைகள் அதிகார பூர்வமாக இருந்தன. ஒரு பக்கம் வறுமை ஒழிப்புத் திட்டத்தினால் ஒரு குடும்பம் வறுமைக் கோட்

[திரு. அ. மலர்மன்னன்] [1987 மார்ச் 26

டிலிருந்து மீட்கப்பட்டால் பத்துக் குடும்பங்கள், கள், சாராயக் கடைகளால் வறுமைக் கோட்டிற்குக் கீழே சென்று கொண்டிருந்தன. இந்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து கள், சாராய கடைகள் அதிகாரபூர்வமாக மூடப்பட்டாலும் கள்ளச் சாராயம் பல பகுதிகளில் ஆறு போன்று ஓடுகின்றது. ஆகவே மத்திய மாநில அரசுகளின் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பலன்கள் மக்களுக்குப் போய் சேருகிறதா என்று பார்த்தால் அதில் ஐயப்பாடுதான் நிலவுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினரான திரு. பிலுமோடி அவர்கள் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்ட முடிவிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறதே, இந்திய நாட்டில் உள்ள எல்லா மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் எப்போது போவார்கள் என்று வேடிக்கையாகக் கேட்டார்கள். இன்று தமிழ்நாட்டின் நிலையைப் பார்க்கும்போது அன்று திரு. பிலுமோடி அவர்கள் கூறியபடிதான் இங்கே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் படித்த இளைஞர்களை வாட்டிக் கொண்டு வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கப் புதிய திட்டங்கள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில் அப்போது வேலை வாய்ப்புத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. இராமசாமி அவர்கள் ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னார்கள். 31—12—1984-ல் தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்புக் கேட்டு மனுச் செய்திருந்தோர் எண்ணிக்கை 17,07,947. அது 31—12—1985-ல் 20,81,257 ஆக கூடியிருக்கிறது. ஒரேயாண்டில் அதிகமாக 3¾ இலட்சம் பேர்கள் வேலை கேட்டு மனு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 மார்ச் 26] [திரு. அ. மலர்மன்னன்]

(நண்பகல் 12-00)

1985 டிசம்பர் 31-ல் வேலைவாய்ப்புக் கேட்டோர் எண்ணிக்கை 20.81 இலட்சத்திலிருந்து 25 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆனால் அதே புள்ளிவிவரங்களில் அமைச்சர் கூறியுள்ளார். 1984 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலை பெற்றவர்கள் 60,298 பேர்கள்தான் இருக்கிறார்கள். இது 1985 ஆம் ஆண்டில் 52,390 ஆகக் குறைந்திருக்கிறது. ஆக 1984-85 ஆம் ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரேயாண்டில் 3¾ இலட்சம் உயர்ந்திருக்கிறது. ஆனால் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு அரசு உதவித்தொகை கொடுக்கிறது. ஆனால் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலையற்று இருக்கும்போது, இத்திட்டத்தினால் நடப்பு நிதியாண்டில் முதல் ஒன்பது மாதங்களில் பயன் பெற்றோர் எண்ணிக்கை 1,35,038 பேர். 75 இலட்சத்திற்கும் மேற்பட்ட படித்த இளைஞர்களுக்கு இந்த நிதியாண்டில் வேலைவாய்ப்பு அளிக்கப் போகிறீர்களா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை அரசின் முதுகெலும்பாகத் திகழும் ஏழு இலட்சம் அரசு ஊழியர்களுக்கும் மூன்று இலட்சம் ஆசிரியர்களுக்கும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. மத்திய அரசைப் பல விதத்திலும் பல வழிகளிலும் கடைப்பிடிக்கும் நீங்கள் ஏன் மத்திய அரசு சம்பள விகிதங்களை மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றைய தினம், குஜராத் போன்ற மாநிலங்களில் எல்லாம் மாநில அரசு மத்திய அரசு விகிதத்தோடு, சம்பள விகிதங்களை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மத்திய அரசும் பல மாநில அரசுகளும் தங்களுடைய ஊழியர்களுக்கு ஒரு மாத ஊதியத்தை போனசாக அளிக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்களின் பிரச்சினைகள் பற்றி எதும் குறிப்பிடப்படவில்லை.

[திரு. அ. மலர்மன்னன்] [1987 மார்ச் 26

நிர்வாக வசதிக்காகப் பெரிய மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படுவதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் வடாற்காடு, தென்னாற்காடு, திருச்சி போன்ற மாவட்டங்களின் பிரிவினை பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு கேட்டார், "நில உச்ச வரம்பா, மிச்ச வரம்பா" என்று. இந்த நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் குறிப்பிடும்போது 1936 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை தமிழகத்தில் 1,23,479 ஏக்கர் நிலங்கள் தாம் உபரியாக அறிவிக்கப்பட்டு, அவை எல்லாம் 96,950 நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே கிட்டத்தட்ட ஐந்து லட்சம் சாகுபடியாளர்களும், கிட்டத்தட்ட நாற்பது இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் மேலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த சட்டதிட்டத்தினால் என்ன பாதுகாப்பு அளிக்கப் போகிறீர்கள் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1968-ஆம் ஆண்டு கீழ் வெண்மணியில் நடந்த வன்முறையை அடுத்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நீதிபதி கணபதியா பிள்ளை தலைமையில் ஒரு விசாரணை கமிஷனை நியமித்தார். அக்கமிஷன் தன் அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் பினாமி குத்தகைதாரர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. ஆகவே நில உச்சவரம்பை மீறி, பினாமி நிலம் வைத்திருக்கின்றவர்களின் நிலங்களைக் கையகப்படுத்தி, ஏழை எளியவர்களுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1938 ஆம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த விற்பனை வரியானது இன்று பூதாகரமாக உருவெடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1987 மார்ச் 26] [திரு. அ. மலர்மன்னன்]

1936-87-ல் தமிழக அரசுக்குத் திருத்திய மதிப்பீட்டின்படி விற்பனை வரிகள் மூலம் கிட்டத்தட்ட 1,106 கோடி கிடைக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் இதுவே 1987-88 ஆம் ஆண்டில் 1,219 கோடியாக உயரும் என்றும் கூறியிருக்கிறீர்கள். தமிழக அரசினுடைய மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட விற்பனை வரி இன்றைக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தற்போது புதிய விற்பனை வரிகள் போடாமலே மேலும் உங்களுக்கு வருவாய் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் அரசு நியமித்த கெய்வார் குழு விற்பனை வரித் துறையில் லஞ்ச ஊழல்கள் எப்படிப் புரையோடிக் கிடக்கின்றன என்று படம் பிடித்துக் காட்டியுள்ளது. அக்குழுவின் அறிக்கையை நீங்கள் நிறைவேற்றினாலேயே புதிய வரிகள் போடத் தேவை இருக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு ஐ. நா. சபை சர்வதேச வீட்டு வசதி ஆண்டு என்று அறிவித்திருக்கிறது. ஆனால் நீங்களோ மக்களுக்கு வீடு கட்டும் பொருட்களான செங்கல், மரம், ஆஸ்பெஸ்டாஸ் போன்றவைகளுக்கு வரிகளை உயர்த்தியிருக்கிறீர்கள். மேலும் ஓர்க்ஸ் காண்ட்ராக்ட் விதிக்கப்பட்டிருக்கும் ஐந்து சதவீத விற்பனை வரி வீட்டு ஒப்பந்தக்காரர்களுக்கும் அமுல் செய்யப்படுகிறது. அதை வீடு கட்டுபவர்களிடம் தான் வசூல் செய்ய வேண்டும். ஒரு புறத்திலே ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் வீடுகள் ஏழைகளுக்கு கட்டப் போகிறோம் என்ற காகிதத் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். மற்றொரு பக்கம் வீடு கட்டும் பொருட்களின் விற்பனை வரியை அதிகரித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே வீடு கட்டத் தேவையான நிலங்களைப் பதிவு செய்யும் கட்டணத்தை உயர்த்திவிட்டீர்கள். நடுத்தர மக்களுக்குச் சொந்த வீடு என்பது கானல் நீராக ஆகிவிடுமோ என்ற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு ஓட்டல்களில் விற்பனை வரி விதித்திருக்கிறீர்கள். இன்றைக்கு ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேலே மக்கள் நாள்தோறும் ஓட்டல்களுக்கு உணவருந்தச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே இன்றைய தினம் 5 சதவிகிதம் விற்பனை வரியாக வசூல் செய்யப்படுகிறது என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஓட்டல்

[திரு. அ. மலர்மன்னன்] [1987 மார்ச் 26

தொழிலாளிகள் எந்த அளவிற்கு கஷ்டப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 5 இலட்சத்திற்கு மேல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த அரசு ஊழியர்கள், வருமானத்தை நீங்கள் மூன்று இலட்சமாகக் காட்டுங்கள், இரண்டு இலட்சத்தை ஆளுக்கு ஒரு லட்சமாக பங்கு போட்டுக்கொள்ளலாம் என்ற நிலையை உருவாக்கத்தான் அது பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மத்திய அரசு இன்றைக்கு கேஸ் விலையை 101.30 காசாக உயர்த்தி இருக்கிறது. இதனால் விலைவாசி உயரும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விற்பனை வரி முறையை சீரமைத்து எல்லா பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை வரியை விதித்தால் இன்றைக்கு போட வேண்டிய வரியைப் போடாமலேயே சரி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசும், மாநில அரசும் போட்டி போட்டுக்கொண்டு பற்றாக்குறை பட்ஜெட்டை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். மத்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 6,000 கோடிக்கு மேல் பற்றாக்குறை. உங்களது வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 131.69 கோடிக்கு மேல் துண்டு விழுகிறது. நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறிப் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்ற 'ரன் அவே இன்ப்ளேஷன்' என்ற நிலைமைக்கு நம்மை கொண்டு சென்றுவிடும்.

காவேரிப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தஞ்சை திருச்சி மாவட்ட காவிரிப் பாசன வாய்க்கால்களை உலக வங்கி உதவியுடன் சீரமைக்கும் திட்டம் பலகாலமாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. காவேரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு டிரிப்யூனலை அமைக்க நீங்கள் மத்திய அரசுக்கு தூது சென்று ஆணையைப் பெற்றுத் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய தொழிற்சாலைகளைப்பற்றி இந்த வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடாதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. இரண்டு ஆண்டுகளாக தமிழக தொழில் அமைச்சராக இருந்த திரு. இராசாராம் அவர்கள் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலே 30 புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள்.



1987 மார்ச் 26] [பேரவைத் துணைத் தலைவர்]

ஆனால் நாவலர் அவர்களோ தனது நிதிநிலை அறிக்கையில் 12 புதிய சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கான மனுக்கள் தான் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறுகிறார். எந்தப் புள்ளிவிவரம் உண்மையானது என்று புரியவில்லை. இராசாராமோ முப்பது என்கிறார். நாவலரோ பனிரெண்டு என்கிறார். இதில் எது உண்மை என்று புரியவில்லை.

தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கை மூலம் 6 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு மத்திய அரசின் விஞ்ஞான தொழில் நுட்ப இலாக்கா ரூ. 2 கோடி வழங்கியது. திருச்சி பி.எச்.இ.எல். மூலமாக இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று திரு. இராசாராம் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு அறிவித்தார். ஆனால் சென்ற மாதம் நான் கேள்விப்பட்டேன். தமிழக அரசு இத்திட்டத்திற்தான தன் பங்கைச் செலுத்தாததால் மத்திய அரசு தான் ஏற்கெனவே வழங்கியிருந்த ரூபாய் இரண்டு கோடியை மாநில அரசு திருப்பித் தர வேண்டும் என்று ஆணையிட்டுள்ளதாம். திருச்சி பி.எச்.இ.எல். நிபுணர்கள் செய்வது அறியாது திகைக்கின்றார்கள்.

மின் உற்பத்தியைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட பதிலில் இந்தியாவிலுள்ள மாநில மின்சார வாரியங்களிலேயே தமிழக மின்வாரியந்தான் அதிக நஷ்டத்தில் இயங்குகிறது என்று அறிவிக்கப்பட்டது. சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்படும் என்று கூறினீர்கள். ஆனால் தமிழகத்திலே கிட்டத்தட்ட 20 இலட்சம் சிறு விவசாயிகள் உள்ளார்கள். ஆனால் இலவச மின் திட்டத்தின் கீழ் பயன் அடைந்த விவசாயிகள் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 பேர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அமருங்கள். அடுத்து திரு. எஸ். புருசோத்தமன் பேசவேண்டும்.

(குறுக்கீடு, கூச்சல் குழப்பம்.)

[திரு. எஸ். புருசோத்தமன்] [1987 மார்ச் 26

(பிற்பகல் 12-10)

**திரு. எஸ். புருசோத்தமன்:** மாண்புமிகு பேரவையின் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு, அதைப் பாராட்டு கின்ற முகத்தான் இங்கே பேசுவதற்கு எனக்கு . . . . .

(குறுக்கீடு—திரு. அ. மலர்மன்னன் நின்று கொண்டேயிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்குக் காலையில் தொடக்கத்திலேயே 20 உறுப்பினர்கள் பேசவேண்டி இருப்பதாகச் சொன்னோம். எனவே, அனைவரும் 10 நிமிடங் களுக்குட்பட்டு பேசவேண்டும் என்று சொல்லி, உறுப்பினர்களும் அவ்வாறே பேசினார்கள். எல்லாக் கட்சிகளும் ஒத்துக்கொண்டு அப்படி செய்யும்போது, நீங்கள் மட்டும் ஏன் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்? (குறுக்கீடு). உங்களுக்கு 11 நிமிடம் கொடுத்தாகிவிட்டது. உங்கள் ஒரே ஒருவருக்குத்தான் ஒரு நிமிடம் சேர்த்தே கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு கூச்சல்). தயவுசெய்து, நீங்கள் வேறு மானியக் கோரிக்கையிலே பேசலாம். உட்காருங்கள் (குறுக்கீடு). சொல்வதைக் கேளுங்கள் (குறுக் கீடு). உங்களைத் தொடர்ந்து பேச அனுமதித்தால், மற்ற உறுப்பினர்களும் அதுபோலவே கேட்பார்கள். எனவே, உட் காருங்கள். (குறுக்கீடு).

**திரு. எஸ். புருசோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே டாக்டர் நாவலர் அவர்களால் அளிக் கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத் தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என் னுடைய நன்றியை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

400 ஆண்டு காலமாக திருவரங்கத்தில் பல மன்னர்களால் கட்ட வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்து முடிவு பெறாமல் ஆரம்ப நிலையிலேயே விடப்பட்ட ராயகோபுரம் என்ற ராஜகோபு ரம் வெற்றியுடன் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர் களுடைய ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த அரசிற்கும் என்னுடைய நன்றி யையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 மார்ச் 26] [திரு. எஸ். புருசோத்தமன்]

நிதிநிலை அறிக்கையில் இங்கே நல்ல பல திட்டங்களை இந்த ஆண்டு டாக்டர் நாவலர் அவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நல்ல பல திட்டங்களை, நாட்டு மக்கள் நலனில் அக்கறைகொண்டு நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்கள் பயன் பெறத்தக்க வகையில் தொடர்ச்சியாக நிறைவேற் றிக்கொண்டு இருக்கிறது. அதுபோன்று சத்துணவு, சீருடை, இலவச பாடப்புத்தகம் போன்ற சலுகைகளுடன் பள்ளி மாணவர் களுக்கும் அதைப்போலவே கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழைத் தாய்மார்களுக்கும் காலணி அளிக்கக்கூடிய திட்டத்தை, உன்னதமான ஒரு திட்டத்தை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் நிதியமைச்சர் அவர்களிடம் நாட்டிலே உள்ள உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களுக்கும் காலணி வழங்கும் திட்டத்தை அறிவித்தால் மிக நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல. 30 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தையும் இந்த அரசு அறிவித்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிற நிலையில் அதற்கு மேலும் மேலும் பொலிவூட்டும் வண்ணம், இந்தத் திட்டம் சீரான முறையில். சிறப்பான முறையில் நடை பெறுகின்ற வகையில், கிராமங்களிலே கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான செங்கல், மரச் சாமான்கள் போன்றவற்றைச் செய்வ தற்கு சங்கங்கள் அமைக்கின்ற ஒரு குறிப்பையும் இங்கே குறிப் பிட்டிருக்கிறார்கள்.

எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் 30 இலட்சம் வீடுகள் எப்படிக் கட்டமுடியும், அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதா, எப்படி திட்டத்தை நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்கள் என்று எல்லாம் கேள்விக் கணைகளைத் தொடுத்துக்கொண்டிருக்கிறார் கள். அரசு ஒரு திட்டத்தை அறிவிக்கின்றபோது, அதை நிறை வேற்றவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் திட்டத்தை அறிவிக்கிறது. அதைப் பாராட்டுவதற்கு உங்க ளுக்கு மன வளம் வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். புருசோத்தமன்] [1987 மார்ச் 26

30 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தில், முடிந்த அளவுக்கு கட்டுவதற்கு முயற்சி எடுப்பதற்கு இந்த அரசு என்றைக்குமே தயாராகத் தான் இருக்கிறது. அதற்கான ஆக்கபூர்வமான வேலைகளில் இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கிராமங்களிலுள்ள ஏழை மக்களும், பாட்டாளி வர்க்கமும் நாட்டிலே நடக்கக்கூடிய நாட்டு நடப்புகளை தெரிந்துகொள்ளும் விதத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒவ்வொரு ஊராட்சிக்கும் வழங்குகிற ஒரு நல்ல திட்டத்தையும் இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் போலவே இங்கே பேசிய நண்பர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் 90 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. இது பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது; நீங்கள் இந்த வரியைப் போடுவது நியாயம் தானா என்று எல்லாம் கேட்கிறார்கள். ஒரு நிதிநிலை அறிக்கை என்று சொல்கிறபோது, திட்டங்களைத் தீட்டுவதும், அதற்கு வருவாயைப் பெருக்குவதற்காக வரிகளைப் போடுவதும் இயற்கையான ஒன்றுதான். இந்த வரிச்சுமையினால் பாதிக்கப்படுபவர்கள் யார் என்றுதான் பார்க்கவேண்டும். ஏழைகள் பாதிக்கப்படுகிறார்களா, செல்வந்தர்கள் பாதிக்கப்படுகிறார்களா என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த விதத்திலேதான் ஏழைகள் பாதிக்கப்படாத வகையில் வரிகளைப் போட்டு, திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, இன்றைக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்து, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தொடர்ச்சியாக செய்து கொண்டு வருகிறது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

என்னுடைய தொகுதியான அரியலூர் தொகுதியில் அரியலூருக்கருகே, மருதையாற்றுப் பாலத்தில் தேச விரோத சக்திகள் சிலரினால்—சதிகாரர்கள் வேண்டுமென்றே நாட்டுமக்களுடைய உயிரைப் பலி வாங்கவேண்டும் என்ற தீய நோக்குடன் ரயிலைத் திட்டமிட்டு கவிழ்த்து இருக்கிறார்கள். இந்த கவிழ்ப்பு வேலை நடைபெற்றதன் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த ரெயிலில் பயணம் செய்தவர்களுக்கு உடனடியாக நிவாரணம்



1987 மார்ச் 26] [திரு. எஸ். புருசோத்தமன்]

அளிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இங்கிருந்தே உத்தரவினையிட்டு அதன் அடிப்படையிலே சத்துணவு அமைச்சர் அவர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்கு விரைந்து சென்று அங்கே உள்ள நிலைமைகளை கண்டறிந்து, அதிகாரிகளை முடுக்கிவிட்டு நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களும் அன்றைக்கே வந்து உடனடியாக நிவாரண வேலைகளைச் செய்வதற்கு ஆவன செய்தார்கள். அதற்குப்பிறகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்கள் மருத்துவ மனைக்கு வந்து பார்வையிட்டு விபத்திலே காயமுற்றோருக்கு ஆறுதல் சொல்லி மருத்துவ அதிகாரிகளை உடனடியாக நல்லமுறையிலே தீவிர சிகிச்சை அளிக்கவேண்டுமென்று கேட்டுச் சென்றிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது விபத்து நடந்த இடத்திற்கு புரட்சித் தலைவர் வரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டினை வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சொல்வது சரியாகாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரை நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசை அணுகி அனுதாப உணர்வோடு, இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்கள் மறுவாழ்வு பெறுகின்ற விதத்தில் நல்லமுறையிலே ஆலோசனை சொல்லி மத்திய அரசு அதனை ஏற்றுக்கொண்டு இன்றைக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறது. என்றாலும்கூட சிங்கள காடையர்கள் அரசு தமிழர்களுடைய உயிரை கொல்வதில் இன்னும் தீவிரமாக ராணுவத்தை முடுக்கி அப்பாவி தமிழர்களை கொன்று குவித்த வண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சியினை தடை செய்கின்ற வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசை கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய முயற்சிகள் எடுப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[திரு. எஸ். புருசோத்தமன்] [1987 மார்ச் 26

இங்கே இந்தி ஆதிக்க எதிர்ப்பைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக மக்கள் பாராட்டுகின்ற விதத்திலே, நாட்டு மக்கள் பாராட்டுகின்ற விதத்திலே தமிழக சட்ட மன்றத்திலே ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலே பங்கு கொள்வதற்கு உரிமை கொண்டவர்கள் போலவும் அதை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே பல்வேறு தகாத செயல்களிலே ஈடுபட்டு இன்றைக்கு நாட்டு மக்களுக்கு முன்னாலே வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

மேலும் என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே கொள்ளிடம் ஆற்றிலிருந்து அரியலூருக்கும் மற்றும் 15 கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்கும் வகையிலே ஒரு கூட்டு குடிநீர் திட்டத்தை அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற திட்டத்தின்கீழ் உலக வங்கியினுடைய பேச்சுவார்த்தைகள் முடிவு அடைகின்ற தருவாயில் இருக்கிறது என்று நாவலர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அரியலூருக்கு ஒரு புற வழிச் சாலையை அமைக்க நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சாலை வசதிகள். இணைப்புச் சாலை வசதிகள் இல்லாத சில கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினால் இணைப்புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கீழகொளத்தூரிலிருந்து வடுகபாளையம் வழியாக, திருமானூர் வரை ஒரு சாலையும், சுண்டக்குடியிலிருந்து ஒட்டக்கோயில், ஓரியூர் வழியாக குருவாடி வரை ஒரு சாலையும், ஒட்டக்கோயிலிலிருந்து கூத்தூர் ரயில்வே ஸ்டேஷன்



1987 மார்ச் 26] [திரு. எஸ். புருசோத்தமன்]

வரை ஒரு சாலையும், விளாங்குடி கைக்காட்டியிலிருந்து காவனூர், அம்பாப்பூர் வழியாக, அக்காலி வரை ஒரு சாலையும், விளாங்குடி கைக் காட்டியிலிருந்து ரெட்டிப்பாளையும், நாய்க்கன் பாளையம் வரை ஒரு சாலையும் அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன். கண்டிராதிக்கம் என்ற கிராமத்தில் உள்ள ஏரி 411 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு பெரிய ஏரியாகும். சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இந்த ஏரியால் பாசனம் பெறுகின்றன. ஆனால் ஏரியில் வண்டல் மண் 6 அடி உயரத்திற்கு படிந்து இருக்கிற காரணத்தினால் பாசனம் சரிவர செய்யப்படாமல் ஆயிரக்கணக்கான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. எனவே அந்த ஏரியை தூர் எடுத்து ஆழப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரண்மனைக்குறிச்சி ஓடையில் வெள்ளம் வந்தபோது அங்கே பார்வையிட வந்த நமது முதல்வர் அவர்கள், பாலம் ஒன்று அவசியம் கட்டவேண்டும்; இது மக்களுக்கு மிக அத்தியாவசியமான ஒன்று என்று சொல்லி உத்தரவினை இட்டார்கள். அது இன்னும் கிடப்பிலே கிடப்பதாகத்தான் தெரிகிறது.

(பிற்பகல் 12-20)

அந்தப் பாலத்தையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் திருமானூர் பகுதி நிறைய கரும்பு பயிரிடுகிற பகுதியாகும். அங்கே ஒரு சர்க்கரை ஆலையை அரசுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அங்கே உள்ள விவசாயிகள் பயன் அடைய முடியும். அந்த வகையில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருச்சி காவிரியிலிருந்து ஐயன்பெருவிளைக் கால்வாய்த் தலைப்பு தூர்ந்து போய் அடைப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக லால்குடி வட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அந்த வாய்க்காலை ஆழப்படுத்தித் தர வேண்டும் என்றும் அதோடு புள்ளம்பாடி, பங்குனி மற்றும் ஐயன்பெருவளை வாய்க்கால்களின் தலைப்பையும் ஆழப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி, தமிழகத்தின் மத்தியப் பகுதியாக இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி தேவை என்பதை அரசு கணக்கில் கொண்டு அங்கே விரைவில் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்க ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 3-வது பாராவில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது "இந்தியா முழுவதையும் பாதிக்கக் கூடிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை பொருளாதாரம், அதன் காரணமாக ஏற்படும் பணவீக்கம், கட்டுக்கடங்காமல் அகில இந்திய அளவில் ஏறிக்கொண்டே வரும் விலைவாசி ஏற்றம், கடன் பளு, உயர்ந்துகொண்டே வரும் வட்டிவிகித அளவு முதலியவை தமிழக அரசின் பொருளாதார வாழ்வையும் பெரிதும் பாதிக்கவே செய்கின்றன" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இது ஒரு புதிய கருத்தல்ல. இந்த அரசு ஏற்கெனவே 1985-86 மற்றும் 1986-87 ஆம் ஆண்டுகளிலும் இந்தக் கருத்தைத் தான் சொல்லியிருக்கிறது. இப்போது அதை மீண்டும் ரிப்பீட் பண்ணியிருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆனால் இன்று எழுந்துள்ள கேள்வி என்னவென்றால், ஏற்கெனவே விலைவாசி உயர்வு என்பது சாதாரணமான முறையில்கூட ஏற்படவில்லை. சென்ற 3 ஆண்டுக் காலமாகவே மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையின் விளைவாக ரூ. 18,970 கோடி பற்றாக்குறை இந்தியாவில் ஏற்பட்டு, அதனுடைய விளைவாக மிகப் பெரிய விலைவாசி உயர்வு எந்தக் கட்டுக்கும் அடங்காமல் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இன்றைக்கு நாம் என்ன பார்க்கிறோம் என்றால் இவ்வாறு பற்றாக்குறை பட்ஜெட்டால் விலைவாசி உயர்ந்து கொண்டே வந்துள்ளது என்று சொல்லிக் கொண்டே மத்திய அரசினுடைய அதே பாதையை—மத்திய அரசினுடைய மக்கள் விரோத சார்பிலேயே இந்த அரசும் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான் நீங்களும் விலை





வாசி உயர்வு என்பது பயங்கரமாக வளர்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மேலும் மேலும் மக்கள் வாங்குகிற அத்தியாவசியப் பொருள்கள்மீது புதிய வரிகளை சுமார் ரூ. 90 கோடி அளவுக்குச் சுமத்தியுள்ளீர்கள்.

மேலும் விலைவாசி உயர்வு என்பது எதன் காரணமாக ஏற்படுகிறது என்பதை 1983-84, 1985-86 மற்றும் 1986-87 ஆகிய நிதிநிலை அறிக்கைகளிலேயே நீங்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். நான் அதிலே ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் படித்துக் காட்ட விரும்புகிறேன். நேரமில்லாத காரணத்தால் எல்லாவற்றையும் படிக்கவில்லை.

"Perarignar Anna on the 27th June 1967, when he replied to the general discussion in the Legislative Council, said as below :—

The Centre has got a whip in its hand in the nature of grants, because the grants are given by the Centre at its discretion. The financial relationship, as far as the plan amount is concerned, is to be reviewed and reviewed urgently so that we should not be robbed of what is our due ...... the relationship between the State and the Centre should be reviewed.

The powers which the Central Government have assumed in regard to mobilisation allocation and pattern of utilisation of resources for the Plan have reduced the States to the status of suppliants for aid from Centre. Though some may shrink from discussing this issue on account of party discipline, all those who have looked at this problem from the purely economic angle, have expressed regret at these trends in financial relationship between Centre and State. Many Chiefs of State Governments have recognised that State Governments cannot discharge their responsibilities in meeting the growing aspirations of the people for a new way of life, unless the resource base of the States is considerably strengthened by giving them access to growing sources of revenue and by allocating the Plan resources on an agreed basis leaving the States with complete freedom to utilise them according to their judgment.

It should be understood by one and all, that the time has come and come urgently too and with emphasis-none can minimise that the time has now come—when the State—Centre relationship should be reorganised on a more stable basis."

இப்படிப்பட்ட காரணங்களை நீங்கள் ஒரு பக்கத்திலே சொல்லிக் கொண்டு இந்த விலைவாசி உயர்வை, மக்கள் தாங்க முடியாத அளவிற்குள்ள இந்தச் சுமையை மக்கள் தலையில் திணித்துக் கொண்டிருக்கக் கூடிய மத்திய அரசினுடைய பாதையில் நீங்கள்சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தப் பாதை எந்த இடத்தை நோக்கிச் சென்றிருக்கிறது என்பதை மாண்புமிகு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1981-வது வருஷத்தில் இந்த அவையிலே கொடுககப்பட்ட பட்ஜெட் ஸ்பீச்சில் 'கோட்' பண்ணியிருக்கக் கூடியதை நான் இங்கே சொல்லுகிறேன்.

" The working of the federal structure all these years has created a sense of frustration in the minds of the States. They feel that the States are fast becoming dole getting Corporations. The States are feeling more and more frustrated that their demand is to make the Union Government think that there should be a review of the Constitution, a reappraisal of the Constitution.

ஆனால் இதை சொல்லிக் கொண்டு அந்தப் பாதையில் இந்த அரசு செல்லுகிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு அந்த விரக்தி மக்களை எங்கே கொண்டு சென்று கொண்டிருக்கிறது? கர்நாடகா மாநிலத்தில், ஆந்திரா மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டது. சமீபத்தில் நடந்து முடிந்த கேரள மாநில தேர்தலிலும், மேற்கு வங்க மாநிலத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சியின் பாதை சரியல்ல என்று மக்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த நிலையிலே அந்தப் பாதையிலேயே, மக்கள் விரக்தி அடைந்துள்ள அந்த பாதையிலேயே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள அந்த பாதையிலேயே அதாவது மத்திய அரசினுடைய பாதையிலேயே சென்று கொண்டிருக்கிற காரணத்தினால்தான் இங்கே நீங்கள் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையை கொடுக்க வேண்டிய துரதிருஷ்டம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





இந்த நிலையில் எங்களைப் பார்த்து நேற்றைய தினம் ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர், "பச்சோந்திகள்" என்று சொன்னார். "அதற்கு அவர் சொன்ன காரணம். "நீங்கள் ஒரு புறத்திலே விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள், இன்னொரு பக்கத்திலே விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளை பொருள்களுக்கு நியாயமான விலையை கொடுக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள்" என்பதுதான். இதற்கு நான் ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது எங்களுடைய கொள்கை என்பது மட்டுமல்லாமல், இதற்காக நாங்கள் வாதாடுகிறோம் என்பது மட்டுமல்லாமல், மேற்கு வங்க இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சியில் இந்தக் கொள்கை அமுலாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கையின் அடிப்படையில் அவர்கள் வாக்குகளை 1977 இல் 1982-ல் வாங்கினார்கள் என்பது மட்டுமல்லாமல், அதை ஓரளவிற்கு அரசியல் சட்டத்திற்குள்ளேயே இருந்து கொண்டு எந்த அளவிற்குச் செய்து முடிக்க முடியுமோ அந்த அளவிற்கு, அவர்கள் தங்களுக்குள்ள 'ரெஸ்ட்ரெயின்'-க்குள் இருந்து கொண்டு என்ன செய்ய முடியுமோ அதை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதாலேதான் 1982 ஆம் வருஷ தேர்தலில் எந்த அளவிற்கு காங்கிரஸ் கட்சிக்கு இடம் கிடைத்ததோ அதைவிட கம்மியான இடங்கள் வரக்கூடிய அளவிற்கு அந்த மாநிலத்தில் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னுமொன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசின் கையில் அதிகாரம் இருக்கிறது, நிதி இருக்கிறது என்பதால் இன்று தமிழகத்திலே மிகப் பெரிய வறட்சி நிலை ஏற்பட்டதற்குப் பிறகும் வறட்சி நிவாரணப் பணிகளுக்குத் தேவையான பணம் ஒதுக்கப்படவில்லை. மேற்கு வங்கத்திலேகூட அன்றைய தினம் 60 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணப் பணிக்காக கேட்டபோது ஆறரை இலட்சம் ரூபாய் தான் மத்திய அரசு தந்தது. ஆனால் தேர்தல் வரும் நேரத்தில் அந்த மாநிலங்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய், 600 கோடி ரூபாய், 800 கோடி ரூபாய் தருகிறார்கள் என்றால். இன்று அவர்கள் கையில் இந்த அதிகாரம் இருக்கிறது என்பதுதான். இதனால்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 மார்ச் 26

தான் அவர்களுக்கு இந்த நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட வறட்சி மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பாதையில் இந்த நாட்டை எடுத்துச் செல்வது சரியல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை போல ஒரு விரக்தி மக்களுக்கு ஏற்பட்டு அவர்கள் மாற்றுப் பாதையை விரும்புகிறார்கள். மாற்றுப் பாதையை மக்கள் விரும்புகிறார்கள் என்பதை தேர்தல்கள் நிரூபித்துக்

(பிற்பகல் 12-30)

கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே தமிழகத்தை வாட்டி வதைக்கும் வறட்சிக்குத் தேவையான நிதியை மத்திய அரசிடமிருந்து வாங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதற்காக, இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சிப் பொறுப்பில் உள்ள மேற்கு வங்கத்தில், மக்களிடம் நிலைமைகளைச் சொல்லி, மக்களைத் திரட்டி, மக்கள் இயக்கங்கள் வழியாகத் தேவையான பணத்தை வாங்க நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள். அப்படிப்பட்ட பாதையை இங்கேயும் கடைபிடிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் காலையிலே ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது, தொழிலாளர்கள் ஒத்துழைப்பு தேவை என்று சொன்னார்கள். இன்று வறட்சி நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ள குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்களிடம் அப்படிப்பட்ட ஒத்துழைப்பை வாங்கும் வகையில் அவர்களை நடத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது, 1986 ஆம் வருடத்திலே. . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் சொன்னதை அவர்கள் கேட்டதற்கு நன்றி. ஆனால் அதைத் தவறாகத் திரும்பச் சொல்வதால் ஒரு மாற்றம். தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருந்தால் தங்களுடைய உரிமைகளைப் பெற முடியுமென்ற கருத்துப்பட நான் குறிப்பிட்டேன். அவர்கள் அதை வேறுவிதமாகச் சொல்கிறார்கள்.



1987 மார்ச் 26]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்தைச் தவறாகச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள், ஒற்றுமை வேண்டுமென்று சொன்னதை வரவேற்கிறேன். திட்டங்களை அமுல்படுத்தும்போது ஒற்றுமையுள்ள தொழிலாளர்களின் ஒத்துழைப்பு நாட்டுக்குத் தேவை. இன்றைக்கு தமிழக அரசின் குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு ஸ்டேன்டிங் ஆர்டரை ஏற்படுத்த வேண்டுமென்று நீதி மன்றம் சுட்டிக் காட்டியும் இன்றுவரை அதை ஏற்படுத்தவில்லை. ஆயிரத்திற்கும் அதிகமான என்.எம்.ஆர். தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 480 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று இங்கே சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் அவர்கள் நிரந்தரப்படுத்தப்படவில்லை. என்ன நடக்கிறதென்றால், தனியார்களிடம் அந்த வேலையை ஒப்படைக்கும் நிலை இந்த வாரியத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டும். அவர்களுக்கு நியாயமான ஊதியமும், சட்டபூர்வமான உரிமைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சமீபத்தில் வழங்கப்பட்ட பொங்கல் பரிசான ரூபாய் 300 பல தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. போனஸ் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு சங்கம் வைக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. அவர்கள் சங்கப் பிரதிநிதிகளோடு பேசி, அவர்கள் கோரிக்கைகளைக் கேட்க முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட போக்கு, நம்முடைய வறட்சி நிலையை எந்த முறையிலே சந்தித்து, நாட்டுக்கு எந்த முறையிலே நல்லது செய்யவேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த முறையிலே நம் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள நிச்சயமாக உதவி செய்யாது. (மணி அடிக்கப்பெற்றது)

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழகத்தில் முதலமைச்சர்

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஒத்துழைப்போடு, ஆதரவோடு தமிழகத்தின் நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையை முதற்கண் நான் வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நிதி நிலை அறிக்கையில் வருவாய்க் கணக்கு 3,437.43 கோடி என்றும், செலவுக் கணக்கு 3,654 கோடி என்றும், புதிய வரிகள் மூலம் 98 கோடி ரூபாய் சரிக் கட்டிய பிறகு, இறுதி பற்றாக்குறை 131 கோடி என்றும் அறிவித்திருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பற்றாக்குறை பட்ஜெட் என்று எல்லாம் தங்களுடைய கருத்துக்களை காரசாரமான முறையில் சொல்லி, விமர்சனம் செய்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புவதெல்லாம், நல்ல திட்டங்களைத் தீட்டுகிற நேரத்தில், சமூக ஞானத்தோடு மக்கள் நலன் கருதி திட்டங்களைப் போடும்போது, எதிர்நோக்கி இருக்கின்ற வறட்சியைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் வருகின்ற காலகட்டத்தில், இப்படிப்பட்ட சில சிக்கல்கள், இன்னல்கள், இடையூறுகள் ஏற்படுவது இயற்கைதான். ஆங்கிலத்திலே சொல்வார்கள் Democratic growth creates problems' என்று. பிரச்சினைகள், சிக்கல்கள், இடர்பாடுகள் எப்போது உருவாகுகிறதோ அப்போது ஜனநாயகத்தின் வளர்ச்சி தோன்ற ஆரம்பித்திருக்கிறது என்று தெளிவாக அறிஞர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான், இந்திய திருநாடு விடுதலை அடைந்து பன்னெடுங்காலம் ஆனாலும் கூட நமது நாட்டில் இப்போது பார்க்கின்ற பிரச்சினைகள், ஆண்டான்-அடிமை, பணக்காரன்-ஏழை, முதலாளி-தொழிலாளி, மிராசுதார்-உழவன் என்கின்ற இரு வர்க்க சமுதாய கட்டமைப்பினைக் கொண்டதாகத்தான் இந்திய திருநாடும், தமிழகமும் தொடர்ந்து பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. இந்த வர்க்கப் போராட்டத்தில் வெகு ஜனங்களாக இருக்கின்ற, சாமான்யர்களுக்காக உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையானதால், இந்த நிதி அறிக்கை அப்படிப்பட்ட வெகு ஜனங்களின், சாமான்யர்களின் தரத்தினை உயர்த்துவதோடு, அடித்தள நோக்கத்தை



ஆழமான கருத்தாக மனதிலே கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயே கொஞ்சம் சிரமங்களுக்கு இடையிலேதான் வந்திருக்கின்றது. ஆனால் வெகு ஜன மக்களால் தம்தம் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டப்பட்டு, வாழ்த்தொலிகளோடும் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற, மாற்றுக் கருத்துடை நண்பர்கள் வெகு ஜனங்களின் நலனுக்காக வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை எப்படி விமர்சிக்கின்றார்கள் என்று எனக்குப் புரியவில்லை. தரப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில், சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை, மேடு பள்ளங்களை அகற்றிட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்ட சமூக சிந்தனையின் விளைவுகள்தான் என்று எனக்குக் கண்ணில்படுகின்றது. நான் இதைக் கூறுவதற்குக் காரணம், வரி கொடுப்பதை அனைவரும் கொடுக்கிறார்கள். இருக்கின்ற இரு வர்க்கத்தில் ஏழை வர்க்கமும் கொடுக்கிறது. பணக்கார வர்க்கமும் கொடுக்கிறது. ஆனால் போடப்படுகின்ற திட்டங்கள் மூலம் அளிக்கப்படுகின்ற சலுகைகள் எல்லாம் ஒரு சாராருக்கு போய்ச் சேர்கிறது என்பதை மாற்றி நாட்டில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இந்த சலுகைகள் போய்சேரவேண்டும் என்பதற்காகத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே திட்டங்களைத் தீட்டி இருக்கின்றார்கள். ஆகவே நான் அருள்கூர்ந்து மாமன்ற உறுப்பினர்களை பணிவன்போடு வேண்டிக்கேட்டுக்கொள்வதெல்லாம், விளைவுகளை வைத்து, மாற்றங்களை வைத்து ஆராயுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். எடுக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களில் விளைவுகள் என்னவாக இருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்த்தார்களானால், சிந்தித்துப் பார்த்தார்களானால், தமிழக முதலமைச்சர் அவர்கள் தீட்டுகின்ற திட்டம் அடித்தள மக்களின், 90 சதவிகிதத்திற்கு மேலான மக்களின், பாமர மக்களின் நெஞ்சத்திலே குடியிருக்கின்ற அளவிலே அமைந்திருக்கின்றன. அப்படித்தான் அவர்கள் திட்டங்கள் அமைந்து இருக்கின்றன. நான் இதற்கு உதாரணத்திற்கு ஒன்றைக் கோடிட்டுக் காட்டினால் தவறாக ஆகாது, உண்மைக்கு புறம்பாக இருக்காது என்று நான் நம்புகிறேன்.

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 26

தமிழகத்தில் இருக்கின்ற 84 லட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிப்பதன் மூலம் அந்த அடித்தள மக்களுக்கு நன்மைகள் போய்ச் சேரவேண்டும், அவர்கள் பெறவேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களை தீட்டியிருக்கின்றார்கள். குழந்தைகளுக்கு இலவச சீருடைகளை வழங்குவதன் மூலம் அடித்தள மக்களில் பலருக்கு அல்லது சிலருக்காவது நன்மைகள் கிடைக்கும் என்ற நோக்கத்தோடுதான் திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். அந்த ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்களை வழங்குவதன் மூலம் அந்த நன்மைகள் அடித்தள மக்களுக்கு போய்ச் சேருகிறது என்ற முறையிலேதான் புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்கள் தீட்டி இருக்கின்றார்கள்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், இந்த நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பதை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் ரூ. 20 கோடி அளவுக்கு ஒதுக்கி வயலிலே, கழனிகளிலே வேலை செய்கின்ற தாய்மார்கள், ஏழை சிறார்கள், பிஞ்சு உள்ளங்களின் காலிலே வெய்யில் சூடு படக்கூடாது என்றும், அவர்கள் கால்களிலே முள் தைக்கக்கூடாது என்றும் ஒரு நல்ல நோக்கத்தோடு இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கின்றார்கள். ரூ. 20 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். காலணி வழங்கும் திட்டத்தை இந்த நிதி நிலை அறிக்கையிலே சேர்த்திருக்கின்றார்கள். ஆகவே போடப்படுகின்ற திட்டங்கள். அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் ஆகியவற்றை பார்ப்பீர்களேயானால் நிச்சயமாக நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி இருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். இந்த திட்டங்களின் விளைவாக என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை பற்றிய ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னால் தவறாக ஆகாது என்று நான் கருதுகிறேன். இந்த திட்டங்களின் விளைவாக இன்றையதினம், 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,62,56,393 பேர்கள் படித்திருக்கின்றார்கள். அப்போது ஏறத்தாழ 36, 37 சதவிகிதம் பேர்கள் படித்திருக்கின்றார்கள். ஆனால் 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகும், அதற்குப் பின்னரும் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி படித்தவர்களின் எண்ணிக்கை 2,36,37,619 பேர்கள், ஏறத்தாழ 48 சதவிகிதம் பேர்கள் தமிழகத்தில் படித்தவர்களாக இருக்கின்றார்கள். கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கின்றார்கள். இது எல்லாம் இந்தத் திட்டங்களின் அடிப்படையிலே வந்தது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்களேயானால், அரசின் நோக்கங்கள் அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் நியாயமானவை என்று சொல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.



1987 மார்ச் 26] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

(பிற்பகல் 12-40)

அதோடு இன்னொன்றையும் நான் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய தலையாய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டிய வயிறும், உலர்ந்த நாவும், பஞ்சடைந்த கண்களுமாய் காட்சியளிக்கின்ற ஏழையெளிய மக்களுக்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நல்ல திட்டத்தை, மாபெரும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருப்பதற்காக அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன். ஏழையெளிய மக்களுக்கு, முதியோர்க்கு, விதவைகளுக்கு உலக வங்கியின் கடன் உதவியுடன் சுகாதார வசதி போன்ற வசதிகளை செய்து கொடுக்க இந்த அரசு 400 கோடி ரூபாய்க்கான திட்டத்தை அறிவித்திருக்கிறது. அதையும் வெற்றிகரமாக நிறைவேற்றித் தந்து மக்களின் பாராட்டுதல்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பெற வேண்டுமென்று இந்த இனிய நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நான் ஒரு பதிலை இங்கே எடுத்துச் சொன்னால் அவர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது) அவர்கள் கருத்துக்களை சொல்லும்போது விலைவாசி பற்றி வெகுவாக புள்ளிவிவரங்களை இங்கே எடுத்து வைத்தார்கள். அவருக்கு நான் ஒன்றை இங்கே எடுத்துச் சொல்வதை என்னுடைய கடமையாக கருதுகிறேன். 1977 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருந்த மொத்த நியாய விலைக்

136508

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 26

கடைகளின் எண்ணிக்கை 9 ஆயிரம். அருள்கூர்ந்து அவர் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, இந்த 10 ஆண்டு காலத்திலே, தமிழகத்திலே அதிகப்படியாக ஏற்படுத்தப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை 21 ஆயிரம். அடித்தளத்தில் இருக்கிற ஏழை யெளிய மக்களுக்காக, அத்தியாவசியப் பொருள் களையும், மற்ற பொருள்களையும் நியாய விலையில் கொடுப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உறுதியாக, திடமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு படி மேலே போய் சொல்வதாக இருந்தால், இந்திய ரிசர்வ் வங்கி அளித்திருக்கிற ஒரு புள்ளிவிவர கணக்கை இங்கே எடுத்துச் சொன்னால் அன்புக்குரிய சகோதரர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருது கிறேன். இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரத்தை 1986 ஆகஸ்ட் மாதம் வெளிவந்த அறிக்கையிலே கோடிட்டு காட்டியிருக் கிறார்கள். இந்தியாவிலேயுள்ள சில மாநிலங்களிலுள்ள விலை வாசிப் புள்ளிகளைப் பற்றி அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக் கிறார்கள். உத்தரப்பிரதேசம் 590. ராஜஸ்தான் 575. பஞ்சாப் 597. மகாராஷ்டிரா 566. மத்தியப் பிரதேசம் 589. கேரளா 631. ஜம்மு-காஷ்மீர் 614. பீகார் 597. மாண்புமிகு உறுப்பினரின் கட்சி ஆண்டுகொண்டிருக்கிற வெஸ்ட் பெங்கால் 627. அஸ்ஸாம் 607. ஆனால் தமிழகம் மட்டும்தான் 564 விலைவாசிப் புள்ளி களைக் கொண்ட, குறைந்த விலைவாசிப் புள்ளிகளைக் கொண்ட ஒரு மாநிலமாக இந்தியாவிலேயே விளங்கிக்கொண்டிருக்கிறது என்று அவர்கள் தெளிவாக கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்கு 576 என்பதையும், அதைவிட குறைந்த விலைவாசிப் புள்ளிதான் தமிழகத்தில் இருக் கிறது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.



1987 மார்ச் 26]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, விலைவாசிப் புள்ளி, தனியார் பணி முறை இவைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நாட்டிலே கடுமை யான ஆட்சேபணை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக் கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைய தினம் தமிழகம் முழுவதும் உள்ள ஏழையெளிய மக்களுக்கு நியாய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 21 ஆயிரம் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியைப் பற்றி இன்னும் ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** உறுப்பினரின் நேரம் முடிந்துவிட்டது. உறுப்பினருக்கு அதிக நேரம் பேச கொடுக்கப்பட்டுள்ளது. தொகுதி பற்றி முதலில் பேசிவிட்டு பிறகு மற்ற பிரச்சினைகளைப்பற்றி பேசியிருக்க வேண்டும்.

திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் இந்திய தேசியக் காங்கிரசின் சார்பில் 1987-88 நிதிநிலை அறிக்கையின் மேல் என்னைப் பேச அனுமதி அளித்தமைக்கு நன்றி. நமது நிதி யமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பட்ஜெட், நாட்டிற்கு முதுகெலும்பு என்று கூறக்கூடிய விவசாயிகள் என்று கூறப்படும் அந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் அதில் இருப்ப தாகத் தெரியவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல், கரும்பு போன்றவைகளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை.

கரும்புக்கு ஒவ்வொரு மாகாணங்களிலேயும் ஒரு டன்னுக்கு ரூபாய் 300 வரையில் கொடுத்துள்ளார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்திலே இரண்டாண்டுகளாக நாங்களும் பலமுறை முதலமைச்சர் அவர்களையும், நமது தொழில் அமைச்சர் அவர் களையும் அணுகியும்கூட 200-க்கு மேல் கொடுக்க முடியாது என்று, இதுவரை எந்தவித பதிலும் சொல்லாமல் இருக் கிறார்கள். கரும்புக்கு விலை கொடுக்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் ராஜீவ் அவர்கள் 1986-87 ஆம் ஆண்டிலே எல்லா மாகாணங் களுக்கும் கடிதம் எழுதி உள்ளார்கள். காரணம், விவசாயிகள் நல்ல முன்னேற்றமடைந்தால்தான் இந்த நாடு முன்னேற முடியும் என்ற நோக்கத்தோடு அறிவித்தார்கள். 1985-86-இல் ஒரு ஆலை யின் உற்பத்தியில் 65 சதவீதம் லெவிக்கும் 35 சதவீதம் வெளி மார்க்கெட்டிலும் விற்றுக் கொள்ளலாம் என்று ஒரு நியதி சட்டம் இருந்தது. ஆனால் அதை மாற்றி நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 50 சதவீதம் வெளிமார்க்கெட் டிலும், 50 சதவீதம் லெவிக்கும் கொடுக்க வேண்டுமென்று ஆணை யிட்டார்கள். ஒரு கிலோவுக்கு 40 பைசா அதிகம் கொடுக்க வேண்டுமென்றும் அறிவித்திருந்தார்கள். அந்த அறிவிப்பின்படி பார்த்தால் ஒரு விவசாயிக்கு டன் ஒன்றுக்கு 300 ரூபாய் கொடுத் தாலும்கூட நமது ஆலை முதலாளிகள் பெருமளவில் கோடிக் கணக்கில் சம்பாதிக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதை உங்கள் மத்தியிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இன்றைக்கு வெளிமார்க்கெட்டிலே விற்கக்கூடிய சர்க்கரையை 50 சதவீதம் விற்கின்றார்கள். அதிலே இன்றைக்கு 500, 600 என்று விற்கப்படுகிறது. லெவிக்குக் கொடுக்கும் சர்க்கரையைக் குறைந்த விலையில் கொடுத்தாலும்கூட அதற்கு ஒரு கிலோவுக்கு 40 பைசா அதிகப்படுத்தி உள்ளார்கள். அந்த 40 பைசாவை விவசாயி களுக்குக் கொடுத்தாலும் கூட ஒரு டன்னுக்கு 40 ரூபாய் அதிகமாகக் கொடுக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், ஏனோ இந்த வருஷமும், போன வருஷமும் கரும்பு விவசாயிகளாகிய நாங்கள் பார்த்தாகிவிட்டது. இந்த வறட்சிப் பகுதியிலே இரவு பகல் பாராமல் தண்ணீரைத் தேக்கி அந்த ஆலைக்குக் கொண்டு சென்றால் எங்களுக்கு விலை கொடுக்க





மறுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. நானும் இரண்டு வருஷங்களாக நம்முடைய முதலமைச்சர் அவர் களையும் அமைச்சர்களையும், நம்முடைய தொழிலமைச்சரையும் நேரிலே கண்டு, பல தடவை இதுசம்பந்தமாகப் பேசியிருக்கிறேன். அதை இன்னும் எவ்வளவு கொடுக்கலாம் என்று அறிவிக்காமல் இருக்கிறார்கள். 200-க்கு மேல் கொடுக்காவிட்டால் விவசாயப் பெருங்குடி மக்களாகிய நாங்கள் இந்தக் கரும்பை இனிமேல் நடாமல் இருப்பதுதான் நல்லது என்ற முறைக்கு வந்து விடுவோம் என்பது போல் இருக்கிறது

அடுத்தபடியாக, எந்தவொரு நாட்டிற்கும் தண்ணீர்தான் முக்கியம். நீர், நிலம் இரண்டும் இருந்தால்தான் அந்த நாடு முன்னேற முடியும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் தெரிந்தும்கூட இந்த அரசும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசும் சரி, இரண்டும் இந்த இருபதாண்டுக் காலத்தில் பெரிய நீண்ட காலத் திட்டங்களை இதுவரையில் தீட்ட முடியாமல் இருக்கிறது. சிறுசிறு திட்டங்களைத் தீட்டி, மக்களைப் பார்த்து, இதோ திட்டங்களைத் தீட்டிவிட்டோம் என்று கூறி இன்னும் ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவரவர்கள் காலத்திலே கேரளாவிலே மேற்கே நோக்கிச் செல்லும் நதிகளையெல்லாம் கிழக்கே திருப்பி விட வேண்டுமென்று இந்தச் சட்டசபைக்கு நான் வந்தபொழுதே கூறியிருக்கிறேன். ஆனால் இதற்கு முன்னால் இருந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் யூசுப் அவர்கள் நான் கேரளாவில் தேதி கேட்டிருக்கிறேன், தேதி கிடைத்தவுடனே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை அவர் எந்த முடிவும் எடுக்கவில்லை. எனவே இப்பொழுது இருக்கும் நமது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பெருமுயற்சி எடுத்து நம் தமிழகத்தைச் செழிக்க வைக்க முன்வர வேண்டுமென்று இந்தச் சபையின் வாயிலாக அவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால் ஒரு நாட்டில் நீர்வளம் தான் பெரிது. நீர் வளம் இல்லாவிட்டால் எந்த நாடும் முன்னேற முடியாத ஒரு இக்கட்டான நிலைக்குப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்

1987 மார்ச் 26] [திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர்]

கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் எந்த நாட்டில் செழிப்பாக தண்ணீர் இருக்கிறதோ அந்த நாடுதான் செழிக்கும்; விவசாயம் செழிக்கும். விவசாயம் பெருகினால்தான் இந்த நாட்டிலுள்ள தொழிலாளர்கள் வாழ முடியும்; நிர்வாகஸ்தர்கள் வாழ முடியும்; எம்.எல்.ஏ.—க்கள் வாழ முடியும்; ஏழை எளிய மக்கள் வாழ முடியும்.

(பிற்பகல் 12-50)

இன்றைக்கு இந்த நாட்டிலே நீர்வளம் இல்லாமல் போன காரணத்தால் ஏராளமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள்; வறுமை பெருகிவருகிறது. அதன் காரணமாக வாங்கிய கடனை மக்கள் திருப்பிச் செலுத்த முடியாமல் கஷ்டப் படுகிறார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னால் கூட்டுறவுக் கடன்கள் எவ்வளவோ வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களை எல்லாம் திருப்பிச் செலுத்தியிருக்கிறார்களே தவிர, தள்ளுபடி செய்யவில்லை. நீர்வளமும் பிற வளமும் இருந்த காரணத்தால் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டிவிட்டார்கள். அது மட்டுமல்லாமல், நல்ல விளைச்சலும் இருந்தது; பொருளுக்கு நல்ல விலையும் இருந்தது.

ஆனால், அப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு இல்லாத காரணத்தால் நமது புரட்சித் தலைவர் அவர்கள் 125 கோடி ரூபாய் ஒருதடவையும், 75 கோடி ரூபாய் இன்னொரு தடவையுமாக மொத்தம் 200 கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். தண்ணீர் வசதி தாராளமாக இல்லாததால் விவசாயம் நடைபெறாமல், பொருளாதார வளம் ஏற்படாமல், வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதால் இப்படி தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லை என்றால் மக்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவது தங்களுடைய கடமை என்று உணர்ந்திருப்பார்கள். கட்ட முடியவில்லை என்பதால் விவசாயிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சங்கம் வைத்துப் போராடினார்கள். அதற்குப் பின்னாலே புரட்சித் தலைவர் அவர்கள் கருணை காட்டி, 200 கோடி ரூபாய்க்கான கடனைத் தள்ளுபடி செய்தார்கள். இந்தத்



1987 மார்ச் 26] [திரு. சோ. கலிதீர்த்தான்]

தள்ளுபடிக்கு தகுதியானவர்கள் என்று அறிவிக்க ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை அறிவித்திருக்கிறார்கள். அந்தக் காலக்கெடுவை இன்னும் இரண்டு மாதங்கள் நீட்டித்துக் கொடுத்தால் பாக்கியுள்ள தொகையையும் மக்கள் கட்டி விடுவார்கள்; எல்லாப் பணமும் வசூலாகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் குடிதண்ணீர், குடிதண்ணீர் என்று மக்கள் அலைந்து திரிகிற காட்சியைப் பார்க்கிறோம். 'தண்ணீர் தண்ணீர்' என்று ஒரு சினிமாப் படம் எடுத்தார்கள். அதிலிருந்தே தமிழ்நாட்டில் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டு, இன்றைக்கு குடிதண்ணீரும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு, மக்கள் வரிசை வரிசையாக குடங்களை வைத்து நின்றுகொண்டிருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எத்தனையோ திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள்; குடிதண்ணீருக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள். ஆழ்குழாய்க் கிணறுகளை நிறையப் போடச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஆழ்குழாய்க் கிணறுக்கு 35,000 ரூபாய் செலவிடுகிறார்கள். அதிலே கால்பகுதி வீணாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். இந்தப் பணங்களைச் செலவு செய்து கேரளாவில் மேற்கு நோக்கிப் போய் அரபிக் கடலிலே வீணாக விழுகின்ற தண்ணீரை கிழக்கு பக்கம் திருப்பிவிட நடவடிக்கை எடுத்திருந்தால் இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீணாக அரபிக் கடலில் விழும் தண்ணீரை கிழக்கே திருப்பி விடக்கூடிய வகையில் 3, 4 திட்டங்கள் இருக்கின்றன. மூணாறுத் திட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டம், ஆனைமலைத் திட்டம், பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம், நீராறுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் இருக்கின்றன. நம்முடைய நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் செயல்பட்டு, கேரள அமைச்சரை அணுகி, அங்கிருக்கிற மற்ற அமைச்சர்களையும் அணுகி, நல்ல முடிவு எடுத்தால் தமிழ்நாட்டை ஒரு வளமான மாநிலமாக மாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது)

* திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இந்திய நாடு கிராமங்கள் நிறைந்த நாடு என்று மகாத்மா காந்தியடிகள் கூறியிருக்கிறார்கள். நம்முடைய தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை மனதிலே வைத்து தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப்புற மக்களை மேம்படுத்துவதற்காக பல சீரியத் திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

உதாரணமாக ஒருங்கிணைந்த சத்துணவுத்திட்டம், சுகாதார வசதி, காலணி வழங்கும் திட்டம், வறட்சி நிவாரணப் பணிகள், கிராமங்களுக்கு தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல் போன்ற திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்காக இந்த அரசால் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களாகும்.

மனித சமுதாயத்திற்கு இந்தப் புவி உலகில் தேவையானவை மூன்று ஆகும். உணவு, உடை, உறையுள் என்பவைதான் அவை. மனித குலத்திற்கான இந்தத் தேவைகள் தமிழ்நாட்டில்தான் சிறப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. பள்ளிக் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும். முதியோர்களுக்கும் உணவு வழங்கப்படுகிறது. ஏழை பள்ளிச்சிறாருக்கும், முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கும், விதவைகளுக்கும் இலவச உடை வழங்கப்படுகிறது. கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்குமான பெரும் வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாறு இந்தியாவிலேயே இங்குதான் மனித உணர்வுகள் உணரப்படுகின்றன.

உலகின் இரு பெரும் வல்லரசு நாடுகளுள் சோவியத் ரஷ்யாவும் ஒன்று. அந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன. அனைவருக்கும் காலணி கொடுக்கப்படுகிறது. அதேபோல் இன்றையதினம் இங்கே தமிழக அரசும் ஏழை எளிய மக்களுக்கு காலணிகள் வழங்குகிற





திட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு தமிழ்நாட்டிலே ஏழை எளிய மக்களுக்கு காலணி வழங்குவதால் வேலைவாய்ப்பு பெருகுவதோடு அந்த அளவுக்கு பொதுச் சுகாதாரக் கேடுகள் தோன்றாத வகையில் தடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது உரியவர்களுக்கு அது சரியான முறையில் சென்று சேர்வதைக் கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பரவலாக இப்போது வறட்சி இருந்தபோதிலும், இந்த அரசு அதை போர்க்கால அடிப்படையில் சமாளித்து வருகிறது. இப்பணி முடிந்த பின்னர் அரசு எல்லா நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் எல்லா காலங்களிலும் நிரந்தரமாகக் குடிதண்ணீர் கிடைக்கின்ற வகையில் உலக வங்கியில் நிதி உதவியோடு ஓர் தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலும் அரசாங்கம் சில புது வரிகளையும் சில வரிச் சலுகைகளையும் செய்வது நடைமுறையாக இருந்து வருகிறது. அந்த வகையில் புரட்சித் தலைவர் அரசின் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக விவசாய மக்களுக்கு பல சலுகைகளை வரியில் அறிவித்துள்ளார்கள். ஜெனரேட்டர் வரிக் குறைப்பு, விசைக் கலப்பை வரிக்குறைப்பு, இரசாயன உரத்திற்கு வரிக் குறைப்பு, உதிரி பாகங்களின் மீதான வரிக்குறைப்பு போன்றவற்றை அளித்திருப்பது வரவேற்கத்தக்கது ஆகும். சில உறுப்பினர்கள் சிலவற்றின் மீதான வரி உயர்வைக் குறிப்பிட்டார்கள். வளர்ந்து வரும் இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாட்டின் சூழலில் இது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தால் இந்த நிதிநிலை அறிக்கை அனைத்து பிரிவினருக்கும் நன்மை தரும் கற்பகத் தரு என்பதில் சந்தேகமில்லை.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சில கருத்துக்களை இப்போது இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள கள்ளக்குறிச்சி தாலுக்கா மிகவும் பெரிய தாலுக்காவாக உள்ளது. அதை

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1987 மார்ச் 26

மூன்றாகப் பிரித்து சங்கராபுரம் தாலுக்கா மற்றும் என்னுடைய தொகுதியில் உள்ள கல்ராயன் மலைப் பகுதியையும், வெள்ளி மலைப் பகுதியையும் துணைத் தாலுக்காவாக மாற்றவேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள எங்களுடைய தாலுக்காவை கடலூரில் சேர்ப்பதற்கு அங்கேயுள்ள அதிகாரிகள் திட்டம் தீட்டி இருப்பதாகச் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுடைய வசதிகளைக் கருதி 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விழுப்புரம் பகுதியோடு எங்களுடைய தாலுக்காவையும் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தன்னிறைவுத் திட்டத்தை தமிழகத்தின் பல பகுதிகளில் நிறைவேற்றி இருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்ராயன் மலை ஒன்றியம் இந்த அரசு வந்ததற்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது. அங்கே இருக்கின்ற மக்கள் அனைவரும் மலைவாழ் மக்கள். அவர்களுடைய நிலையைக் கருதி அங்கே தன்னிறைவுத் திட்டத்தை ஏற்படுத்தி அந்த மக்களுக்காக செயல்படுத்த வேண்டும் என்று இங்கே நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அதேபோல் மலைவாழ் மக்களுடைய மேம்பாடு திட்டத்திற்காக குறிப்பாக வெள்ளிமலையிலிருந்து தேராடிபட்டு வரையில் ஒரு சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதேபோல என்னுடைய தொகுதியில் மேகம் என்ற நீர்வீழ்ச்சி இருக்கும் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்றும் வகையில், வெள்ளி மலையிலிருந்து மேகம் நீர் வீழ்ச்சி வரை ஒரு சாலை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியில் மலை வாழ் மக்கள் படிக்கின்ற ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடமே கிடையாது. பொதுப்பணித் துறையின் கட்டிடத்தில் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு தனியாக ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு



1987 மார்ச் 26] [திரு. சோ. கலிதீர்த்தான்]

இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கல்ராயன் மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்கும், வனத்துறையினருக்கும் அடிக்கடி தகராறுகள் வருகின்றன. அதற்குக் காரணம் அந்த மக்களுக்கு பட்டா சரியாகக் கொடுக்கவில்லை. அதோடு சில இடங்களை சர்வே செய்தபோது 'காடு' என்று போட்டு இருக்கிறார்கள். அதனால் வனத்துறையினர் அந்த மலைவாழ் மக்களை துன்புறுத்துகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்ற நம்முடைய நாவலர் அவர்கள் அந்தப் பகுதியினை ரி-சர்வே செய்து அவர்களுக்கு உரிய பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்ராயன் மலையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதியைச் சார்ந்த சங்கராபுரத்தில் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியோடு புதிய கட்டிடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கள்ளக்குறிச்சியிலிருந்து மூங்கில்துறைபட்டு செல்லும் சாலை, ஆலைக்கு கரும்பு எடுத்துச் செல்லும் ஒரு சாலையாகும். இந்தச் சாலை போதிய அகலம் இல்லாத காரணத்தால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்தச் சாலையை அகலப்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் புதூர்-டு-சேரப்பட்டு செல்லும் சாலை மிகவும் சீர்கேடாகி இருக்கிறது. அந்தச் சாலையை நல்ல முறையில் செப்பனிட்டுத் தரவேண்டும். அதேபோல சங்கராபுரம்-மோட்டாம்பட்டிச் செல்லும் சாலையையும் நல்ல முறையில் செப்பனிட்டுத் தரவேண்டும்.

அதேபோல தாவடிபட்டிலிருந்து சேஷசமுத்திரம் செல்லும் சாலையை கிராமச் சாலை திட்டத்தின் கீழ் செப்பனிட்டுத் தர வேண்டும். அதேபோல பொன்பாப்பட்டு-டு-காடிசித்தூர் செல்லும் சாலையையும் கிராமச் சாலை திட்டத்தின் கீழ் செப்பனிட்டுத் தர வேண்டும். அதேபோல அகரகோட்டாலத்திலிருந்து பழைய சிறுவங்கூர் செல்லும் சாலையின் குறுக்கே மணிமுத்தா அணை இருக்கிறது. அந்த அணையின் மேலே இருக்கும் பாலம் உடைந்து போய்விட்டதால் அந்த வழியாக செல்லுகின்ற பேருந்துகள்

எல்லாம் மணிமுத்தா அணையின் மீதுதான் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. பொதுப்பணித் துறையினர் அதைத் தடுக்கின்றனர். அணையும் பழுதடைந்துவிடும் என்ற காரணத்தாலே விரைவாக மணிமுத்தா அணையின் கீழே ஒரு பாலம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல முஸ்குந்தா நதியின் மேல் அணை கட்டித்தரவேண்டும் என்று பல முறை இந்த அவையில் பேசியிருக்கிறேன். அந்தப் பணியை விரைவுபடுத்தி அணை கட்டி, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பரப்பகால் ஓடையின் குறுக்கேயும் ஒரு சிறு அணை கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் 4, 5 ஏரிகளுக்கு தண்ணீர் செல்ல வழி வகை ஏற்படும்.

என்னுடைய தொகுதியைச் சார்ந்த கல்ராயன்மலையில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்றும் பொறியியல் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்த சர்க்கரை ஆலையில் இரண்டு முறை தீ விபத்து ஏற்பட்டது. இப்போது 10 நாட்களுக்கு முன்பாக கூட தீ விபத்து ஏற்பட்டு 30 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கோமுகி அணை கால்வாயையும், மணிமுத்தா நதி அணையின் கால்வாயையும் லைனிங் செய்து கொடுக்க வேண்டும். லைனிங் இல்லாததால் தண்ணீர் கடைமடைப் பகுதிக்கு சரிவர வந்து சேருவது கிடையாது. ஆகவே லைனிங் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற வாய்ப்பு அளித்தமைக்காக முதலாவதாக நன்றி கூறிக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றாம் முறையாக நடைபெறுகிற இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகிற நான் இம்முறையாவது அரசை பாராட்டக்கூடிய சூழ்நிலையில் பட்ஜெட் தாக்கல் செய்திருப்பார்களா என்ற ஆசையில்



பார்த்தால் இம்முறையும் உங்களை பாராட்ட முடியாமல் போய் விட்டதே என்று வருத்தத்தோடும் வேதனையோடும் என்னுடைய கருத்துக்களை இந்த அவை முன் வைக்க ஆசைப்படுகிறேன். பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்த அரசு—இந்த அரசு என்று சொல்வதற்குப் பதிலாக தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஆட்சிக்கு வந்த 20 ஆண்டுக் காலத்தில் தொடர்ச்சியாக பட்ஜெட் நிலவரங்களைப் பார்ப்பீர்களானால், ஒவ்வொரு ஆண்டும் தாக்கல் செய்யப்படுகிற பட்ஜெட்டிலே கல்லுக்கோ, மண்ணுக்கோ, செங்கல்லுக்கோ இப்படி ஏதாவது ஒன்றுக்கு வரியைப் போட்டு, இயற்கையில் கிடைக்கக்கூடிய எதையும் விட்டு வைக்காமல் வரி போடுகிற பாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே கழகங்களின் ஆட்சி வந்த பிறகு கல், மண், செங்கல் இவைகளுக்கெல்லாம் வரியென்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரிகளைப் பற்றியெல்லாம் நான் நீர்க்கமாக சொல்வதென்றால் மற்ற பிரச்னைகளுக்கு நேரம் இருக்காது என்பதாலே அவைகளைப் பற்றி ஆழமாகச் சொல்லாமல், முடித்துவிட்டு என்னுடைய கருத்துக்களுக்கு வரலாமென்று கருதுகிறேன்.

இன்றையதினம் நீங்கள் தாக்கல் செய்திருக்கிற பட்ஜெட் பற்றி சொல்கிறபோது கல்விக்கென்று பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள். ஆண்டுதோறும் 20 கோடி ரூபாய், 50 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்கிறோம் என்ற வகையில் செலவு செய்யப்படுகிறதேயல்லாமல் அந்தப் பணம் மக்களுக்குத் தேவையான பணிகளுக்குச் சென்று சேர்கிறதா என்றால் இல்லை. இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு ஓலைகள் கூட இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பள்ளிக்குச் செல்கிற பிள்ளைகள் படித்து முடித்து சந்தோஷமாக வீடு வந்து சேர்வார்களா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அவ்வளவு தூரம் பள்ளிகள் பாழடைந்து இருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே இந்தப் பள்ளிக்குச் செல்கிற பிள்ளைகளுக்கு செருப்புகள் வழங்குவதற்குப் பதிலாக, அவர்கள் உயிரோடு திரும்புவதற்காக அந்தப் பணத்தை பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பிற்காகச் செலவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேளாண் விளைபொருள் விற்பனை நிலையங்கள் 278 நிலையங்கள் இருக்கின்றன. இதிலே 3,000 அரசு ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதிலே விவசாயிகளின் நலனைக் கருதியுள்ள 'வேயர்ஸ்" என்ற போஸ்டில் கிட்டத்தட்ட 2,000 பேர் 278 செண்டர்களில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பனையேறும் தொழிலாளர், மீனவத் தொழிலாளர், கட்டிடத் தொழிலாளர் இவர்கள் எல்லாம் விபத்தில் மரணமடைந்தால் பனையேறும் தொழிலாளிக்கு 5,000 ரூபாய் என்றும், கடலில் மீன் பிடிக்கும் மீனவத் தொழிலாளிக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றும், கட்டிடத் தொழிலாளிக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றும் இப்படி வேறுபட்ட தொகைகளை உதவித் தொகையாக நிர்ணயித்து இருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். தனிப்பட்டவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறபோது எந்த வித்யாசமும் இல்லாமல் எல்லோருக்கும் ஒரே தொகையென்று நிர்ணயித்து, எந்தப் பிரிவினராக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தாய் தமிழகத்தோடு இணைப்புப் போராட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் தாய் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று போராடிய தியாகிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பின்னாலே எமர்ஜென்சி டிக்ளேர் ஆன பிறகு அந்தப் பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். வறுமையால் வாடுகிற அந்தக் குடும்பத்தினருக்கு மீண்டும் அந்த உதவித் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த கவர்னர் உரையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்தை முதலில் இருந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு 400 கோடி ரூபாயை அரசு முதலீடு செய்வ



தாகக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், குமரி மாவட்ட ஜனதாக் கட்சி சார்பிலே, பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்ட ஒரு சானலை, 18 ஆண்டுக் காலமாக தூர் எடுக்காமல் இருந்ததை, நாங்களே மாவட்ட மக்கள் சார்பாக பணத்தைச் செலவு செய்து, தூர் எடுத்து சுத்தம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்படி பாதிக்கப்பட்டிருக்கிற சானலில் மீண்டும் சிமென்ட் தளம் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கிள்ளியூர் தொகுதிக்கு உட்பட்ட கிள்ளியூர், பைங்குளம், ஆறுதேசம், மேற்குளம், கருங்கல், நல்லூர், நட்டாளம், மௌனகுமேடு ஆகிய பகுதிகளில் புதியதாக வெட்டப்பட்ட சானல் கூட பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்டதாகும். அந்தச் சானலுக்கு கூட 20 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இன்னும் சிமென்ட் தளம் அமைக்கப்படவில்லை. அந்தச் சானலுக்கும் சிமென்ட் தளம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த 9 ஆரம்ப சுகாதார நிலையங்களும் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டவைகளாகும். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் அன்றைக்கு எந்த நிலைமைத்திலே இருந்ததோ, அதே நிலைமைத்தில்தான் இருக்கின்றன. குறைந்தபட்சம் 20 படுக்கைகள் கொண்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாக அவைகளை அப்-கிரேட் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் போலீஸ் அட்டூழியம் மிகக் காட்டுத்தனமாக நடந்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த ஆண்டு பட்ஜெட் விவாதத்திலே பேசுகிறபோதுகூட எங்களுடைய மாவட்டத்தின் பொதுச் செயலாளர் திரு. பி. டி. எஸ். மணி அவர்களை காவல்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மார்ச் 26

துறையினர் அடித்தார்கள் என்று குறைபட்டுக் கொண்டோம். ஆண்டாண்டுதோறும் ஒவ்வொருவரை அடிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு என்னவோ இந்த ஆண்டு கூட அந்தப் பகுதியிலே இருக்கிற அருமைச் சகோதரர் வர்கீஸ் என்கிற நபரை போலீசார் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியிருக்கிறார்கள். இதைப்பற்றி நீதி விசாரணை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது ஆர்.டி.ஓ. விசாரணை நடைபெறும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். எனவே குளச்சல் காவல் நிலையத்தில் நடந்துவரும் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நீங்கள் கவனித்து, அத்துமீறி நடக்கின்ற போலீசார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் இங்கே அரசுப் பணியாளர்கள் வேலைக்கு வருகிற நேரத்தில் அவர்களுக்கு இடப்படக்கூடிய முத்திரை, பனிஷ்மென்ட்-டிரான்ஸ்பர் என்பதாகும். தமிழகத்திலே எங்கே பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அந்த அதிகாரி தண்டிக்கப்படுகிறார் என்று சொன்னால், பனிஷ்மென்ட்-டிரான்ஸ்பர் என்ற முறையில் அவரை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீங்கள் மாற்றிவிடுவதாகத் தெரிகிறது. ஒரு நல்ல அதிகாரியை நீங்கள் தந்தால் கன்னியாகுமரி மாவட்டம் வளமாக வாழும் என்று எதிர்பார்க்கலாம். மாறாக, பனிஷ்மென்ட்-டிரான்ஸ்பர் என்று சொல்கிற அதிகாரியை நீங்கள் அங்கே போட்டால், அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக அவர்கள் செயலாற்ற முடியுமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த மாவட்டத்தை நீங்கள் தயவுசெய்து புறக்கணிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் இல்லை. கன்னியாகுமரி மாவட்டம் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்களும், ரப்பர் மரங்களும் அழிந்துவிட்டன. பட்டுவிட்டன. அவற்றை



1987 மார்ச் 26] [டாக்டர் தே. குமாரதாஸ்]

மீண்டும் எடுக்க முடியாது. எனவே இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வறட்சி நிவாரணம் என்பதற்குப் பதிலாக நஷ்டஈடு என்ற வகையில், அரசு அவர்கள் மீது இரக்கம் கொண்டு, நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரசு மருத்துவமனையில் போதுமான அளவிற்கு தரமான மருந்துகள் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் கவனித்து, அந்தப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வகையில் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சித்த மருத்துவர்களுக்கு கடந்த ஆண்டிலிருந்து ஆண்டுக்கு 3,600 ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 150 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் பாராட்டக்கூடிய திட்டம்தான். ஆனால் எத்தனை பேர்களுக்கு கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைப்பதற்கு முன்பாக, கேரளாவோடு இணைந்திருந்த நேரத்திலே, அங்கே ரெஜிஸ்ட்ரேஷன் செய்த மருத்துவர்களுக்குக் கூட ஆண்டு வருமானம் பெறக்கூடிய அந்தச் சான்றிதழ் மறுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒருமுறை அங்கே ரெஜிஸ்ட்ரேஷன் செய்த காரணத்தாலே, இங்கே ரீ-ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணாமல் போய் விட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய உதவித்தொகை கிடைக்காமல் போய்விட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல், முஞ்சிறை பகுதியில் குழித்துறை ஆற்றின் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அந்த வேலைகளை இன்னும் வேகமாக நடைபெறச் செய்து, அதை சீக்கிரமாக முடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பைங்குளம் பகுதியில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மார்ச் 26

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே கணபதியான்கடவு என்ற பகுதியில் ஒரு பாலமும், களியல், திற்பரப்பு ஆகிய 2 பகுதிகளை இணைக்கக்கூடிய தெற்பக் கடவு என்ற பாலமும் மிக மிக முக்கியமாக இருக்கிற காரணத்தால், அதை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டும், இதுவரையில் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை. ஆகவே அந்த இரண்டு பாலங்களையும் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சின்னமுட்டம் பகுதியில் அமைக்கப்பட இருக்கும் மீன்பிடித் துறைமுக வேலைகள் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே அந்த வேலைகளையும் வேகமாக முடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தேங்காய்ப்பட்டணம் என்ற பகுதியில் ஒரு மீன்பிடித் துறைமுகத்தை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், நெசவாளர் பெருங்குடி மக்களுடைய துயரைத் துடைக்கிற வகையில், அவர்களுடைய இல்லங்களிலே நிறைந்திருக்கக்கூடிய துணியை அரசு கொள்முதல் செய்து, அவர்களுக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாத நிலைமையில், அங்கே புதிய தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும் என்று பல கோரிக்கைகள் விட்டும், அரசு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை. இதனால் எங்களுடைய மாவட்டத்தை ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

Thiru G. K. FRANCIS: Hon. Deputy Speaker, Sir, in regard to the Budget for 1987-88, let me congratulate the Hon. the Finance Minister for having presented a well-blended Budget. On the one hand, it continues the policy to aid the weaker sections of the society and, on the other hand, continues the generation of additional momentum to spur the Tamil Nadu economy to faster economic growth and fair social justice. Despite



1987 மார்ச் 26] [Thiru G. K. Francis]

several constraints, the most recent being the failure of the monsoon, those constraints have not dampened the enthusiasm of the economy. It goes to the credit of the Government under the able and dynamic leadership of the Hon. Dr. M. G. Ramachandran that the economy, particularly, agriculture has shown outstanding and remarkable progress. The increase in the productivity level of agriculture is a key indicator of the progress achieved. The emphasis on modern techniques of agricultural production has resulted in Tamil Nadu agriculture being on a very strong footing. The current emphasis being given by Government to the establishment of agro-based industries is a step in the right direction. This would hasten the pace of growth of agriculture on the one hand and provide larger employment opportunities on the other.

Sir, three important policy announcements have been made by the Government. One of them, that deserves special mention and that would go a long way in making the children of Tamil Nadu better educated and better nutritioned, is the increase in the Budget allocation for Education by nearly Rs. 40 crores. The success and growth of any nation will depend on its quality of manpower and this increase in the allocation for Education will improve the quality and the width of education. The Government has to be congratulated for the staggering success it has made in implementing vocational courses. In fact to my knowledge Tamil Nadu has become the pace-setter in vocational courses. The second policy announcement is the extension of the Chief Minister's Nutritious Noon Meal Programme that will shine out as the star of all social welfare measures is the recently announced programme of provision of footwear. The allocation of Rs. 20 crores for this scheme is highly remarkable and, as a fall-out of this scheme, a large number of persons would be able to obtain sustained employment. The third policy announced, that would benefit the children of Tamil Nadu is the proposal to increase the number of health sub-centres. The child welfare centre has been doing a quiet but efficient job in making our children important and responsible citizens of our country. The proposal to seek World Bank aid is also a step in the right direction and, considering the good work being presently done, I am sure the World Bank would provide the necessary help. I am extremely grateful to the Government of Tamil Nadu for increasing the fee compensation grant for all Anglo-Indian students studying in Anglo-Indian schools. This has helped the Anglo-Indian community a great deal. I request the Govern-

ment to consider granting one seat for Anglo-Indian students in each of the Engineering and Medical Colleges and at least two seats in each of the Industrial Polytechnics and in the institutions having Nursing course.

One of the most discernible aspects of the Tamil Nadu economy is the rise of inflation. Statistics reveal that Tamil Nadu has the highest Consumer Price Index and, as a result, the common man in Tamil Nadu is put to great difficulty in that he has to pay more for his daily requirements than the average Indian in any other State. Even vegetables and other common items of daily use have been showing increasing trends on the one hand and, on the other, the price of land, houses, etc. have been shooting up. Is this undue rise in prices the result of the policies of the Central Government whose fiscal policy has resulted in a high-cost economy? The Hon. the Finance Minister has pointed out that the economic development of the State is the joint responsibility of the State and the Central Governments. The major share of this responsibility is borne by the Central Government and only a small share devolves on the State and anything else would be far from the truth. The theme that India must shine forth as a true federal State and that States shall become self-governing entities with greater authority and more powers needs to be examined in greater depth. There is no doubt that India needs a strong centre. Yet, at the same time, States must be recognised as units which must be given powers to determine policies and issues suitable to their own particular environment. An outstanding feature between Tamil Nadu and the Centre is its cordial relationship and all credit for this result goes to the Hon. the Chief Minister. This could result in the State being given more powers to direct its economy more ably. In the case of the State's policy on Prohibition, despite the heavy loss due to the abolition of the arrack-shops and toddy-shops, the Centre has not come to the rescue of the State in meeting this loss of revenue. It is necessary that the Centre should bear this loss of revenue and help the State Government implement a very vital policy, strongly pronounced by the Father of the Nation.

The provision of funds made in the Budget for Housing is a clear-cut policy to get the massive housing programme started. The escalation of the prices of houses and the lack of houses for the weaker sections of the society is pathetic and there is an urgent need to speed up the housing programme to provide relief to the





poor. In fact, the Anglo-Indian community is struggling in this field and a large number of Anglo-Indians live in deplorable housing conditions. I request the Government to be magnanimous in allotting houses for poor Anglo-Indians. This will be a great reief to our community.

The various concessions offered by the Hon. the Finance Minister to the Electronics industry would give a boost to the field of electronics. The future economy will come to depend more and more on electronics and this concession of lowering the Sales-tax from 6 per cent to 4 per cent will definitely give a fillip to the developing electronics industry. Coupled with the reduced Sales-tax, it is necessary to provide other inputs to the industry to make it competitive and strong. The various other tax-concessions given by the Hon. the Finance Minister in respect of capital goods and raw materials purchased by the units in the Madras Export Processing Zone and the reduction of Sales-tax on motor cars and two wheelers are all outstanding measures. Even the additional taxes imposed by the Hon. the Finance Minister are fair and just.

Sir, before concluding, I must say that there is an urgent need for the Government of Tamil Nadu to look into the problems of the minorities. I shall be happy if, to utilise the capacities of the minorities in a productive way, a Minority Development Corporation is established. Such a Corporation will be in a position to provide avenues of employment for the minorities. Our neighbouring State of Karnataka has done well to set up a Minority Development Corporation and I do not think Tamil Nadu should be lagging behind. We should establish this Minority Development Corporation to help the weaker sections of the minorities who are now struggling in life.

I once again thank the Hon. the Finance Minister for a well-formulated Budget which, I am sure, will pivot Tamil Nadu to greater heights. Thank you, Sir.

(பிற்பகல் 1-20)

* திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது சட்டமன்றப் பேரவையில் மூன்றாவது பட்ஜெட்டைப் பொறுத்து, இந்திய தேசிய காங்கிரசின் சார்பிலே நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1987 மார்ச் 26

விழைகிறேன். இங்கே நேரத்தைப் பற்றிய பிரச்சினை இருப்பதால் முதலில் பட்ஜெட்டைப் பற்றிப் பேசாமல், தொகுதிப் பிரச்சினைகளைப் பற்றி பேசிவிட்டு, பிறகு கான்ட்ரவர்ஷியலுக்கு வருகிறேன். (குறுக்கீடு)

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மூன்று அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். குறிப்பாக முதலமைச்சர் இருக்கிறார். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நிதியமைச்சர் இருக்கிறார். மற்றும் ஒரு அமைச்சர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் மூன்று அமைச்சர்கள் இருந்தும், ஏனோ தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட நிலையில், துர்ப்பாக்கியமான மாவட்டமாக இருக்கிறதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரியை நம்பி இருக்கிற விவசாயிகளாகிய நாங்கள் இன்று காவிரி பொய்த்திருக்கின்ற நேரத்திலே, தண்ணீருக்காக அல்லலுறுகிறோம், அவதியுறுகிறோம். அதைப்பற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது தெரியவில்லை. காவிரி நீர்ப் பிரச்சினையை ட்ரிப்யூனலுக்கு விடவேண்டுமென்பது குறித்து இந்த அரசின் நிலை எங்களுக்குத் தெரியாத நிலையில் நாங்கள் எப்படி நிம்மதியாக இருக்கமுடியும் என்பதை இந்த அரசு யோசித்துப் பார்க்கவேண்டும். 'ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அந்த வகையிலே மற்ற மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

எங்களது தஞ்சை மாவட்டத்திலே விவசாயத்திலே உள்ள பிரச்னைகளால்தான் நாங்கள் இப்போது தவிக்கிறோம் என்றால், தொழில்துறையிலே பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கவேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தில் தொழில்துறை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 மார்ச் 26] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

இப்போது நரிமணத்திலே பெட்ரோல் கிடைக்கிறது. அங்கே பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலையை வைக்கச் சொல்லி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தலாம், ஆனால் அதையும் செய்யவில்லை.

நாகையிலே அனல் மின் நிலையம் வர இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் அதைப்பற்றியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. நாகையிலே அனல் மின் நிலையம் வந்தால், அங்கே உள்ள மைனர் போர்ட்டாக (துறைமுகம்) உள்ளது மேஜர் போர்ட்டாகி (துறைமுகம்) தொழில் துறையிலே தஞ்சை மாவட்டம் முன்னேறுவதற்கு வாய்ப்புண்டு.

அதையடுத்து, எங்கள் கும்பகோணம், திருவிடைமருதூர் அல்லது பாபநாசம் தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று நாங்கள் கரடியாகக் கத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த அரசு கேளாக் காதினராக இருந்துவருகிறது. இந்த ஆண்டு 30 சர்க்கரை ஆலைகளை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ததாக இந்த அரசு சார்பாக அறிவிக்கப்பட்டது. ஆனால் 12 ஆலைகளுக்காகத்தான் பரிந்துரை சென்றிருப்பதாக அறிகிறோம். அதிலே கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை வரவேண்டுமென்று நாங்கள் கோரிக்கைகள் விடுத்ததற்கு சரியான பதில் இல்லாமல் தனியார் ஆலைகளின் மனுவை மத்திய அரசுக்கு அனுப்பி கொடுத்ததால், அவர்களுக்குத்தான் (தனியார்களுக்கு) இந்த அரசு கவனம் செலுத்துகிறது என்பது கண்டிப்புக்கு உரியதாகும்.

அடுத்து விவசாயிகளைப் பொறுத்தவரையில், வானம் பொய்த்தது, காவிரி பொய்த்தது அதற்காக அரசு நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்லாமல் கிஸ்தியும், மற்ற கூட்டுறவு பாக்கிகளையும் மிகவும் கண்டிப்பாக அதிகாரிகள் வசூலிக்கிறார்கள். அதை நிறுத்தி விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1987 மார்ச் 26

அதேபோன்று கூட்டுறவுக் கடன்களாக ரூ. 125 கோடி தள்ளுபடி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதேயொழிய, உண்மையிலேயே வட்டிக்கு வட்டி, கூட்டு வட்டி, அபாரத வட்டி என்று மற்ற செலவுகள் எல்லாம் போடப்பட்டு, அதை அசலாகக் கொண்டு, மீண்டும் வட்டி, அபராத வட்டி போன்றவைகள் போடப்பட்டு, வந்த மொத்த தொகையில்தான் ரூ. 125 கோடி யினை அரசால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே விவசாயிகள் வாங்கிய அசல் தொகையிலிருந்து ரூ. 125 கோடி தள்ளுபடி செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நல்ல திட்டங்கள், பயனுள்ள திட்டங்கள், விவசாயிகள் முன்னேற்றக் கூடிய திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்படவில்லை.

விவசாயிகளுக்கு ரூ. 35-க்கு உரக் கூப்பன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை உயர்த்தி ரூ. 75 க்குக் கொடுக்கவேண்டும். விவசாயிகள் உரக் கூப்பனைக் கொண்டு போய் கொடுத்து யூரியா கேட்டால் மூட்டை விலை ரூ. 119. அதே விவசாயி பணம் கொடுத்தால் மூட்டை விலை ரூ. 103 விலை. ஏன் இந்த பாரபட்சம்? விவசாயிகளுக்குக் கொடுப்பது போல் கொடுத்து, விலையேற்றத்திலே அந்தப் பணத்தைக் பறித்துக்கொள்கிறீர்களே, ஏன்? அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே வருகின்ற தண்ணீர் குறைவாக இருக்கிறது. அதை நல்லவிதத்திலே முறையாக விவசாயத்திற்கு அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். அதை கருத்திற் கொண்டு பெட டேம்ஸ்—படுக்கை அணைகள் சில கட்டப்பட வேண்டுமென்று விவசாயிகள் கடந்த ஆண்டு உண்ணாவிரதம் இருந்தார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் விவசாயிகள் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தலைமையிலே உண்ணாவிரதம் இருந்தும் அதை இந்த அரசு இன்றுவரை கவனிக்கவில்லை. 5 படுக்கை அணைகள் குடந்தை தொகுதி விவசாயிகளுக்கு அவசியம் தேவை. கூத்தனூர் வாய்க்கால் படுக்கை அணை, ஆரியப்படைவீடு வாய்க்கால் படுக்கை அணை, மாடாகுடி வாய்க்கால்



1987 மார்ச் 26] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

படுக்கை அணை, அண்ணலக்கரஹாரம் வாய்க்கால் படுக்கை அணை, தில்லையம்பூர் வாய்க்கால் படுக்கை அணை போன்ற 5 படுக்கை அணைகள் தேவை. கிட்டத்தட்ட ஆயிரம் விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இன்னும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் உண்ணாவிரத அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இந்த அவல நிலையை மாற்றி அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். அந்தப் பகுதியிலே விவசாயிகளுக்கு தண்ணீர் தட்டுப்பாடின்றி முறையாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தஞ்சை மாவட்டத்தை மூன்றாக பிரிக்க இருப்பதாக அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. அதுபற்றிய ஆய்வுகள் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அப்படி வரும்போது கும்பகோணத்தை—தஞ்சை மாவட்டத்திலே வியாபாரத் தலை நகரமாக, வியாபாரக் கேந்திரமாக விளங்குகின்ற, மிகவும் புகழ் பெற்ற டெம்பிள் சிட்டி என்று அழைக்கப்படுகின்ற, மகாமகம் திருவிழாவை தன்னகத்தே கொண்டுள்ள கும்பகோணத்தை—மாவட்டத் தலைநகரமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் அவர்கள் வளர்ந்த மாவட்டமான தஞ்சைக்கு, அவர்கள் வளர்ந்த ஊரான கும்பகோணத்திற்கு எப்போது வருகிறார் என்று கேட்க விரும்புகிறேன். அவசியம் அவர் தஞ்சைக்கும் கும்பகோணத்திற்கும் வரவேண்டும். அந்த காரணத்தினாலாவது எங்களுக்கு தேவையான திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்ற ஆசையினாலே அவருக்கு அழைப்பு விடுகிறேன். அவர் தஞ்சை மாவட்டத்திற்கு வந்து எங்கள் மாவட்ட விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு உள்ள நிரந்தரப் பிரச்சனைகளை தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் நேரடியாக வந்தால்தான் எங்களுடைய அவல நிலை அவருக்கு புரிவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும்.

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1987 மார்ச் 26

கும்பகோணத்தைப் பொறுத்தவரையில் கொசுவுக்குப் பெயர் போன இடம் என்று இன்றும் குறிப்பிடுகிறார்கள். அந்த அவப் பெயரைப் போக்குவதற்கு 1953-லே பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. நான் இதை பேசும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிரிக்கின்ற அளவிலேதான் கும்பகோணம் நகரத்தை இந்த அரசினர் வைத்திருக்கிறார்களே தவிர அதற்கான மாற்று ஏற்பாடுகளை செய்வதற்கு மனம் இல்லை அல்லது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய கஷ்டங்கள், அவலங்கள் ஆளும் கட்சியினருக்கு கிண்டலாக இருக்குமானால், அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. மக்கள் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலைதான் வரும். எனவே, பாதாள சாக்கடைத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். கும்பகோணம் 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதித் திட்டம்தான் நிறைவேற்றப்பட்டது. 34 ஆண்டுகள் ஆகியும் மற்றப் பகுதிகள் நிறைவேற்றப்படாமல் இருப்பது மிகவும் கொடுமையாகும்.

காவேரி கரையிலே அமைந்துள்ள கும்பகோணமும், அதைச் சார்ந்துள்ள பகுதிகளும் தண்ணீர் பஞ்சத்தால் தவிக்கின்றன. அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். அதற்கு இராணுவ நடவடிக்கைப் போன்ற தீவிர கேட்டுக்கொள்கிறேன். கும்பகோணம் நகரத்தில் 1901 என்று நினைக்கிறேன். அந்தக் காலத்தில் போடப்பட்ட ரோடுகள், சாலைகள் அதே நிலையிலேதான் இருக்கின்றன. பெருகியுள்ள ஜனத்தொகைக்கு தகுந்தாற்போல் நகரின் போக்குவரத்தினை செப்பனிடுவதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கும்பகோணத்திலே போக்குவரத்து நெரிசல் போன்ற நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக ஒரு பை-பாஸ் ரோடு கேட்டிருந்தோம். அதை இன்னும் இந்த அரசு திட்டமாக அறிவிக்கவில்லை. செயல்படுத்தவில்லை.

தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)



1987 மார்ச் 26] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

குடிசைமாற்று வாரியம் மூலமாகப் புதுப்பிக்கப்படுகின்ற வீடு 15-10 என்ற முறையிலே புதுப்பிக்கப்படுகின்றது. ஒரு சாதாரண குடும்பம் அதிலே எப்படி வாழ முடியும்? அதை 20-15 என்ற அளவிலாவது புதுப்பித்து லைட் ரூஃபிங் ஷீட்டோ அல்லது மங்களூர் ஓடுகளையோ போட்டுத்தர வேண்டும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து ஓல்ட்-ஏஜ் பென்ஷன், விடோ பென்ஷன், ஹேண்டிகேப்ட் பெர்சன்ஸ் பென்ஷன் ஆகியவற்றை பொறுத்தவரையில் இந்த அரசின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இந்த பென்ஷன்களுக்கு மனு போடுகிறவன், அடுத்தவன் எப்போது சாவான், தன்னுடைய பெயர் எப்போது லிஸ்ட்டிலே வரும் என்று எதிர்பார்க்கக்கூடிய அவலமான சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே இந்த பென்ஷன்களுக்கு மனு செய்யக்கூடிய, தகுதியானவர்கள், அனைவருக்கும் பென்ஷன் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

(பிற்பகல் 1-30)

ஒருவர் இறந்தால்தான் அடுத்தவர் பெயரைச் சேர்ப்பது என்ற முறையை, எண்ணிக்கையை சீலிங் வைத்துள்ள முறையை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியிலே, கும்பகோணம் மத்திய பகுதியிலே உள்ளது. காவிரி, அதன் கிளை நதிகள் அனைத்தும் கும்பகோணம் தாலுகா, பாபநாசம் தாலுகா, திருவிடைமருதூர் தாலுகா வலங்கைமான் தாலுகா போன்ற பகுதிகளிலே ஓடுகின்றன. ஆனால் டி.பி.டபிள்யூ.டி. காவிரி கோட்ட எக்சிக்யூடிவ் இன்ஜினியர் அலுவலகமோ தஞ்சையில் இருக்கிறது. பகுதிக்கு சம்பந்தம் இல்லாத இடத்தில் எக்சிக்யூடிவ் இன்ஜினியர் அலுவலகத்தை வைத்துக்கொண்டு, எங்களுக்குப் பிரச்சினை என்றால் நாங்கள் தஞ்சைக்கு ஓட வேண்டி இருக்கிறது. ஆகவே, காவிரி டிவிஷன் எக்சிக்யூடிவ் இன்ஜினியர் ஆபீசை கும்பகோணத்திலே வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை மக்களுக்கு செருப்பு வழங்குகின்ற இந்த அரசு, ஏழை மக்களுக்கு கழிப்பிடங்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நான் சமீபத்திலே என்னுடைய தொகுதியிலே பாதயாத்திரை சென்று, கிராமத்து மக்களையும், நகரத்திலே உள்ள மக்களையும் சந்தித்தபோது, ஒவ்வொரு பகுதியிலேயும், தண்ணீர் வசதியுடன்கூடிய பொதுக் கழிப்பறை இல்லை என்ற பிரச்சினை மிக, மிக அதிக அளவில் இருந்தது. இப்போது நகர, கிராமப் பகுதிகள் எல்லாம் விஸ்தரிக்கப்பட்டுள்ள நேரத்தில், அங்குள்ள மக்கள், குறிப்பாக பெண்கள், தாய்க்குலம் ஒதுங்குவதற்கு கூட இடம் இல்லாமல் தவிக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு முறையாகத் திட்டம் தீட்டி, கும்பகோணம் நகரிலும் கிராமங்களிலும் தேவையான அளவிற்கு தண்ணீர் வசதியுடன் பொதுக் கழிப்பறைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, படித்தவர்கள்—எஸ்.எஸ்.எல்.சி. அல்லது பட்டம் பெற்றவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்குகிற திட்டத்தில் உதவித்தொகை முறையாக வழங்கப்படவில்லை. அதோடு, டைப் ரைட்டிங் மற்றும் சுருக்கெழுத்து படித்தவர்களுக்குக் கூடுதலாக அந்த உதவித் தொகை சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அர்ச்சகர்கள், நாட்டிலே நலிந்தவர்கள். அவர்களுக்கு சம்பளப் பாக்கி நிறைய இருக்கிறது. அதையும் கொடுக்க வேண்டும். அவர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆலய ஊழியர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்கின்ற இந்த அரசு, அங்கேயுள்ள ஏழை அர்ச்சகர்களுக்கும், அவர்கள் நிலையைப் பார்த்து, அதிக ஊதியமும், பழைய பாக்கித் தொகையையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், நாங்கள்—கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களைச் சந்தித்து, தஞ்சை மாவட்டத்திலே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை





ஏற்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தபோது, அமைச்சர் அவர்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு மனுவே வரவில்லை என்று கூறினார்கள். ஆனால் மனு வந்திருந்தது. அதை மத்திய அரசிற்கு அனுப்பவில்லை. அதை ஏன் அமைச்சர் அவர்கள் அப்படி மாற்றிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. இன்றுவரை, கூட்டுறவுத் துறையிலே கொடுக்கப்பட்ட மனு, மத்திய அரசிற்கு அனுப்பப்படவில்லை. தனியார்கள் மனுக்கள்தான் அனுப்பப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களிடமே அமைச்சரின் மிஸ்-ரெப்ரசன்டேஷன் என்று சொல்லப்படக்கூடிய நிலையிலே இருப்பது வருந்தத்தக்கது. கூட்டுறவுத் துறையையும் அரசு ஊக்குவிக்க வேண்டும். கூட்டுறவுத் துறை நல்ல முறையிலே நடந்தால் அரசுக்கு வருமானம், பொதுமக்களுக்கும் வருமானம். அதை இந்த அரசு, அமைச்சரவை, முக்கியமாக, தொழில் அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு—குருங்குளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை—உங்கள் தலைவர், நீங்கள் தலைவர் என்று கொண்டுள்ள அண்ணாதுரை அவர்கள் பெயரிலே உள்ள குருங்குளம் அண்ணா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் மனுவை டெல்லிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. மு. சின்னக்குழந்தை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தமிழக அரசு சார்பில் 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களின் நிதிநிலை அறிக்கையில் மொத்தச் செலவு ரூ. 3,681.60 கோடியாகவும் மொத்த வரவு 3,474.7 கோடி ரூபாய் ஆகவும் உள்ள இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் மூலம் 75 கோடி ரூபாய் ஆக இருந்தாலும், இறுதிப் பற்றாக்குறை ரூ. 131.69 கோடியை, புரட்சித் தலைவர் அவர்களின் அரசு சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற மக்கள் முன்னேற்றம் அடைய எடுக்கும் நடவடிக்கையாக இருப்பதால், மத்திய அரசு அந்தப் பற்றாக்குறையைக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. சின்னக்குழந்தை] [1987 மார்ச் 26

இந்த நிதிநிலை அறிக்கையை, சில அரசியல் கட்சிகள் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் விமர்சனம் செய்தாலும், பொதுவாக அனைத்துத் தரப்பு மக்களும் வரவேற்கக்கூடிய நிதிநிலை அறிக்கையாக இது உள்ளது. அதிலும் குறிப்பாக, சத்துணவுத் திட்டம், இலவச காலணித் திட்டம், நகரப் பகுதி வீட்டு வளர்ச்சித் திட்டம், ஊராட்சி மன்றங்களுக்கு கலர் டெலிவிஷன் வழங்கும் திட்டம், 30 இலட்சம் இலவச வீடுகள் கட்டும் திட்டம், ஏற்கனவே இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள ஓட்டு வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டம், அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் திட்டம் போன்ற நல்ல திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன.

அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் ஏழைக் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் இலவசக் காலணி வழங்குகின்ற இந்தத் திட்டத்தில் ரூபாய் 20 கோடி ஒதுக்கியுள்ளதை நான் உளமாறப் பாராட்டுகிறேன். சத்துணவுத் திட்டத்தையும், தமிழ்நாட்டு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ் தற்போது அளிக்கப்படுகின்ற சுகாதார வசதிகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு நிதி நிலைக்கு உதவியாக உலக வங்கி மூலமாக வைத்துள்ள இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு முதல் 5 வரை வயதுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்க சமூக நலத்துறை நடத்தும் 28,125 குழந்தைகள் நல நிலையங்கள் இப்போது உள்ளன. தொகுதிக்கு 5 ஆயிரம் மக்கள் கொண்ட பல தொகுதிகளுக்கு சுகாதார வசதிக்காக பல நோக்கு பணியாளர்களும், 7,200 சுகாதாரத் துணை நிலையங்களும் உள்ளன. இதை 7,700 ஆக அதிகரிக்க உத்தேசித்துள்ளதைப் பார்க்கிறபோது தமிழக அரசு சுகாதார வளர்ச்சியில் எவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படையாக அறியலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சில புதிய வரிகளைத் திருத்தி அமைத்து இருந்தாலும் அவைகள் ஏழைகளை பெரிதும் பாதிக்காது.

மதுவிலக்கால் 250 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் ஏழைகளை பாதிக்கின்ற அளவுக்கு வரி உயர்வில்லை என்பதை அனைவரும் உணரவேண்டும். பொதுவாக மக்களுக்கு எல்லாவகை



1987 மார்ச் 26] [திரு. மு. சின்னக்குழந்தை]

யிலும் பலன் அளிக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையை பாராட்டுவதோடு எனது தொகுதியான ஆரணி தொகுதிக்கு சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிய சர்க்கரைத் தொழிற்சாலையை இந்த ஆண்டு அரசு கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே அரசு முடிவெடுத்துள்ள, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்படுகின்ற, கட்டியிருக்கின்ற வீடுகளையும், தமிழ்நாடு ஆசிரிய வீட்டுவசதி சங்கத்தின் சார்பாக கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள வீடுகளையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக எனது தொகுதியின் கோரிக்கையான கலைக் கல்லூரி அல்லது தொழில் நுட்பக் கல்லூரி அல்லது தொழிற் பயிற்சி நிலையம் போன்றவற்றில் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு நிதி அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள விவசாயக் கல்லூரியை—எனது தொகுதியிலுள்ள ஊசூர்குப்பம்பங்களா பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன—அங்கேயாவது அல்லது தச்சூர், செம்மண்மேடு பகுதியிலாவது ஆரம்பித்துக் கொடுக்க முன் வரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் பரிசீலனையில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஆரணி தாலுக்கா, செய்யார் தாலுக்கா, ஆற்காடு தாலுக்கா இவை மூன்றுக்கும் மத்தியிலுள்ள பனையூர் பகுதியிலோ அல்லது மாம்பாக்கம் பகுதியிலோ மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டை 'சிப்காட்' பகுதியிலிருந்து பல வாகனங்கள் திருச்சி 'பெல்' கம்பெனிக்கு ஆரணி வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆரணியிலிருந்து ஆற்காடு செல்லும் நெடுஞ்சாலையை அகலப்படுத்தவேண்டுமென்று பலமுறை கோரிக்கைகளை வைத்துள்ளோம். அதை அகலப்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. சின்னக்குழந்தை] [1987 மார்ச் 26

ஆரணி சப்-கோர்ட்டுக்கும், தாலுக்கா அலுவலகத்திற்கும் புதிய கட்டிடங்கள் கட்டும் பொறுப்பு பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதையும் இந்த ஆண்டே நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்காக 597 கோடி ரூபாய் செலவு செய்யும் நமது அரசு ஆரணி அரசினர் பெண்கள் மேல்நிலை பள்ளிக்கு புதிய கட்டிடத்தையும், அந்தப் பள்ளிக்கு ஒரு சுற்றுச் சுவரையும், மேலும் ஒரு புதிய துணைக் கட்டிடத்தையும் கட்டிக் கொடுக்குமாறு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நீண்டநாள் குறையான பணையூர் கிராம தரைப் பாலத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கியும் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. அந்த வேலையை இந்த நிதிநிலை ஆண்டிலேயே ஆரம்பித்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆரணியிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் வழியில் விண்ணமங்கலம் என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் ஒரு பாலத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலங்களில் திருச்சியிலிருந்து வருகின்ற வண்டிகளானாலும் சரி, மதுரையிலிருந்து வருகின்ற துரித வண்டிகளானாலும் சரி, ஆற்றிலே தண்ணீர் செல்லுகின்ற போது தேவிகாபுரம் வழியாகச் சுற்றிக்கொண்டு ஆரணி வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கும் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடுமையான வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில் ஆரணி ஒன்றியம், மேற்கு ஆரணி ஒன்றியம், ஆரணி நகரம் ஆகிய மூன்றிற்கும் சேர்த்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 36 ஆழ்துளைக் குழாய்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதை அதிகப்படுத்தி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 26] [திரு. எஸ். என். இராமசாமி]

(பிற்பகல் 1-40)

கடைசியாக, தச்சூர் ஆற்றிலிருந்து தேவிகாபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் எடுத்துச்செல்லும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அதையும் முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கிராம நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் திருவண்ணாமலைக் கோட்டப் பொதுப்பணிப் பொறியாளர் அவர்கள் 155 வேலைகளை 1986-87-ம் ஆண்டில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உயர்மட்டக் குழுவின் அனுமதி கிடைக்காமல் அந்த வேலைகள் எல்லாம் செய்யப்படாமலேயே இருக்கின்றன. ஆகவே அவைகளையும் இந்த ஆண்டே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆரணி நகராட்சியில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பழைய காய்கனி மார்க்கெட்டை இடித்துவிட்டு அங்கே புதிதாக காய்கனி மார்க்கெட்டைக் கட்டியிருக்கிறார்கள். அதில் ஏற்கெனவே ஒப்பந்தம் செய்திருந்த கடைக்காரர்கள் 150 பேருக்கு விடப்பட்ட கடைகள் போக மீதி உள்ள கடைகளை முனிசிபல் கமிஷனர் ஏலம் விட உத்தரவிட்டிருந்தும் அங்கே இருக்கிற நகரசபைத் தலைவர் நகரசபையில் தீர்மானம் போட்டு தன்னிச்சையாக அந்தக் கடைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதையும் அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1987—88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமீபத்தில் திருச்சி மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் மருதையாற்றுப் பாலத்தில் வெடி குண்டு வெடித்ததன் காரணமாக, விபத்துக்குள்ளானதைப் பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அந்த வெடி குண்டு

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 மார்ச் 26

விபத்தின் காரணமாக ஏற்பட்ட அந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி உதவி நடவடிக்கை எடுத்தமைக்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விஷமிகளைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். இருந்தபோதிலும் இது போன்ற விஷமத்தனம் கொண்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து அவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனையை வழங்க வேண்டும் என்று நான் அவையின் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் இப்போது இயற்கை பொய்த்ததன் காரணமாக அநேக மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. பல மாவட்டங்களில் விவசாய விளைச்சலே இல்லாமல் மக்கள் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். எனது தொகுதியில் எல்லா இடங்களிலுமே விளைச்சல் கிடையாது. எனவே எனது சாத்தான்குளம் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே சாத்தான்குளம் தொகுதியில் எல்லா இடங்களிலும மக்களிடமிருந்து பாங்க் கடன்களைப்பற்றி கண்டறிந்து அவற்றை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தப் பகுதிகளிலெல்லாம் வரி வசூலிப்பதையும் தள்ளிவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது நஞ்சை அறுவடை செய்ய முடியாமல் தாள் அறுவடை செய்யப்பட்ட பகுதிகளைத்தான் வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே தாலுக்கா முழுவதும் சரியான தகவல்களை வாங்கி பயிர் செய்ய முடியாத எல்லா இடங்களையும் வறட்சிப் பகுதிகளாகவே அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இன்று ஏற்பட்டுள்ள வறட்சியின் அடிப்படையில் ஆடு மாடுகளுக்குக்கூட தீவனம் இல்லாமல் அவைகள் வெளி இடங்களுக்கு விற்கப்படுகிறச் சூழ்நிலை இருக்கிறது.



1987 மார்ச் 26] [திரு. எஸ். என். இராமசாமி]

எனவே கிராமங்களில் ஆடு மாடுகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தீவனம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

விளைச்சல் இல்லாத இடங்களில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் வைக்கோலை வாங்கி சேமித்து வைக்க வேண்டுமென்றும் சேமித்து வைத்த வைக்கோலை சங்கம் மூலமாக கிராம மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் உற்பத்தி செய்யும் பல விளைபொருள்களுக்கு விலை கட்டுப்படியாகாத நிலைமை உள்ளது. குறிப்பாக நெல் விளைவிக்கும் விவசாயிகளுக்கு குறைந்த விலை இருப்பதால் அவர்களுக்கு விலையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் நல்லதொரு திட்டம் என்றாலும் கூட கடந்த காலத்தில் இறைவை இல்லாத காலங்களில் மீட்டர் சார்ஜ் என்று ரூ. 5 மட்டுமே வசூலித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 75 வீதம் வசூலிக்கப்படுவதன் காரணமாக விவசாயிகள் மிகவும் வேதனைக்கு ஆளாகிறார்கள். எனவே இதையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாத்தான்குளம் தொகுதி ஒரு வறட்சியான பகுதியாக இருப்பதன் காரணமாக அங்கே தொழில் வளம் ஏற்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு இந்திய அபூர்வ மணல் வாரியத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ஆர். கே. கரிச்சி அவர்கள் 31—12—1986 ஆம் தேதி மணவாளக்குறிச்சியில் உள்ள மணல் ஆலைக்கு வந்தபோது ரூ. 56 கோடியில் அங்கே ஒரு சிப்கோனியம் ஆக்சைடு ஆலை ஒன்றை அமைக்க திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான மூலப் பொருள் மேய்வரைச் சாத்தான்குளம் பகுதியில் அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். எனவே சாத்தான்குளத்தில் அதனை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 மார்ச் 26

தமிழகத்தில் கிராமங்களில் அதிகமான அளவு பயன்படும் மினி வேன்களுக்கு டாக்ஸ் அதிகம் வசூல் செய்யப்படுகிறது. அதே நேரத்தில் ஆண்டுக்கு இரு முறை எப்.சி. செய்ய வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. இதை மாற்றி லாரிகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை எப்.சி. இருப்பது போல வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். 'சுவேகா', டி.வி.எஸ்.-50 போன்ற வாகனங்களுக்கு காலாண்டு வரி விதித்திருப்பது அன்றாடம் உழைப்பவர்களை பாதிக்கக்கூடிய வகையில் இருக்கிறது. ஆகவே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நலிவுற்ற மக்கள் செய்கிற தொழில் செங்கல் உற்பத்தி செய்யும் தொழில். ஆகவே அதற்கு வரி விதித்திருப்பதை மறு பரிசீலனை செய்து குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சாத்தான்குளத்தில் அரசு மருத்துவமனை 4 படுக்கைகள் கொண்டதாக இருக்கிறது. அந்தப் பகுதி கிட்டத்தட்ட 17,500 ஜனத்தொகை உள்ள பகுதி. அதைச் சுற்றியுள்ள கிராம மக்களும் அந்தப் பகுதிக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே எந்தவிதமான அரசு மருத்துவ மனையும் இல்லை. ஆகவே 4 ஆண்டுகளாக அந்த அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டு வருகிறேன். இந்த நிதியாண்டிலேயே அந்த அரசு மருத்துவ மனையை 21 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவு படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தான்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த பொம்மன்குளம் ஒன்றியத்தில் கீரைக்குளம் என்ற ஊரில் கருமேனி ஆற்றில் ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். அந்தப் பாலத்தை இந்த ஆண்டு கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். கருங்குளம் ஒன்றியத்தில் வசலிகுளம் மக்களுக்கு தாமிரபரணி மேலக்காலில் ஆடு மாடுகள் இறங்க பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆனால் இதுவரை நடைபெற வில்லை. ஆகவே இந்த ஆண்டு அந்தப் பாலத்தைக் கட்டித் தர



[திரு. கு. தமிழரசன்]

வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கேயுள்ள யூனியனில் இருக்கக்கூடிய சுகாதார ஆஸ்பத்திரிகள் அனைத் திலும் பல இடங்களில் டாக்டர் இல்லாமலும், மருந்துகள் இல்லா மலும் உள்ள நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நிதியாண்டில் அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

எனது தொகுதியில் திருமுடையாவட்டம் என்ற ஊரில் ஓரிடத்தில் பெட்ரோல் ஊற்று காண்பிக்கப்பட்டது. அதன் அடியிலிருந்து பெற்றோல் வந்து கொண்டிருக்கிறது. அங்கே நானே நேரிடையாகப் போய்ப் பார்த்தேன். அதனுடைய ஆவியில் தீக் குச்சியைப் பற்ற வைத்தால் எரிகிறது. இதை மாண்புமிகு தொழில் அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். ஆகவே மாநில அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி இந்தத் திட்டத்தை பரிசோதனைக்கு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை விரைவுபடுத்தி பெட்ரோல் ஊற்றாலையை நிறுவ ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த நிதி நிலை அறிக்கையின் மீது இந்திய குடியரசு கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக மத்தியதர, ஏழை தொழிலாளிகள் மீது அதிக வரி விதிக்காத பட்ஜெட் என்பதால் நான் இந்த பட்ஜெட்டை மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரியலூர் இரயில் விபத்து பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில தீய சக்திகளால் அப்படிப்பட்ட கொடிய இரயில் விபத்து ஏற்பட்டிருக்கிறது. இது மிகவும் வருத்தத்திற்குரியது. யாராக இருந்தாலும் இதைக் கண்டித்தாக வேண்டும். இந்தத் தீய சக்தி களுக்கு சதித் திட்டம் வகுத்துத் தந்தவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுக்கு 30 இலட்சம் வீடுகள் என்ற வகையிலே அரசு ஒரு மிகச் சிறந்த திட்டத்தை தெரிவித்திருக்கிறது. நான் தாழ்த்தப் பட்ட மக்களின் சார்பாக முதல்வர் அவர்களுக்கு மிகுந்த நன்றி யையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுடைய வீட்டுப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினை இன்றைக்கு பூதாகாரமான பிரச்சினையாக வளர்ந்திருக்கிறது. ஆதிதிராவிடர்கள் வீட்டுப் பிரச்சினைகள் சம்பந்தமாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்றன. எனவே ஆதி திராவிடர்கள் குடியிருப்புப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு தனிக் கோர்ட்டை அமைத்து அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-50)

அதுமாத்திரமல்லாமல் நகர்ப்புறங்களிலே வசிக்கின்ற தாழ்த் தப்பட்ட அரசு அலுவலர்கள் அங்கே போய் வீடு கேட்டால், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னால், வீடு தராத நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களில் கூட வீட்டு வசதித் துறையினர் கட்டும் வீடுகளில் 20 விழுக்காடு தாழ்த்தப்பட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கினால் ஓரளவுக்கு நன்றாக இருக்குமென்று யோசனை கூற விரும்பு கிறேன்.

அடுத்து, காலணி வழங்கும் திட்டத்தை இந்த அரசு அறிமுகப் படுத்தியிருக்கிறது. உண்மையிலேயே அதை மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், குடிசை களுக்கு ஒளி விளக்கு, இவற்றுக்கு மேலாக இன்றைக்கு காலணி தரும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியிருக்கும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கிராமப்புறங்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் செருப்புகூட போட முடியாத நிலைமையும், இதனால் பல இனக் கலவரங்கள் மூளுவதையும் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையிலே,





இந்தக் காலணி வழங்கும் திட்டத்தின்மூலம் அரசே அவர்களுக்குச் செருப்பு தந்து, நீங்கள் அணிந்து கொள்ளுங்கள் என்ற நிலைமை வருவதால், கிராமப்புறங்களில் ஒரு சமூகப் புரட்சியை நாம் உரு வாக்குகிறோம் என்று சொல்லலாம்.

இந்த அரசு முக்கியமான துறைகளுக்கு பல்வேறு ஒதுக்கீடு களைத் தந்திருக்கிறது. ஆனால் ஆதி திராவிடர்களுக்கென்று தனி திட்டங்கள், ஒதுக்கீடுகள் இல்லாதது மிகவும் வருத்தத்திற் குரியது. மாண்புமிகு முதல்வரவர்கள் ஒருசில ஆண்டுகளுக்கு முன்னால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் அறிவிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஐந்தாண்டுத் திட்டம் இதுவரை அறிவிக்கப்படாமல் இருக் கிறது. மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்னதுபோல தாழ்த்தப் பட்ட மக்களுக்கு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களை பொருளாதார ரீதியில் வளரச் செய்ய, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தொழில் முதலீட்டுக் கழகம் ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போக்குவரத்துத் துறையிலே லாரி பெர்மிட்டுகள், பஸ் பெர்மிட்டுகள் வழங்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 18 விழுக்காட்டை மத்திய அரசும், பல மாநில அரசுகளும் தந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய அரசு அந்த முறை யைச் செயல்படுத்தாமல் இருக்கிறது. போக்குவரத்துத் துறை யிலே 18 விழுக்காடு ஒதுக்கீட்டை கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றியங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி தரு கின்ற ஒரு திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வழியாக வேளாண்மை மற்றும் கல்வி குறித்த நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் ஒளி பரப்பப்படும் என்று சொல்லுகிறார்கள். மேலும் தொலைக்காட்சி வழியாக தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சமூக விழிப்புணர்ச்சி

போன்ற கொள்கைகளை வகுக்கும் திட்டங்களையும், படங்களையும் எடுத்துக் காண்பித்தால், கிராமப் புறங்களில் மறுமலர்ச்சியை உருவாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் உயர் மட்டக் குழு இந்த மாநிலத்திலே கடந்த 6 ஆண்டுகளாக அமைக்கப்படாமல் இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் அப்படி உயர் மட்டக் குழு இருந்து, அரசுக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லி வருகிறது. இங்கே அமைச்சரவர்களால் உயர்மட்டக் குழு அறிவிக்கப்படும், அமைக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, இதுவரை அது அறிவிக்கப்படாமல் இருக்கிறது. எனவே ஆதி திராவிடர் உயர் மட்டக் குழு அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு மாநிலங்களில் ஆதி திராவிடர் நலன்கள் குறித்த திட்டங்கள் ஒழுங்காகச் செயல்படுத்தப்படுகிறதா என்று அறிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு, சட்டமன்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு சட்டமன்ற ஆய்வுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட சட்டமன்ற ஆய்வுக் குழுக்கள் இருக்கின்றன. தமிழகத்தில் அப்படிப்பட்ட சட்டமன்ற ஆய்வுக் குழு இல்லை. அப்படிப்பட்ட ஆய்வுக் குழுவை நம்முடைய மாநில அரசு அமைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 98-வது பிறந்த நாள் வருகிற ஏப்ரல் 14 ஆம் தேதி வருகிறது. இந்தப் பிறந்த நாளை மிகவும் சீரும், சிறப்புமாகக் கொண்டாட மத்திய அரசு நூற்றாண்டு விழாக் குழுவை மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. மக்வானா அவர்கள் தலைமையில் அமைத்துள்ளது. இங்கே கூட நூற்றாண்டு விழாக் குழுவை அமைச்சர் ஒருவர் தலைமையிலே அமைத்து, பேரறிஞர் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து, அம்பேத்கார் பெயரிலே ஒரு மாவட்டத்தை



அமைய வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே வற்புறுத்தி வருகிறோம். இந்தியாவில் இருக்கிற 20 கோடி ஒடுக்கப்பட்டிருக்கிற மக்களால் அவர் ரட்சகராக வணங்கப்படுகிறார். தமிழ் நாட்டில் அவர் பெயரிலே மாவட்டத்தை அமைத்து, இங்கேயுள்ள 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளை கவுரவப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற ஏப்ரல் 14-ம் நாள் அவருடைய 98-வது பிறந்த நாள் வருகிறது. அந்த நாளில், அவர் பெயரில் ஒரு மாவட்டத்தை புரட்சித் தலைவரவர்கள் அறிவித்தால், தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுந்த நன்றி உணர்வோடு இருப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அது மட்டுமல்லாமல், நான் வேறு ஒன்றையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். 1½ ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல், நகராட்சித் தேர்தல் ஆகியவற்றை நம்முடைய அரசு நடத்தியது. இட ஒதுக்கீடு முறையில் நடத்த வேண்டும் என்று நாங்களும் பல்வேறு பிரதிநிதிகளும் வலியுறுத்தினோம். சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக, எதிர்க் கட்சிகள் கேட்டதன் காரணமாக, இட ஒதுக்கீடு இல்லாமலேயே தேர்தலை நடத்தி இருக்கின்றார்கள். சமீபத்திலே பத்திரிகையிலே படித்திருக்கலாம். ஆந்திர மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி இருக்கின்றார்கள். இட ஒதுக்கீடு தந்து தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். கர்நாடகாவிலும் நடத்தியிருக்கின்றார்கள். ஆனால் தமிழகத்திலே மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இல்லாமலேயே இன்றைக்கு தேர்தல் நடந்திருக்கிறது. ஓராண்டு காலமாக உள்ளாட்சி அமைப்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. நான் இங்கே ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தல்கள் இட ஒதுக்கீடு இல்லாமல் நிகழ்ந்தது என்பது மிகுந்த வருத்தத்திற்குரியதாகும். எனவே இட ஒதுக்கீடு இல்லாமல் நடந்த தேர்தல்களை, அதனாலே வந்திருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளை, பொறுப்பாளர்களை இந்த அரசு ரத்து செய்து உள்ளாட்சி அமைப்புகளை

[திரு. கு. தமிழரசன்] [1987 மார்ச் 26

கலைத்து மீண்டும் இட ஒதுக்கீடு வைத்து தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். 1½ கோடி மக்களின் சார்பாக இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம், நான் சார்ந்திருக்கின்ற மாவட்டம். அது மிகப் பெரிய மாவட்டம். இன்றைக்குக்கூட அங்கு தண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. எனவே வட ஆற்காடு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். 21 சட்ட மன்ற தொகுதிகளை உள்ளடக்கிய மாவட்டம். அந்த மாவட் டத்தில் ஒரு பல்கலைக் கழகம்கூட இல்லாமல் இருப்பது ஏமாற் றத்தை அளிப்பதாக இருக்கின்றது. வேலூரைத் தலைநகராகக் கொண்டு, ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்து அந்த பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கார் பல்கலைக் கழகம் என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பேரணாம்பட்டு தொகுதி. அது ஆந்திர மாநில கர்நாடக மாநில எல்லைகளை ஒட்டிய பகுதியாக இருக்கின்றது. மலைப் பகுதிகள், காட்டுப்பகுதிகள் உள்ள பகுதி. அங்கே ஒரு பெரிய தொழிற்சாலை இல்லாமல் இருக் கின்றது. அது மிகுந்த ஏமாற்றமாக இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியிலே ஒரு பெரிய தொழிற்சாலை அமைப் பதற்கு அரசு திட்டமிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே நிறைய தனியார் டேனரிஸ் இருப்பதால் அங்கே இருக் கின்ற குடிநீர்கெட்டுப்போய் எல்லாம் உப்பு நீராக மாறியிருக் கிறது. 60 கிலோ மீட்டர் அளவுக்கு யாரும் நல்ல தண்ணீர் அருந்த முடியாமல் இருக்கிறார்கள். அங்கே நீர் உப்பு தண்ணீராக மாறியிருக்கிறது. எனவே அங்கே இருக்கின்ற கிராம மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த அரசு சில செயல் திட்டங்களை வகுத்து அந்த மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 26]

80 கிலோ மீட்டர் நீளம் உள்ள ஒரு தொகுதியிலே தீயணைப்பு நிலையம் கூட இல்லை. நான் பல சந்தர்ப்பங்களிலே வலியுறுத் திக்கூட சொல்லியிருக்கிறேன். தீயணைப்பு நிலையம் இல்லாத நிலையிலே, கடந்த 2 நாட்களுக்கு முன்னாலே ஒரு கிராமத்தில், பெரியவணிகம் என்ற கிராமத்திலே ஒரு பெரிய தீ விபத்து நிகழ்ந்து 75 குடிசைகள் சாம்பலாகி அங்கே இருக்கிற வீட்டுப் பொருள்கள் எல்லாம் சாம்பலாகி இருக்கின்றன. அநதப் பகுதி மக்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தை வைப்பதோடு, அங்கே பொருள்கள், குடிசைகள் எரிந்து போய் இருக்கின்ற குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக் கின்ற வகையிலே அரசு மீண்டும் தாட்கோ மூலமாகவோ அல்லது தனி திட்டங்கள் மூலமாகவோ அந்த 75 குடும்பங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தீக்குச்சி தயாரிப்பவர்கள் சிறிய குடிசைத் தொழிலில் ஈடுபட் டிருக்கின்றார்கள். குடியாத்தம் பேரணாம்பட்டு போன்ற பகுதி களில் இருப்பவர்களில் பலர் தீக்குச்சி தயாரிப்பதில் ஈடுபட்டிருக் கின்றார்கள். 500-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக் கின்றன. அரசு அந்த குடிசைத் தொழிலுக்கு வரியை குறைத் திருக்கின்றது. அந்தத் தீக்குச்சி தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் சார்பாக அதனை நான் உண்மையாகவே மகிழ்ச்சியோடு வரவேற்று என் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்காக ஒரு சிறப்பு, தனி ஒதுக்கீட்டை இந்த சந்தர்ப்பத்திலே இல்லாவிட்டாலும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், துணை மானிய கோரிக்கையிலேயாவது ஒதுக் கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட திட்டத்தை அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது. அதை அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக் கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நா (27—3—1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.59 மணிக்கு ஒத்திவைக் பெற்றது.

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

ஏதுமில்லை.

சென்னை-600 008
136508

D

V211,31 N87

N87.351

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1,
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8,

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore 10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Vidyaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

©

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.